முதியோர் மற்றும் சிறுவர்தின சிறப்பிதழ்

வியாழக்கிழமை 29 செப்டெம்பர் 2022

தமிழருவி வார இதழ் | Tamilaruvi Weekly

# தமிழருவி



முதியோர் மற்றும் சிறுவர் தினம் ஒக்டோபர் 1

அருவி: 02 | சாரல்: 36

தமிழின் தலைநிமிர்வு



## அந்திம காலத்தில் அன்பை நாடும் முதியோர்!

## சிறுவர்களின் வாழ்வுரிமை அழைப்படை உரிமையே!

## முதுமையில் வறுமை! தீர்வை தேடும் தேசமிது...

## ஒருவேளை உணவுக்காய் ஓயாத போராட்டம்!

இலங்கையில் அதிகரிக்கும் சிறுவர்களின் மந்தபோசனை

## பாழாங்கிணறுகளாகிறதா பள்ளிக்கூடங்கள்?

# இந்தியப் பிரதமர் மோடியுடன் ஜனாதிபதி ரணில் பேச்சு

## கடன் மறுசீரமைப்பு குறித்து விரிவாக ஆராய்ந்தனர்



இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய பிரதமர் நரேந்திர மோடியை புதன்கிழமை சந்தித்து இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார். டோக்கியோவில் உத்தியோகபூர்வமற்ற முறையில் இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றன.

முன்னாள் ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபேயின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்வதற்காக சென்றிருந்த நிலையிலேயே இலங்கை - இந்தியத் தலைவர்களுக்கிடையிலான இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றன.

சுமார் 10 நிமிடங்கள் நீடித்த இந்த சந்திப்பின் போது, ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாகப் பதவியேற்றதற்கு இந்தியப் பிரதமர் வாழ்த்துக்களைத் தெரிவித்ததோடு, இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி குறித்தும் கலந்துரையாடியதாக கலந்துரையாடலில் கலந்துகொண்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

மோடியும் ரணில் விக்கிரமசிங்கவும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு குறித்து விவாதித்தார்கள். அத்துடன், சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் பேச்சுக்கள் மற்றும் பேச்சுவார்த்தைகளின் தற்போதைய நிலை குறித்தும் இந்தியப் பிரதமர் மோடி கேட்டறிந்தார்.

ரணில் விக்கிரமசிங்கவினால் இது தொடர்பில் விளக்கமளித்த பின்னர், மேலும் இந்திய முதலீடுகளைக் கோரினார். அதற்கு இந்தியப் பிரதமர் சாதகமாக பதிலளித்தார் என்றும் இந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை விடுவிப்பதற்காக இலங்கையில் இந்தியா தனது முதலீடுகளை அதிகரிக்கும் என்று இந்தியப் பிரதமர் இதற்குப் பதிலளித்தார்.

# பாதுகாப்பு வலயப் பிரகடனத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் மனு

## ஐக்கிய மக்கள் சக்தி தாக்கல் செய்தது

இலங்கை அதிபர் மாளிகை உட்பட கொழும்பில் உள்ள பல முக்கிய இடங்களை அதி உயர் பாதுகாப்பு வலயங்களாக பெயரிட்டு பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட வர்த்தமானியை செல்லுபடியற்றதாக்குமாறு கோரி ஐக்கிய மக்கள் சக்தி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த மனுவை தாக்கல் செய்தனர். அத்துடன், சோஷலிச இளைஞர் சங்கமும் முன்னதாக இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக மனுமொன்றை தாக்கல் செய்தது.

இதேவேளை, இந்த வர்த்தமானியை செல்லுபடியற்றதாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் குறித்து ஆராயுமாறு அதிபர் ரணில் விக்ரமசிங்க சட்டமா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் குழுவினால் முன்வைக்கப்பட்ட உண்மைகள் மற்றும் பரிந்துரைகளை கருத்திற்கொண்டு அதிபர் இந்த வர்த்தமானியை அண்மையில் வெளியிட்டிருந்தார்.

எவ்வாறாயினும், இந்த வர்த்தமானி மூலம் கொழும்பின் மத்திய பொருளாதார வலயத்தில் வர்த்தக நடவடிக்கைகளுக்கு கடும் பாதிப்பு ஏற்படும் என பொருளாதார நிபுணர்கள் குழு ஜனாதிபதியிடம் உண்மைகளை முன்வைத்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. அதன்படி, இந்த வர்த்தமானியை செயலற்றதாக்குவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாறாக, புலனாய்வு அமைப்புகளை ஒருங்கிணைத்து விசேட பாதுகாப்பு வேலைத்திட்டத்தை தயாரிக்குமாறு அதிபர் ரணில் விக்ரமசிங்க பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

# திலீபனை நினைவேந்தியவர்களை சிறைகளில் அடைக்க வேண்டும்

## முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச சீற்றம்



மரணித்த விடுதலைப் புலிகள் அமைப்பின் பயங்கரவாதியான திலீபனை வடக்கு, கிழக்கில் பகிரங்கமாக நினைவேந்தியவர்களை உடனடியாகக் கைதுசெய்து சிறையில் அடைக்க வேண்டும் என அரசிடம் வலியுறுத்தியுள்ளார் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்தபோது, தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த நாட்டில் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பு ஆகும். இந்த அமைப்பில் இருந்து மரணித்தவர்களை யாராவது பகிரங்கமாக நினைவுகூர்ந்தால் அவர்களைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

மரணித்த புலிப் பயங்கரவாதியான திலீபனை வடக்கு - கிழக்கில் 12 நாட்கள் தமிழ் மக்கள் பகிரங்கமாக நினைவேந்தியுள்ளார்கள். திலீபனின் படத்தைத் தாங்கிய ஊர்திப் பவனிகளும் வீதிகளில் வலம் வந்துள்ளன என்றும் தெரிவித்த விமல் வீரவன்ச, சிங்கள மக்களைச் சினமூட்டும் வகையில் தமிழ் மக்களும், தமிழ் அரசியவாதிகளும் நடந்துகொண்டுள் ளார்கள் என்றும் குற்றஞ்சாட்டினார்.

சமூக வலைத்தளங்களில் கூட திலீபனைத் தமிழ் இளைஞர்கள் நினைவேந்தியுள்ளார்கள் இவ்வாறானவர்களை அடையாளம் கண்டு அவர்களைக் கைதுசெய்து சிறையில் அடைக்க வேண்டும். பாதுகாப்பு அமைச்சு இந்த விடயத்தில் மிகவும் அக்கறையுடன் செயற்பட வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச வலியுறுத்தினார்.

# பயங்கரவாதப் பட்டியலிலிருந்து புலிகள் அமைப்பை நீக்கமுடியாது

## மனுவை தள்ளுபடி செய்த மலேசிய நீதிமன்றம்

தமிழீழ விடுதலைப்புலிகளை பயங்கரவாதப் பட்டியலில் இருந்து நீக்கவேண்டும் என்று கோரிய மனுவை விசாரணை செய்ய வேண்டும் என்று கோரி, வாடகை வாகன சாரதி ஒருவரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை, மலேசிய பிராந்திய நீதிமன்றம் ஒன்று, இன்று வியாழக்கிழமை தள்ளுப்படி செய்தது.

விவாதங்களை அடுத்து பொது நலன் தொடர்பான விடயம் என்ற அடிப்படையில் மூன்று நீதிபதிகளை கொண்ட நீதிமன்றம் இந்த மனுவை தள்ளுபடி செய்துள்ளது. மனு தொடர்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், நீதிமன்றத்தின் சட்ட வரம்புகளை பூர்த்தி செய்யவில்லை என்று நீதிபதிகள் தமது நிராகரிப்புக்கு காரணம் காட்டினர்.

பணமோசடி தடுப்பு, பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் நிதி வருவாய் தொடர்பான சட்டத்தின்கீழ் உள்துறை அமைச்சரின் அதிகார வரம்பு தொடர்பில் மனுதாரர் சட்டத்தரணிகள், கேள்வி எழுப்பியிருந்தனர்.

முன்னதாக தமிழீழ விடுதலைப் புலிகளை, பயங்கரவாத பட்டியலில் இருந்து நீக்குவதற்கான மனுவினை மீள்பரிசீலனைக்காக, 2020 ஆண்டு பெப்ரவரி 6 ஆம் திகதியன்று மனுத்தாரர் பாலமுருகன், நீதிமன்ற ஆணையை பெற்றார். எனினும் 2020, செப்டம்பர்7 ஆம் திகதியன்று மேல் நீதிமன்றம் இந்த மனுவை நிராகரித்தது.

இதனையடுத்து மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டபோதும், அதிலும் மனுவானது நிராகரிக்கப்பட்டது. இந்தநிலையில் கடந்த 20ஆம் திகதியன்று தமது மேன்முறையீட்டை தொடரக்கோரி மனுத்தாரர் பிராந்திய நீதிமன்றில் தமது மனுவை தாக்கல் செய்தார்.

தமது மனுவில் மலேசியாவின் உள்துறை அமைச்சர் உட்பட்டவர்களை பிரதிவாதிகளாக குறிப்பிட்ட மனுதாரர், வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான தகவல்கள் செல்லாது என்றும், இது கூட்டாட்சி அரசியலமைப்புக்கு முரணானது எனவும் குறிப்பிட்டிருந்தார்.

ஏற்கனவே 2019 இல் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவளித்ததாக கூறப்பட்ட மலேசியாவின் காவல் துறையினரால் கைது செய்யப்பட்ட 12 பேரில் பாலமுருகனும் அடங்கியிருந்தார். எனினும் 2020 இல் பாலமுருகன் உட்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை மலேசிய நாட்டின் அப்போதைய சட்டமா அதிபர் விலக்கிக்கொண்டார்.

# கொழும்பு வந்தார் சுப்பிரமணியன் சுவாமி

## மகிந்தவின் இல்லத்து நவராத்திரியில் பங்கேற்றார்





இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு புதன்கிழமை காலை கொழும்பு வந்த இந்திய ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் நடைபெற்ற நவராத்திரி நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார்.

முக்கிய அரசியல்வாதிகள் சிலர் உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார்கள்.

மகிந்த ராஜபக்ஷவின் மிக நெருங்கிய நண்பரான சுப்பிரமணியன் சுவாமி, நிகழ்வின் இறுதியில் மகிந்த ராஜபக்ஷவின் கைகளை இறுகப் பற்றிக்கொண்டு என்ன நெருக்கடி வந்தாலும் உங்களுடன் நான் உறுதியாக நிற்பேன் எனக் கூறிய போது மகிந்த ராஜபக்ஷ உணர்ச்சிவசப்பட்டதாக நிகழ்வில் கலந்துகொண்டிருந்தவர்கள் தெரிவித்தார்கள். இதேவேளை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் சுப்பிரமணியன் சுவாமி சந்தித்துப்பேசினார். இதன்போது என்ன பேசப்பட்டது என்பதையிட்டு எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

பிரதமர் தினேஷ் குணவர்த்தனவையும் சுப்பிரமணியன் சுவாமி சந்திக்கவுள்ளார்.

# ஐரோப்பிய ஒன்றியம் மனிதாபிமான உதவியாக 1.5 மில்லியன் யூரோக்களை வழங்கியுள்ளது!

இலங்கையில் மில்லியன் கணக்கான மக்களைப் பாதித்துள்ள சமூக - பொருளாதார நெருக்கடிக்குப் பதிலளிக்கும் வகையில் ஐரோப்பிய ஒன்றியம் மனிதாபிமான உதவியாக 1.5 மில்லியன் யூரோக்களை வழங்கியுள்ளது.

புதிய ஐரோப்பிய ஒன்றிய நிதியானது, உணவு, சுகாதாரம், கல்வி மற்றும் பாதுகாப்பு போன்ற மக்களின் அடிப்படைத் தேவைகளுக்குப் பதிலளிக்க பல்நோக்கு பணத் தலையீடுகளில் முக்கியமாக கவனம் செலுத்துகிறது.

மனிதாபிமான உதவி என்பது உடனடி ஆதரவு தேவைப்படும் மிகவும் பாதிக்கப் படக்கூடிய குடும்பங்களை முன்னிலைப் படுத்துகிறது. இலங்கை மக்கள் நீண்டகால சமூக - பொருளாதார நெருக்கடியின் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர், இது வளங்களை பெருகிய முறையில் தீர்ந்துவிடுகிறது மற்றும் மில்லியன் கணக்கான மக்களின் உணவுப் பாதுகாப்பை அச்சுறுத்துகிறது.



இந்த புதிய மனிதாபிமான நிதியுதவியுடன், ஐரோப்பிய ஒன்றியம் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு அதன் ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்துகிறது என நெருக்கடி முகாமைத்துவத்திற்கான ஆணையாளர் ஜெனிஸ் லீனாரசிக் தெரிவித்துள்ளார்.




**செய்தி:-**

அலசல் அம்சவல்லி தாமரைக்கோபுரத்தில் ஏறிப்பார்த்தால் என்ன தெரிகிறது?

**சஜித் பிரேமதாச**

கழுத்தளவு கடன்தான்
வேறென்ன தெரியுற?

# திலீபனின் தூபியை அன்று படையினர் அழித்தார்கள் எஞ்சிய நினைவுகளை இன்று நாமே அழிக்கிறோம்

## ஐங்கரநேசன் ஆதங்கம்

திலீபனின் நினைவேந்தலில் ஏற்பட்ட குழப்பங்களும் அதையொட்டிய ஊடகச் சந்திப்புகளும் பேரினவாதிகளுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. ஆனால், தமிழ் மக்கள் இவற்றால் வெட்கித் தலைகுனிந்துள்ளார்கள். திலீபனின் தூபியை அன்று படையினர் அழித்தார்கள். அவர்களால் மக்கள் மனங்களிலிருந்து நினைவுகளை அழிக்க முடியவில்லை. ஆனால், எஞ்சிய நினைவுகளை இன்று நாமே அழிக்கிறோம் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

தியாக திலீபன் நினைவேந்தல் குழப்பங்கள் தொடர்பாக பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தில் தங்கள் இன்னுயிர்களை ஈந்தவர்கள் எந்நாளும் நினைவுகூரப்படவேண்டியவர்கள். இது வெறுமனே நினைவுகளை மனத்திரையில் மீட்கும் சடங்குகள் அல்ல. மாறாக, அவர்களின் போராட்ட நியாயங்களையும் போராட்டத் தியாகங்களையும் அடுத்த தலைமுறைகளுக்குக் கடத்துகின்ற உயிர்ப்பான அரசியற் செயற்பாடுகளுமாகும்.

அரசியற் காரணங்களுக்காகப் போராடி மடிந்தவர்களின் நினைவேந்தல்களில் அரசியல் நீக்கம் செய்வது அவர்களின் போராட்ட நியாயங்களைக் குழிதோண்டிப் புதைப்பதாகும். இத்தகைய நினைவேந்தல்களில் இனத்துவ அரசியலைத் தாண்டிக் கட்சி அரசியல் மேலோங்குவது போராட்டத் தியாகங்களைச் சூறையாடுவதாகும். ஆனால், துரதிர்ஷ்டமாகத் தமிழ்த்தேசிய அரசியற் களத்தில் இன்று இவையே அதிகம் நிகழ்ந்தேறுகின்றன.

நினைவேந்தல் குழப்பங்களுக்கு யார் காரணம் என்ற கேள்விக்கும் அப்பால் இவை நிகழ்ந்திருக்கவே கூடாது என்பதுதான் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களினதும் வேதனைக் குரலாக உள்ளது. கட்சி வேறுபாடுகள் தாண்டிப் பேரினவாதிகள் ஒன்றுபட்டு நினைவேந்தியவர்களைக் கைதுசெய்யுமாறு கொக்கரிக்கிறார்கள். ஆனால், நாமோ பொது நினைவேந்தல்களிற்கூட ஒன்றுபட முடியாமல் தமிழ்த்தேசியத்தை மழுங்கடித்து வருகிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழர் பகுதியை விட்டுச்சென்ற சர்வதேச மைதானம்

இலங்கை கிரிக்கட் சபையின் பல கோடி நிதியில் அமைக்கப்படும் சர்வதேச கிரிக்கட் மைதானம் வவுனியா ஈரப்பெரியகுளத்தில் அமைப்பதற்கான காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் உள்ள விவசாய பண்ணைக்கு சொந்தமான பயன்படுத்தப்படாத பகுதியை மைதானத்திற்கு வழங்குமாறு வவுனியா துடுப்பாட்ட சங்கம் வலியுறுத்திய நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களுக்கும் எழுத்து மூலம் கடிதம் வழங்கப்பட்டிருந்தது.

எனினும் இது தொடர்பில் அவர்களும் நடவடிக்கை எடுக்காத நிலையில் தற்போது வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஈரப்பெரியகுளத்தில் பிரதேச செயலகத்தில் காணி ஒதுக்கப்பட்டு மைதானம் அமைப்பதற்கான பணிகள் இடம்பெற்று வருகின்றது.

இதைவேளை ஓமந்தையில் காணி ஒதுக்கீடு செய்யலாம் என தெரிவிக்கப்பட்ட போதிலும் இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்காத நிலையும் காணப்பட்ட மயும் குறிப்பிடத்தக்கது.

# திலீபனின் நினைவேந்தலுக்கு அரசு தடை விதிக்காதது ஏன்?

## சரத் வீரசேகர கேள்வி

கொழும்பின் சில பிரதேசங்களை அதியுயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தி முன்னர் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்வது தொடர்பில் ஆராயுமாறு இலங்கை அதிபா் ரணில் விக்ரமசிங்க சட்டமா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

உயர்பாதுகாப்பு வலயங்கள் வர்த்தகங்களுக்கு பாதகமான பாதிப்பை ஏற்படுத்துவதாக சில பொருளாதார நிபுணர்கள் தெரிவித்ததையடுத்து அவர் இந்த முடிவை எடுத்துள்ளதாக ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸிற்கான தனது விஜயங்களை முடித்துக் கொண்டு அதிபா் நாடு திரும்பிய பின்னர் வர்த்தமானி அறிவித்தல் இரத்து செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கொழும்பில் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் புலனாய்வுப் பிரிவுகளின் உதவியுடன் புதிய மாற்றுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


பாதுகாப்பு நிபுணர்கள் சிலரின் ஆலோசனைக்கு அமைய இலங்கை அதிபா் சில நாட்களுக்கு முன்னர் கொழும்பில் சில பகுதிகளை அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆடைகள் மற்றும் தோழிற்றுறை ஏற்றுமதியில் வீழ்ச்சி!

நான்காவது காலாண்டில் ஆடைகள் மற்றும் தொழிற்றுறை ஏற்றுமதியில் வீழ்ச்சி ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாக சுதந்திர வர்த்தக வலய முதலீட்டாளர்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியே இதற்குப் பிரதான காரணம் என அந்த சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தம்மிக்க பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் சுதந்திர வர்த்தக வலயத்தில் அமையப்பெறாத சிறிய மற்றும் நடுத்தர ஆடைத்தொழிற்சாலைகள் மற்றும் தொழிற்றுறை ஏற்றுமதி நிறுவனங்கள் பல மூடப்பட்டுள்ளன.



இதற்கமைய 15 நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதாகவும், சில நிறுவனங்கள் உற்பத்தியைக் கைவிட்டுள்ளதாகவும் சுதந்திர வர்த்தக வலய முதலீட்டாளர்களின் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தம்மிக்க பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

# மன்னார் சர்வோதய அனைத்து ஊழியர்களும் ஒரே மாதத்தில் பதவி விலகல்

**மன்னார் நகர் நிருபர்**

மன்னார் மாவட்டத்தில் செயற்பட்டு வரும் சர்வோதய நிறுவனத்தில் பணியாற்றும் நான்கு ஊழியர்களும் மன்னார் சர்வோதயத்தில் இடம் பெறும் பல்வேறு ஊழல் செயற்பாடுகளை முன்னிறுத்தி பதவி விலகியுள்ளனர்

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்;

இலங்கையில் செயற்பட்டு வரும் மிகப்பெரிய அரச சார்பற்ற நிறுவனமான சர்வோதயம் மன்னார் சர்வோதயத்தின் ஊடாக மாவட்ட ரீதியில் பல செயற்திட்டங்கள் முன்னெடுத்து வருகின்ற நிலையில் அவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகளை மன்னார் சர்வோதய மாவட்ட பணிப்பாளர் ஒழுங்கான முறையில் விடுவிப்பதில்லை எனவும்

அதே நேரம் தொண்டு நிறுவனங்களினால் வறிய குடும்பங்களுக்கு வழங்கப்பட்டும் வாழ்வாதார உதவிகளை கூட ஒழுங்காக வழங்குவதில்லை எனவும் இது தொடர்பாக பணியாற்றும் ஊழியர்கள் கேள்வி எழுப்புகின்ற போது முன்னுக்கு பின் முரணான கருத்துக்களை தெரிவிப்பதாகவும் அதே நேரம் பழிவாங்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவதாகவும் உத்தியோகத்தர்களுக்குள் முரண்பாடுகளை தோற்றுவிப்பதாகவும் தெரிவித்து அணைத்து ஊழியர்களும் பதவி விலகியுள்ளனர்.

மேலும் தொடர்ந்து பிழைகளை சுட்டிக்காட்டும் ஊழியர்களை பழிவாங்குவங்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதாகவும் அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி விரிவான கடிதம் ஒன்றை சர்வோதய நிறுவனத்தின் தேசிய காரியாலயத்திற்கு அனுப்பி வைத்துள்ளதுடன் மாவட்ட காரியாலயத்தில் பதவி விலகல் கடிதங்களையும் கையளித்துள்ளனர்.

## தமிழ் ஒலை

மின்னஞ்சல்: aruvitamil812@gmail.com
வாட்ஸ் ஆப் இலக்கம்: 0094 768 320 733


### பொல்லூன்றும் வயதில் இடறவைக்கும் பொருளாதாரம்!

**இலங்கையில்** பத்தில் நான்கு குடும்பங்கள் உணவுக்கான நெருக்கடியை எதிர்கொள்வதாகவும் மூன்று வேளை உணவைத் தவிர்ப்பதாகவும் உலக உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது. இதேவேளை மாபெரும் உணவு நெருக்கடியை இலங்கை எதிர்கொள்ளும் என்ற எதிர்வுகூறலையும் உலக உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது.

முதியவர்களைப்பொறுத்தவரை அந்திமகாலத்தில் பெரும்பொருளாதார சுழல் தற்போது அவர்களை ஆட்கொள்கிறது. ஒய்வூதியம் பெறாதவர்கள் நிலைமையோ மிகுந்த கவலைக்குரியது. மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் அவர்கள் பெரும் துன்பங்களை அனுபவிக்கிறார்கள். உபகார சம்பளத்தின் அளவும் போதுமானதல்ல.

சிறுவர்களுக்கு போதுமான உணவு ,பாடசாலை உபகரணங்கள்,போக்குவரத்து என்பவை போதுமான அளவில் கிடைக்காததால் விரக்தி அடைந்துள்ளனர். ஒரு நாட்டில் மிக முக்கியமாக பாதுகாப்பும் அரவணைப்பும் போசாக்குணவும் தேவைப்படும் வயதுக்குழுவினர் சிறுவர்களும் முதியவர்களுமே. அவர்கள் தற்போது முற்றாக கைவிடப்பட்டுள்ளனர். தற்போது நாடுமுழுவதும் சிறுவர்களையும் , முதியவர்களையும் உள்ளடக்கிய வறுமை வலயங்கள் உருவாகிவருகின்றன. ஆனால் இந்த இழிநிலைக்கு குடிமக்களை உருவாக்கியவர்களை பாதுகாக்க உயர்பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்படுவது இந்த நாட்டிற்கு ஏற்பட்ட பெரும் சாபக்கேடாகும்!.

**எதிர்வரும் ஒக்டொபர் முதலாம் திகதி கனத்த மனதோடு நாட்டில் வாழும் சிறுவர்களுக்கும் முதியவர்களுக்கும் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறோம்.**



நன்றி: Dailymirrir

# தேர்தல் வியூகத்தில் தேசிய பேரவை!

**பவித்திரா**



**தேசிய** சபை என்ற பெயரில் அரசியல் கட்சிகள் அனைத்தையும் உள்ளடக்கிய சபை ஒன்றை அமைப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமைலான அரசாங்கம் முன்னெடுத்த முயற்சி பிசுபிசுத்துப்போயுள்ளது. எதிர்க்கட்சிகள் அனைத்துமே இதில் தாம் பங்கேற்கப்போவதில்லை என்பதை உறுதியாகத் தெரிவித்துவிட்ட நிலையில், தேசிய சபை என்பது தற்போதைய அமைச்சரவையைப் போல பொது ஜன பெரமுனையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அமைப்பாக மட்டும்தான் இருக்கப் போகின்றது.

இலங்கையில் அரசியல் மாற்றம் ஒன்றை ஏற்படுத்திய அரகலய எனப்படும் காலிமுகத்திடல் போராட்டக்காரா்களின் கோரிக்கைகளில் ஒன்றை நிறைவேற்றுவதாகக் கூறித்தான் இதனை அரசாங்கம் இப்போது அமைக்கிறது. பாராளுமன்றத்துக்கு வெளியால், நாட்டின் நிர்வாகம் உட்பட முக்கிய பொறுப்புக்களை நிர்வகிக்கக்கூடிய சபை அல்லது அமைப்பு ஒன்று அவசியம் என்ற கருத்து அரகலய இளைஞர்களால் முன்வைக்கப்பட்டது.

பாராளுமன்றத்தில் நம்பிக்கை இழந்த நிலையில்தான் இந்தக் கோரிக்கை அவா்களால் முன்வைக்கப்பட்டிருந்தது. அரகலய இளைஞர்களையும், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாக இவ்வாறான கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பது அவர்களுடைய எதிர்பார்ப்பாக இருந்தது. அரசாங்கத்தை கண்காணிப்பது முக்கிய விடயங்



களில் வழிநடத்துவது போன்றன இவர்களுடைய பணியாக இருக்க வேண்டும் என்ற கருத்துடன்தான் இந்தக் கோரிக்கை அவா்களால் முன்வைக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கையை ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் ஆரம்பத்தில் கணக்கில் எடுக்கவில்லை. இப்போது அரகலய போராட்டக்காரா்கள் தொடர்ச்சியாக வேட்டையாடப்பட்டு பலீனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இதனை நடைமுறைக்குக்கொண்டுவர ரணில் திட்டமிட்டமைக்கு வேறு காரணங்கள் உள்ளன.

வரலாற்றில் என்றுமே காணாத பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித்தவிக்கும் இலங்கையைக் காப்பாற்ற வெளிநாட்டு உதவிகள்தான் இன்று அவசியமாக உள்ளன. இலங்கையில் இருக்கக்கூடிய அரசாங்கம் ஸ்திரமற்றதாகவும், ஆட்டம் காணும் ஒன்றாகவும் இருக்கும் நிலையில் வெளிநாடுகளின் உதவிகளைப் பெருமளவுக்கு எதிர்பார்க்க முடியாது. வெளிநாடுகளும் பிரதானமாக அதனைத்தான் எதிர்பார்க்கின்றன. அதனைத்தான் வலியுறுத்துகின்றன. அதாவது, ஸ்திரமான அரசாங்கம் ஒன்று இருந்தால்தான் நிதி உதவிகளை வழங்க

மிகுதி 23 ஆம் பக்கத்தில்...



# பாகிஸ்தானுக்கு இராணுவ தளபாடங்களை விற்க அமேரிக்கா ஒப்புதல்

அமேரிக்கா2018-க்குப் பிறகு முதன்முறையாக, பாகிஸ்தான் விமானப் படைக்கு எஃப்-16 விமானத்தையும், கடற்படை நிலைத்தன்மைக்காக 450 மில்லியன் டொலர் செலவில் இராணுவ தளவாடங்களையும் விற்பனை செய்வதற்கு அமெரிக்கா ஒப்புதல் அளித்திருக்கிறது.

இது தொடர்பாக நியூயார்க்கில் உயர்மட்ட ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் உரையாற்றிய இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய் சங்கர், பாகிஸ்தானுக்கு எஃப்-16 போர் விமானங்கள் வழங்கும் அமெரிக்காவின் நடவடிக்கை குறித்து விமர்சித்திருந்தார்.


மேலும், பாகிஸ்தானுக்கு வழங்கப்படும் எஃப்-16 போர் விமானங்கள் எங்கு, யாருக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகின்றன என்பது அனைவருக்கும் தெரியும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் விதமாக அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ், செய்தியாளர் சந்திப் பின்போது,

இந்தியா, பாகிஸ்தானுடனான எங்கள் நாட்டின் உறவுகள் வெவ்வேறு முக்கியத்துவம் வாய்ந்தவை. பாகிஸ்தானுடனான எங்கள் உறவும், மறுபுறம், இந்தியாவுடனான எங்கள் உறவும் இரண்டும் கூட்டாளிகள் என்ற அடிப்படையில்தான் அமைந்திருக்கின்றன.

மேலும், எங்களுடையது ஒவ்வொன்றிலும் வெவ்வேறு முக்கிய தொடர்புகள் இருக்கின்றன. நாங்கள் இருவரையும் பங்காளிகளாகப் பார்க்கிறோம், ஏனென்றால் நாங்கள் பல சந்தர்ப்பங்களில் பகிர்ந்து கொள்ளப்பட்ட நலன்களைக் கொண்டுள்ளோம். அதனால், இந்தியாவுடன் நாங்கள் வைத்திருக்கும் உறவு வேறு, பாகிஸ்தானுடன் நாங்கள் வைத்திருக்கும் உறவு வேறு என விளக்கமளித்திருக்கிறார்.

# பசுபிக் பெருங்கடலில் ரீப் எரிமலை வெடிப்பு



அவுஸ்திரேலியாவில் இருந்து வெகு தொலைவில் தென்மேற்கு பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள ஹோம் ரீப் எரிமலை, இந்த மாத தொடக்கத்தில் வெடித்து சிதற தொடங்கியது.

மத்திய டோங்கா தீவுகளில் அமைந்துள்ள இந்த எரிமலை, நீராவி மற்றும் சாம்பல் ஆகியவற்றைக் கக்கத் தொடங்கியது, அவை கடலில் கலந்து நீரின் நிறத்தை மாற்றிவிட்டன.

இந்த எரிமலை வெடித்த பதினொரு மணி நேரத்திற்குப் பிறகு, பசிபிக் பெருங்கடலில் புதிய தீவு ஒன்று நீரின் மேற்பரப்பில் இருந்து வெளிப்பட்டது என்று நாசா புவி கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

செயற்கைக்கோள்கள் மூலம் இத்தீவின் படங்களை படம்பிடித்துள்ளது. செப்டெம்பர் 14 அன்று இத்தீவின் பரப்பளவு 4,000 சதுர மீற்றர் (1 ஏக்கர்) மற்றும் கடல் மட்டத்திலிருந்து 10 மீற்றர் (33 அடி) உயரத்தில் இருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

ஆனால் செப்டெம்பர் 20க்குள், இந்த தீவு 24,000 சதுர மீற்றர் (6 ஏக்கர்) பரப்பளவாக பெருகிவிட்டதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

நீருக்கடியில் அமைந்துள்ள நீர்மூழ்கி எரிமலைகள் வெடித்து சிதறும் போது உருவாக்கப்பட்ட தீவுகள் போன்ற அமைப்பு பெரும்பாலும் குறுகிய காலமே நீடித்திருக்கின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

# விண்கற்களின் பாதையை மாற்றும் ஆராய்ச்சியில் நாசா வேற்றியடைந்தது

எதிர்காலத்தில் பூமியின் மீது விண்கற்கள் மோதி பேரழிவை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, அவற்றின் பாதையை மாற்றியமைக்க முடியுமா என்பதை தெரிந்துகொள்வதற்காக அத்தகைய விண்கல் ஒன்றின் மீது செயற்கைக்கோள் ஒன்றை அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா செவ்வாய்க்கிழமை மோதச் செய்தது.

பூமியில் மிகப் பெரிய விண்கற்கள் மோதி மிகப் பெரிய அழிவை ஏற்படுவத்துவதற்கான அபாயத்தை தவிர்ப்பதற்காக நாசா விஞ்ஞானிகள் நீண்ட காலமாக ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனா். அதன் ஒரு பகுதியாக, பூமியை நோக்கி வரக்கூடிய விண்கற்களை திசைமாற்றுவதற்கான வழிமுறைகளையும் விஞ்ஞானிகள் தேடி வருகின்றனா்.

இந்த நிலையில், ஒரு பொருளை விண்கல்லின் மீது பலமாக மோதச் செய்வதன் மூலம் அதன் சுற்றுவட்டப் பாதையை மாற்றியமைக்க முடியுமா என்பதைத் தெரிந்து கொள்வதற்காக, 'தி டபுள் ஆஸ்டிராய்ட் ரிடைரக்ஷன் டெஸ்ட்' (டார்ட்) என்ற சோதனையை நாசா மேற்கொண்டது. அந்த சோதனை திட்டத்தின் கீழ், 160 மீட்டா் விட்டம் கொண்ட டிமார்ஃபோஸ் என்ற விண்கல் மீது செயற்கைக் கோளை மோதச் செய்ய முடிவு செய்யப்பட்டது.

அந்த விண்கல், டிடிமோஸ் என்ற 780 மீட்டா் விட்டம் கொண்ட மிகப் பெரிய விண்கல்லுக்கு நிலவாக சுற்றிவருகிறது.

இந்த நிலையில், டிமார்ஃபோஸ் மீது மோதுவதற்காக நாசா அனுப்பிய செயற்கைக்கோள் 10 மாதங்களுக்குப் பிறகு அந்த விண்கல் மீது செவ்வாய்க்கிழமை மோதிச் சிதறியது. இந்த மோதலையும் அதனைத் தொடா்ந்து ஏற்பட்ட மாற்றத்தையும் ஆய்வு செய்வதற்காக, இத்தாலிய விண்வெளி ஆய்வு நிறுவனம் தயாரித்த எல்ஐசிஐஏ கியூப் செயற்கைக்கோள், டார்ட் செயற்கைக்கோளுடன் இணைக்கப்பட்டிருந்தது. அது, டார்ட்டிலிருந்து கடந்த 11 ஆம் திகதி தனியாகப் பிரிந்துஅதனை பின்தொடா்ந்தது.

டிமார்ஃபோஸ் விண்கலம் மீது டார்ட் செயற்கைக்கோள் மோதுவதையும் அதனால் எழுந்த தூசி மண்டலத்தின் தன்மையையும் எல்ஐசிஐஏ கியூப் செயற்கோள் பதிவு செய்து பூமிக்கு நேரடியாக அனுப்பி வருகிறது.

இந்த சோதனை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, குறிப்பிட்ட விண்கல்லைக் குறிவைத்து, அதன் மீது வேண்டுமென்றே மோதச் செய்து, அதன்பாதையை மாற்றியமைக்கும் திறன் நாசாவுக்கு உள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நாசா நிர்வாக அதிகாரி பில் நெல்சன் கூறுகையில், 'பூமிப் பந்து பாதுகாப்பு தொடர்பான ஆய்வில் இதுவரை இல்லாத முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியை டார்ட் சோதனை கண்டுள்ளது. இது, ஒட்டுமொத்த மனித குலத்துக்கும் நன்மை பயக்கும் சோதனை திட்டம்ʼ என்றார்.

நார்ட் செயற்கைக்கோள் மோதலைத் தொடா்ந்து, டிடிமோஸை டிமார்ஃபோஸ் விண்கலம் சுற்றி வரும் வட்டப்பாதையில் எவ்வளவு மாற்றம் ஏற்பட்டுள்ளது, சுற்றும் வேகம் எவ்வளவு குறைந்துள்ளது என்பது குறித்து இன்னும் சில தினங்களுக்குப் பிறகுதான் உறுதியாகத் தெரிய வரும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனா்.

# வங்க தேசத்தில் படகுவிபத்து பலியானோர் எண்ணிக்கை 39 ஆக உயர்வு!



வங்கதேசத்தில் பிரசித்தி பெற்ற போதேஸ்வரி கோயிலுக்கு ஹிந்து பக்தா்களை ஏற்றிச் சென்ற படகு நதியில் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் பலியானவா்களின் எண்ணிக்கை 39 ஆக உயா்ந்துள்ளது.

இது குறித்து தீயணைப்பு படை அதிகாரியொருவா் திங்கள்கிழமை கூறியதாவது :

கொரோட்டா நதியில் ஞாயிற்றுக்கிழமை படகு விபத்து ஏற்பட்ட பகுதியில் நடைபெற்ற மீட்புப் பணிகளில் மேலும் பல சடலங்கள் மீட்கப்பட்டன. அதை அடுத்து, விபத்தில் பலியானவா்களின் எண்ணிக்கை 39 ஆக உயா்ந்துள்ளது என்றார் அவா்.

வங்கதேசத்தின் பஞ்சகா் மாவட்டத்தில் பல நூற்றாண்டுகள் பழைமையான போதேஸ்வரி கோயில் அமைந்துள்ளது. நவராத்திரி விழாவை முன்னிட்டு இந்தக் கோயிலுக்கு பக்தா்கள் சென்ற விசைப் படகு ஒன்று நதியில் கவிழ்ந்தது. இதில் உயிரிழந்தவா்களில் 11 சிறுவா்களும் 21 பெண்களும் அடங்குவா். இதுதவிர மேலும் 58 பேரைக் காணவில்லை என்று ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# மகனுக்காக வாடகைத்தாயானார் நான்சி!

உலகத்தில் இதுவரை நடந்திராத விசித்திரமான சம்பவங்கள் ஆங்காங்கே அரங்கேறி நம்மை ஆச்சரியத்திற்கு ஆளாக்கும். அதுவும் இன்றைய அறிவியல் வளர்ச்சி பெற்ற தொழில்நுட்ப யுகத்தில் நினைத்து பார்க்க முடியாத பல விஷயங்களும் சாத்தியமாகி வருகின்றன.

இது போன்ற ஒரு விநோத சம்பவம் ஒன்று அமெரிக்காவில் அரங்கேறியுள்ளது. நமது நாட்டில் 20-30 ஆண்டுகளுக்கு முன்னர் மாமியாரும், மருமகளும் ஒரே நேரத்தில் கர்ப்பமடைந்து குழந்தை பெற்ற சம்பவங்கள் எல்லாம் கூட நடந்துள்ளது. ஆனால், அமெரிக்காவில் தாய் ஒருவர் தனது மகன் மற்றும் மருமகளுக்காக கர்ப்பமடைந்து தனது பேரக் குழந்தையைதானே பெற்றெடுக்கவுள்ளார்.

அந்த பெண்ணின் பெயர் நான்சி ஹாவுக். அமெரிக்காவின் உடாஹ் பகுதியில் வசிக்கும் 56 வயதான நான்சிக்கு, 32 வயதில் ஜெஃப் என்பவர் மகனாக உள்ளார். ஜெஃப்புக்கு கேம்பிரியா என்ற பெண்ணுடன் திருமணமாகியுள்ளது. ஜெஃப் - கேம்ப்ரியா தம்பதிக்கு முதல் மகப்பேற்றின் போது வேரா மற்றும் அவ்யா என்ற இரட்டை குழந்தைகள் பிறந்துள்ளனர். தற்போது இந்த இரட்டையர்களுக்கு 3 வயது. இந்நிலையில், அடுத்த இரண்டாண்டுகளில் கேம்ப்ரியா மீண்டும் கர்ப்பமாகி டீசல் மற்றும் லூகா என்ற இரட்டையரை பெற்றெடுத்துள்ளார்.

இரண்டு இரட்டையரை பெற்றெடுத்த கேம்ரியாவுக்கு உடல் நலிவுற்ற நிலையில், வேறு வழியின்றி கர்ப்பப்பை எடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. மருத்துவரின் ஆலோசனை பேரில் கர்ப்பப்பை நீக்க அறுவை சிகிச்சையை மேற்கொண்டார் கேம்பரியா. இந்நிலையில், ஜெஃப், கேம்பரியாவுக்கு மேலும் குழந்தைகள் பெற வேண்டும் என ஆசை இருந்துள்ளது. கேம்ரியாவுக்கு கருப்பை இல்லாததால் கருத்தரிக்க முடியதா நிலை. எனவே, வாடகைத் தாய் மூலம் குழந்தை பெற இருவரும் முடிவெடுத்துள்ளனர்.

இந்த சூழலில் தான் ஜெஃப்பின் தாய் நான்சி ஒரு அதிரடி முடிவை எடுத்துள்ளார். தனது மகன், மருமகளுக்காக தானே வாடகைத்தாயாக மாற அவர் முன்வந்துள்ளார். இதை தனது மகன் ஜெஃப்பிடம் கூறிய போது, அவன் அதிர்ச்சி அடைந்ததாக கூறும் நான்சி, நான் எனது மகனுக்கு எப்படியாவது துணை நிற்க வேண்டும் என்ற இந்த முடிவை எடுத்தேன் என்றார். இந்த முடிவுக்கு தனது கணவர் ஜேசன், அதாவது ஜெஃப்பின் தந்தையும் துணை நின்றதாக நான்சி கூறியுள்ளார்.

56 வயதான நான்சி தற்போது மகனின் குழந்தையை வயிற்றில் சுமந்து வருகிறார். இப்படிப்பட்ட தன்னலமற்ற தாயை நான் அடைந்ததற்கு நன்றிக்கடன் பெற்றுள்ளேன் என்கிறார் ஜெஃப். தனது மகனின் குழந்தையை கருவில் சுமக்கும் நான்சி அந்த குழந்தைக்கு ஒரு வகையில் தாயாகவும் இருக்கிறார், பாட்டியாகவும் இருக்கிறார்.

## பி.எஃப்.ஐ. அமைப்புக்கு தடை

# சென்னையில் கண்காணிப்பைத் தீவிரப்படுத்த காவல்துறை ஆணையர் சங்கர் ஜிவால் உத்தரவு

பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா அமைப்பு மற்றும் அதன் துணை அமைப்புகளுக்கு மத்திய அரசு 5 ஆண்டுகள் தடை விதித்துள்ளதைத் தொடர்ந்து, சென்னையில் கண்காணிப்பைத் தீவிரப்படுத்த காவல்துறையினருக்கு சென்னை மாநகர காவல் ஆணையர் சங்கர் ஜிவால் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 2006-ம் ஆண்டில் தொடங்கப்பட்ட பாப்புலர் ஃப்ரன்ட் ஆஃப் இந்தியா (பிஎஃப்ஐ) அமைப்புக்கு இந்தியா முழுவதும் 24 மாநிலங்களில் கிளைகள் உள்ளன. பல்வேறு கலவரங்கள், படுகொலைகளில் இந்த அமைப்பின் நிர்வாகிகளுக்கு தொடர்பு இருப்பதாக புகார் எழுந்துள்ளது. இதன்பேரில், தமிழகம் உட்பட நாடு முழுவதும் 15 மாநிலங்களில் தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ), அமலாக்கத் துறை அதிகாரிகள் கடந்த 22-ம் தேதி திடீர் சோதனை நடத்தினர். அப்போது 45 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், நாடு முழுவதும் 2-வது முறையாக பிஎஃப்ஐ அலுவலகங்கள், நிர்வாகிகளின் வீடுகளில் நேற்றும் (செப்.28) சோதனை நடத்தப்பட்டது. டெல்லி, உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, குஜராத், கேரளா, கர்நாடகா, அசாம் ஆகிய 8 மாநிலங்களில் 8 மணி நேரத்துக்கும் மேலாக இந்த சோதனை நீடித்தது.

இந்நிலையில், பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா அமைப்புக்கு மத்திய அரசு ஐந்தாண்டுகள் தடை விதித்துள்ளது . இந்த தடை உடனடியாக அமலுக்கு வரும் என்றும் அறிவித்துள்ளது. பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா அமைப்பு மட்டுமின்றி, அதன் துணை அமைப்புகள் மற்றும் அதற்கு உதவும் அமைப்புகளுக்கும் ஐந்து வருடம் மத்திய அரசு தடை விதித்துள்ளது.



இந்த தடையைத் தொடர்ந்து பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியாவின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள புரசைவாக்கம் பகுதியில் ஏராளமான போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். பிஎஃப்ஐ அமைப்புக்கு தடை விதிக்கப்பட்டதன் காரணமாக, சென்னை முழுவதும் 4000 போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட மாநகர காவல்துறை ஆணையர் சங்கர் ஜிவால் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், காவல்துறை துணை ஆணையர்கள் அனைவரும் உஷார் நிலையில் இருக்கவும் உத்தரவிட்டுள்ளார். அதேபோல், பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தி, பாதுகாப்பைப் பலப்படுத்தவும் காவல்துறையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த தடையைத் தொடர்ந்து பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியாவின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள புரசைவாக்கம் பகுதியில் ஏராளமான போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். பிஎஃப்ஐ அமைப்புக்கு தடை விதிக்கப்பட்டதன் காரணமாக, சென்னை முழுவதும் 4000 போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட மாநகர காவல்துறை ஆணையர் சங்கர் ஜிவால் உத்தரவிட்டுள்ளார்.




மேலும், காவல்துறை துணை ஆணையர்கள் அனைவரும் உஷார் நிலையில் இருக்கவும் உத்தரவிட்டுள்ளார். அதேபோல், பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தி, பாதுகாப்பைப் பலப்படுத்தவும் காவல்துறையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# பி.எஃப்.ஐ.-யின் கோட்டையாக தமிழகம் மாறிவருகிறது

## மத்திய அமைச்சர் குற்றச்சாட்டு

தமிழகம் பிஎஃப்ஐ-யின் கோட்டையாக மாறிவருகிறது என்று மத்தியஇணை அமைச்சர்அஸ்வினி குமார்சவ்பே குற்றம்சாட்டியுள்ளார்.

சென்னை தியாகராய நகரில் உள்ள பாஜக தலைமை அலுவலகமான கமலாலயத்தில் செய்தியாளர்களிடம் மத்திய சுற்றுச்சூழல் துறை இணை அமைச்சர் அஸ்வினிகுமார் சவ்பே கூறியதாவது:

பாப்புலர் ஃப்ரன்ட் ஆப் இந்தியா (பிஎஃப்ஐ) போன்ற அமைப்புகள் வேரூன்ற ஒருசிலஅரசியல் கட்சிகளின் கொள்கையே காரணமாகும். தமிழகம் பிஎஃப்ஐ-யின் கோட்டையாக மாறிவருகிறது. அவர்களின் கனவு ஒருபோதும் நிறைவேறாது. சதித் திட்டங்கள் தகர்த்தெறியப்படும். பிரதமர் மோடியின் ஆட்சியில் தீவிரவாதத்துக்கு தக்க பதிலடி கொடுக்கப்பட்டு வருகிறது. பாஜகவினர், ஆர்எஸ்எஸ்காரர்கள் மீதான தாக்குதல்களை பொறுத்துக் கொள்ள முடியாது. பாஜக தொண்டர்கள் யாருக்கும் அச்சப்பட வேண்டாம்.



தமிழக அரசு மீது புகார்: தமிழக மக்கள் அமைதியை விரும்புபவர்கள். ஆனால், இங்கு ஆட்சியில் இருப்போரின் செயல்பாடு வன்முறையையும், தீவிரவாதத்தையும் ஊக்குவிக்கும் வகையில் உள்ளது. பாஜக ஜனநாயக வழிகளில் மக்களின் குரலை உயர்த்தி வருகிறது. தமிழக அரசு அதை ஒடுக்கமுயல்கிறது. அது நல்லதல்ல.மத்திய அரசும் மானியம் வழங்குவதால் முறைப்படி ரேசன்கடைகளில் பிரதமரின் படத்தை வைக்க வேண்டும் என்றார்.

# பி.எஃப்.ஐ. மீதான தடையை நீக்குங்கள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பை தடை செய்க

## சீமான் கோரிக்கை

'பாப்புலர் ஃப்ரன்ட் ஆஃப் இந்தியா இயக்கத்திற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும். ஆர்எஸ்எஸ்-ஐ உடனடியாக தடை செய்ய வேண்டும். இந்த நாட்டில் தடை செய்யப்படவேண்டிய ஒரே இயக்கம் ஆர்எஸ்எஸ்தான்'என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

அரசு மருத்துவர்களுக்கான பணியிட மாறுதல் கலந்தாய்வில் நடந்த முறைகேடுகளால் பாதிக்கப்பட்டுள்ள மருத்துவர்களுக்கு நீதி வழங்க வேண்டும், 12 ஆண்டுகளில் ஊதியப்பட்டை 4-ஐ வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அரசு மருத்துவர்கள் சார்பில் இன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடந்த போராட்டத்தில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்துகொண்டார்.



பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவரிடம், பாப்புலர் ஃப்ரன்ட் ஆஃப் இந்தியா அமைப்புக்கு மத்திய அரசு 5 ஆண்டு தடை விதித்தது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், 'பாப்புலர் ஃப்ரன்ட் ஆஃப் இந்தியா ஒரு சமூக இயக்கம், ஒரு ஜனநாயக இயக்கம். எனவே, அந்த இயக்கத்திற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும். ஆர்எஸ்எஸ் அமைப்பை உடனடியாக தடை செய்ய வேண்டும். இந்த நாட்டில் தடை செய்யப்படவேண்டிய ஒரே இயக்கம் ஆர்எஸ்எஸ்தான். அது அரசியல் அதிகாரத்திற்கு வந்துவிட்டதால், இந்த ஆட்டத்தை ஆடுகிறது.

அதேபோல், அக்டோபர் 2-ம் தேதி விசிக உள்ளிட்ட கட்சிகளின் சார்பில், நடைபெறவுள்ள மனித சங்கிலி போராட்டத்தை நான் வரவேற்கிறேன். பொதுவெளியில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது, அழைத்துப் பேசினால், போராட்டத்தில் நானும் பங்கெடுப்பேன். வெவ்வேறு தளத்தில் நாங்கள் பயணித்தாலும், நோக்கம் ஒன்றாக இருப்பதால், பங்கேற்க வாய்ப்பு இருக்கிறது' என்று அவர் கூறினார்.

# தமிழகத்தில் பா.ஜ.க. பிரமுகர்கள் வீடுகள் மீது பெற்றோல் குண்டு தாக்குதல் !

கடந்த 22 ஆம் திகணதி மாலை வேளையில் கோவை பாஜக அலுவலகத்தில் பெட்ரோல் குண்டு வீசப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், தொடர்ந்து ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களில் இந்து முன்னணியினர் மற்றும் பாஜக நிர்வாகிகள் சிலரின் கார், வீடு, வர்த்தக நிறுவனங்கள் மீது பெட்ரோல் குண்டு வீசப்பட்ட சம்பவங்கள் குறித்த செய்திகள் தொடர்ந்து வெளியாகி வந்தன.

தமிழகத்தில் கடந்த மூன்று நாட்களில் 15 இடங்களில் இது போன்ற பெட்ரோல் குண்டு வீச்சு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளது. இதில் 5 சம்பவங்கள் கோவையில் நிகழ்ந்துள்ளது. இதன் காரணமாக கோவையில் முக்கிய இடங்களில் அதிகப்படியான பொலிசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

கோவையில் மட்டும் 4000 பொலிசார் குவிக்கப்பட்டுள்ளனர். 1,%00 பொலிசார் வெளிமாவட்டங்களில் இருந்து கோவைக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர். தமிழகத்தில் கடந்த 3 நாட்களாக நிகழ்ந்த பெட்ரோல் குண்டு வீச்சு சம்பவம் தொடர்பாக இதுவரை ஒருவரை கூட பொலிசார் கைது செய்யாத நிலை தொடர்ந்து வருகிறது.

கோவை மட்டுமல்லாது திண்டுக்கல், ராமநாதபுரம், சத்தியமங்கலம் உள்ளிட்ட இடங்களில் பாஜக பிரமுகர்களின் வீடுகளில் பெட்ரோல் குண்டு வீசப்பட்டுள்ளது.

இந்நிலையில் கோவையில் மத தலைவர்களுடன் கோவை ஆட்சியர் மற்றும் காவல்துறை அதிகாரிகள் ஆலோசனை நடத்தினர். அதேபோல் கோவை பொலிஸ் அதிகாரிகளுடன் தமிழக தலைமைச் செயலாளர் இறையன்பு இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

பெட்ரோல் குண்டு வீசப்பட்டதாக தவறான தகவல்களை பரப்பக்கூடாது என்று கோவை ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

விரைவில் பெட்ரோல் குண்டு வீச்சு தொடர்பான நபர்கள் கைது செய்யப்படுவர் எனவும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் பல இடங்களிலே இப்படிப்பட்ட சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில், திருவாரூரில் பாட்டில்களில் பெட்ரோல் வழங்கக்கூடாது என பெட்ரோல் பங்குகளுக்கு மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது. இணையவழி விளையாட்டுகளை தடைசெய்யும் சட்டத்திற்கு தமிழக அரசு ஒப்புதல்!இணையவழி விளையாட்டுகளைத் தடை செய்வது தொடா்பான அவசரச் சட்டத்துக்கு திங்கள்கிழமை நடைபெற்ற தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்தச் சட்டம் ஆளுநா் ஆர்.என்.ரவியின் ஒப்புதல் பெறப்பட்டு விரைவில் வெளியிடப்படும் என்று உள்துறை கூடுதல் தலைமைச் செயலா் க.பணீந்திர ரெட்டி தெரிவித்தார்.

தமிழக அமைச்சரவைக் கூட்டம் முதல்வா் மு.க.ஸ்டாலின் தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்றது. தலைமைச் செயலகத்தில் காலை 9.35 மணிக்குத் தொடங்கிய கூட்டம் காலை 10.05 மணிக்கு நிறைவடைந்தது. இந்தக் கூட்டத்தில் இணையவழி விளையாட்டுகளைத் தடை செய்வது தொடா்பான அவசரச் சட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது. இதைத் தொடா்ந்து, சட்டத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

இணையவழி விளையாட்டுகளைத் தடுக்க புதிய சட்டம் இயற்றுவது தொடா்பாக தமிழக அரசுக்கு அறிவுரை வழங்க, சென்னை உயா் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி கே.சந்துரு தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இக்குழு கடந்த ஜூன் 27-இல் முதல்வரிடம் அறிக்கை அளித்தது. இந்த அறிக்கை அமைச்சரவைக் கூட்டத்திலும் வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது.

இதைத் தொடா்ந்து, பள்ளி மாணவா்கள் மீது இணையவழி விளையாட்டுகள் ஏற்படுத்திய தாக்கத்தைப் பற்றி பள்ளிக்கல்வித் துறை வாயிலாக எடுக்கப்பட்ட கணக்கெடுப்பு, பொது மக்களிடம் மின்னஞ்சல் மூலம் பெறப்பட்ட கருத்துகள், கலந்தாலோசனைக் கூட்டங்கள் வாயிலாக பெறப்பட்ட கருத்துகளுடன் சட்டத் துறை ஆலோசனையையும் பெற்று அவசரச் சட்டம் தயாரிக்கப்பட்டது. இந்தச் சட்டம் தலைமைச் செயலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இதைத் தொடா்ந்து, அவசரச் சட்டத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இந்த சட்டம் ஆளுநரின் ஒப்புதல் பெறப்பட்டு விரைவில் வெளியிடப்படும்ீ என்று அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

அதிமுக அரசின் அவசரச் சட்டம் : இணையவழி ரம்மி விளையாட்டுக்கு கடந்த அதிமுக ஆட்சி காலத்தில் தடை விதிக்கப்பட்டது. இதற்கான சட்டத்துக்கு அப்போதைய ஆளுநா் பன்வாரிலால் புரோஹித் ஒப்புதல் அளித்தார். இந்தச் சட்டத்தின்படி, இணையவழியில் ரம்மி விளையாடுவோருக்கு ரூ.5 ஆயிரம் அபராதமும், ஆறு மாதங்கள் சிறைத் தண்டனையும் அளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ரம்மி விளையாட்டை நடத்தும் நிறுவனப் பொறுப்பாளா்கள் ரம்மி விளையாட்டரங்கம் வைத்திருந்தால் ரூ.10 ஆயிரம் அபராதமும், இரு ஆண்டுகள் சிறைத் தண்டனையும் வழங்கவும் சட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்தது. இந்தச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி, சில தனியார் நிறுவனங்கள் சார்பில் சென்னை உயா் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுக்கப்பட்டன.

புதிய அரசின் சட்டம் : அதிமுக ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட இணையவழி ரம்மி தடை சட்டம் ரத்தானதால், புதிய சட்டம் கொண்டு வரப்படும் என்று முதல்வா் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார். அதன்படி, இணையவழி விளையாட்டுகளைத் தடை செய்வதற்கான அவசர சட்டத்தை தமிழக அரசு வகுத்து அதற்கு ஒப்புதல் அளித்தது. இந்த அவசர சட்டத்துக்கு ஓரிரு நாள்களில் ஆளுநா் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளிப்பார் எனத் தெரிகிறது. இதன்பின், அவசர சட்டம் வெளியிடப்படும்.

ஆராய்ச்சி மணி
மக்கள் குறைகேள் மாடம்



# சிங்காரச் சென்னையில் சிந்திக்க தூண்டியது



சென்னை மாநகரில் மழைநீர் கால்வாய் அமைக்குப் பணி ஆங்காங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சென்னைவாசிகள் அனைவரும் அறிவோம்.

சென்னை உயர்நீதி மன்றம் பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தி இருந்தாலும்.

சென்னை மெட்ரோ இரயில் அமைக்கும் பணி மறுபுறம் வாகன ஓட்டிகளை சிரமத்துக்கு உள்ளாக்கிக் கொண்டு வருகிறது.

வாகனங்கள் மெதுவாக ஊர்ந்து நகர்ந்தாலும் சாலை விபத்து சம்பவங்கள் அன்றாடம் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன.

சாலையில் ஆங்காங்கே பரவிக் கிடக்கும் மண் கல் குண்டும் குழியும் பயணிப்பருக்கு சிரமம் வாடிக்காயாகி விட்டது.

இருசக்ககர வாகனத்தின் ஒட்டுனர் வாகனத்தை கட்டுப்படுத்துவதே சவால் நிறைந்த ஒன்று தான்.

சாலையில் தொடர்ந்து அருகருகே வாகனம் மெதுவாகப் பயணத்தை மேற்கொண்டாலும் எதிர்பாராமல் பக்கவாட்டில் வண்டி உரசிக் கொள்வது சாலை விபத்தை சந்திக்க வேண்டிய சூழல் தவிர்க்க இயலாததாகி விடுகிறது. விபத்தை சந்திப்பவர்ள் அனுபவிக்கும் உடல் வலி வேதனை



ஆவல் கணேசன்

பண விரையம் மக்களை வேதனைக்கு உள்ளாக்குகிறது.

சென்னை மாநகரில் கல்வி மருத்துலம் மிகவும் இலாபகாரமான தொழில் வணிகம்.

இதில் தனியார்களின் ஆதிக்கம் கொடி கட்டிப் பறக்கிறது.கல்விக் கொள்ளை மருத்துவக் கொள்ளையில் தனியார் நிறுவனங்கள் கோலோச்சுவது ஊரறிந்த விசயம்.

விபத்தை சந்திக்கும் போது நேரில் கண்ட அனுபவமே எழுதத் தூண்டியது.

தரமான கல்வி உயர் மருத்துவ சேவை பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டும். ஆனால் இங்கோ அரசாங்கம் மது விற்பனையை சேவையாக செய்கிறது

கென்னையின் தியாகராய நகர் பகுதியில் சென்ற வருடம் மழைக் காலத்தில் வீதிகளில் படகு சவாரிப் பயணம் ஆட்சியாளர்களின் சாதனை தான்.

ஒவ்வொரு ஆண்டும் குடிநீரில் கழிவு நீர் கலப்பது சில மணி நேர மழைக்கு சாலையில் வெள்ள நீர் தேங்கிக் குளம் போல் காட்சியளிப்பது செய்தி புதிதல்ல வாடிக்கை.

நிரந்தரத் தீர்வு எப்போது கிட்டும்.

விடியலைத் தேடி நகர்கிறேன்.










# இரண்டாம் எலிசபெத் மறைவும் அதன் பிறகும்!



**வழக்கறிஞர்**
**கே.எஸ்.இராதாகிருஷ்ணன்**

**உலகின்** பெரும்பகுதி நாடுகளை தன் காலனி ஆதிக்கத்தின் பிடியில் ஒரு காலத்தில் வைத்திருந்தது பிரிட்டிஷ் சாம்ராஜ்யம். சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யமாக இருந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஸ்காட்லாந்த், வேல்ஸ், வடக்கு அயர்லாந்து மற்றும் தீவுகளைக் கொண்ட ஐக்கிய பிரிட்டானியமாக ஆகிவிட்டது.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் இரண்டாம் எலிசபெத் கடந்த 8 – ஆம் தேதி ஸ்காட்லாந்தில் உள்ள பால்மோரலில் காலமானார். அவருடைய உடல் எடின் பார்க், பின் லண்டன் வந்தது. கடந்த 19– ஆம் தேதி நல்லடக்கம் செய்யப்பட்டது.

இங்கிலாந்தின் ராணியாக 1952 – ஆம் ஆண்டு பிப்ரவரி 6 – ஆம் தேதி எலிசபெத் அலெக்ஸாண்ட்ரா மேரி தனது 26 வயதில் முடிசூட்டப்பட்டார். அன்று அவர் தனது கணவருடன் பிலிப் மௌண்ட்பேட்டனுடன் ஆப்பிரிக்காவின் கென்யா நாட்டில் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்தபோது, தந்தை ஆறாம் ஜார்ஜ் மன்னர் இறந்த செய்தி கேட்டு அவசரமாக பிரிட்டனுக்குத் திரும்பி வந்தார். அப்போது இங்கிலாந்தின் பிரதமராக இருந்த எவருக்குமே பணியாத சர்ச்சில், முடிசூடாத எலிசபெத்தை வரவேற்க விமானநிலையத்தில் காத்திருந்தது குறிப்பிடத்தக்க நிகழ்வாக அன்று இருந்தது. அப்போது சர்ச்சில், பாவம்! ஒன்றும் அறியாத பெண் என கூறினார். அவரை ஆறுதல்படுத்தவே நேராக விமானநிலையத்துக்கு சர்ச்சில் வந்திருந்தார்.

இங்கிலாந்தின் ராணியாக பொறுப்பேற்ற காலத்தில் இருந்து அவரின் மரணம் வரை பிரிட்டனில் சர்ச்சில், ஹெரால்ட் வில்சன், மார்கரெட் தாட்சர், டோனி ப்ளெயர், டேவிட் கேம்ரான், போரிஸ் ஜான்சன் உள்பட பல குறிப்பிடத்தக்க பிரதமர்கள் இருந்திருக்கின்றனர். கடைசியாகப் பிரிட்டிஷ் பிரதமராகப் பதவியேற்ற லிஸ் ட்ரஸ்–ஐச் சேர்த்தால் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் காலத்தில் 15 பிரதமர்கள் வந்து சென்றுவிட்டனர்.

பிரிட்டிஷ் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களை அழைக்கும்போது மாட்சிமை தாங்கிய என்ற அடைமொழியுடன்தான் சேர்த்து அழைக்க வேண்டும். இரண்டாம் எலிசபெத்தை மாட்சிமை தாங்கிய மகாராணி (HER MAJESTY, THE QUEEN HER) என்று அழைத்தார்கள். அவருடைய பெயர் தாங்கி நிற்கும் அரசாங்கத்தை மகாராணியின் அரசாங்கம் (HER MAJESTY'S GOVERNMENT) என்றுதான் அழைத்தார்கள். ரூபாய் நோட்டுகளில் அவர் படம் இடம் பெற்றிருக்கிறது. தபால்தலை, அஞ்சல் அட்டைகளிலும் அவர் படம் இடம் பெற்றிருக்கிறது. பிரிட்டிஷ் பாஸ்போர்ட்களில் அவருடைய பெயர் இடம் பெற்றிருக்கிறது.

பிரதமரை மகாராணிதான் நியமிக்க வேண்டும். நாடாளுமன்றக் கூட்டத் தொடரை மகாராணிதான் தொடங்கி வைக்க வேண்டும். பிரதமர் ராஜினாமா செய்தால் ராஜினாமா கடிதத்தை மகாராணியிடம்தான் வழங்க வேண்டும். இவையெல்லாம் பிரிட்டனில் உள்ள நடைமுறைகள்.

பிரதமர்கள் வாரம் ஒருமுறை மகாராணியை அவருடைய மாளிகைக்குச் சென்று சந்திக்க வேண்டும் என்பது பிரிட்டனில் உள்ள நடைமுறை. பிரதமர்கள் குனிந்து சற்று மண்டியிட்டது போல மகாராணிக்கு வணக்கம் செய்வது மரபாக இருந்தது. எலிசபெத் ராணியை மதிக்காத பிரதமர்களாகக் கருதப்பட்ட ஹெரால்ட் ராபின்சன், மார்கரெட் தாட்சர், டோனி பிளேயர் ஆகிய பிரதமர்கள் வேறு வழியின்றி எலிசபெத் ராணியை ஒவ்வொரு வாரமும் சந்தித்தார்கள். பிளேயர் எலிசபெத் ராணியின் இரங்கல் கூட்டத்தில் முக்கிய பிரமுகராவும் காணப்பட்டார். ஒவ்வொரு வாரமும் பிரதமர் மகாராணியைச் சந்திக்க வேண்டும் என்ற கட்டாயம் இருந்தாலும், மகாராணி பிரதமருக்கு எந்த ஆணையும் இட முடியாது. அரசாங்க நடவடிக்கைகளில் தலையிட முடியாது. அரசாங்கத்தின் எந்தச் செயலிலும் ராணி குறுக்கிட முடியாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் தன் பணியை தானே செய்து கொள்ளும்.



இரண்டாம் எலிசபெத்துக்கு பல்வேறு சமுதாய அரசியல் கருத்துகளும் இருக்கவே செய்தன. வடக்கு அயர்லாந்து, ஸ்காட்லாந்த் ஆகியவற்றின் மக்கள் பிரிட்டனின் ஒருங்கிணைந்த முடியரசிலிருந்து பிரிந்து போவதற்கு போராடத் தொடங்கியபோது அதற்காக வேதனைப்பட்டார். பிரிட்டனை விட்டு பிரிந்து போக வேண்டுமா என்பதற்கான பொதுவாக்கெடுப்பு ஸ்காட்லாந்தில் நடந்தது.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் பிரிந்து செல்வதை இரண்டாம் எலிசபெத் முழுமையாக ஆதரித்தார். 2016 – ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23– ஆம் தேதி 71.8% பேர் கலந்து கொண்ட அந்த வாக்கெடுப்பில் 51.9% மக்கள் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் பிரிந்து செல்வதற்காக வாக்களித்தனர். அந்த நேரத்தில் பெரும்பான்மையான மக்களின் கருத்தே மகாராணியின் கருத்தாக இருந்தது.

லண்டனில் உள்ள பக்கிங்ஹாம் அரண்மனையில் அரசர்களின் உருவச் சித்திரங்கள் வைக்கப்பட்டிருக்கும். சாலைகளில் ஓடும் டாக்ஸிகள் பழைய வடிவமைப்பைக் கொண்டவையாக இருக்கும். பிளாஸ்டிக் போத்தல்களுக்குப் பதிலாக கண்ணாடி போத்தல்களே இருக்கும். ஷேக்ஸ்பியரின் நாடகங்களைப் பாதுகாத்து வளர்த்ததில் அரச குடும்பத்தினரின் பங்களிப்பு அதிகம். அதேபோன்று ஆக்ஸ்போர்ட், கேம்ப்ரிட்ஜ் போன்ற பழைய பல்கலைக்கழகங்களை இரு கண்களைப் போல மதித்து பாதுகாத்து வளர்த்து வந்திருக்கிறார்கள். பழைமையைப் பேணுவதில் இங்கிலாந்து மக்களும் அதிகம் ஆர்வம் உள்ளவர்கள். அதனால்தான் இரண்டாம் எலிசபெத்தின் 40 கி.மீ. தொலைவுக்கும் அதிகமான இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்கு ஆர்வம் காட்டினர்.

பக்கிங்ஹாம் அரண்மனையில் நேரு, ஆர்.வெங்கட்ராமன் போன்ற பிரதமர்,குடியரசுத் தலைவர்கள் தங்கியதும் உண்டு. எலிசபெத் ராணி இந்தியத் தலைவர்கள் வந்தால், உபசரிப்பதை கவனமாக எடுத்துக் கொள்வார் என்ற தகவலும் உண்டு. கென்னடி ஒருமுறை அங்கே சென்றபோது அவருக்கான உணவு வகையை தானே முன்னின்று படைத்தார்.

கிரேக்கத்தில் தோன்றிய ஜனநாயகம், பிரிட்டனில் வளர்ந்து நாடாளுமன்ற ஜனநாயக முறையாக இப்போதும் உள்ளது. என்றாலும் பாரம்பரியத்தை மதிப்பது, பேணுவது என்பதில் அங்குள்ள மக்கள் எப்போதும் ஆர்வமாக இருப்பார்கள். எனவே நாடாளுமன்றத் தாய் என்று பிரிட்டன் நாடாளுமன்றம் அழைக்கப்படுகிறது. அதுபோல குடியரசு என்பது இத்தாலியில் பிறந்து, அமெரிக்கா, பிரான்ஸ் நாட்டில் அதிபர் ஆட்சியாகத் திகழ்கிறது. உலகத்தில் முதல் அரசியல் சாசனம் ஆவணம் மகாசாசனம் என்று ஜான் அரசரால் இங்கு உருவாக்கப்பட்டது. ஆனால் இங்கிலாந்துக்கு எழுதப்பட்ட அரசியல் சாசனம் கிடையாது. மரபுகளும், நடைமுறைகளும்தான் அரசியல் சாசனமாக விளங்குகிறது. மற்ற உலக நாடுகளில் இதைப் போல எழுதப்பட்ட அரசியல் சாசனம் இஸ்ரேலிலும், நியூசிலாந்திலும் கிடையாது.



இங்கிலாந்தின் காலனி நாடுகள் விடுபட்டன. மீதி இருந்த நாடுகள் காமன்வெல்த் நாடுகளாக ஒன்றிணைந்தன. 56 நாடுகளைக் கொண்ட காமன்வெல்த் அமைப்பின் தலைவராக இரண்டாம் எலிசபெத் இருந்து வந்தார். தற்போது இளவரசர் சார்லஸ் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். என்றாலும் ஆஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து, பஹாமாஸ், ஜமைக்கா உட்பட பத்துக்கும் மேற்பட்ட நாடுகள் இங்கிலாந்து மகாராணியை தங்களுடைய நாட்டின் ஆட்சித் தலைவராகப் பார்க்கின்றன. வரும் காலத்தில் யார் முடிசூட்டிக் கொள்கிறார்களோ, அவரைத் தலைவராக கருதுவார்கள் என்று சொல்ல முடியாது. அதற்கு எதிரான கருத்துகளும் அந்த நாடுகளில் ஒலிக்கத் தொடங்கியுள்ளன. பஹாமாஸில் நாட்டின் அதிபர் இது குறித்து பொதுவாக்கெடுப்பு நடத்தப்படும் என கூறியுள்ளார்.

பிரிட்டனின் ராணிக்கு வரி செலுத்த விலக்கு உள்ளது. ஆனால் எலிசபெத் 1992 – ஆம் ஆண்டுக்குப் பிறகு தானாகவே முன் வந்து வருமான வரி செலுத்தினார் முதலீட்டு லாப வரி செலுத்தினார்.

பொதுவாக பிரிட்டனில் இருந்து மன்னர்கள் வந்தால் டெல்லியிலேயே தங்கிவிடுவார்கள். கல்கத்தா போன்ற இடங்களுக்கு மட்டும் செல்வது வாடிக்கை. அவர்கள் வருவதையொட்டி பல நகரங்களில் சிலைகள் வைப்பது உண்டு.

ஆனால் எலிசபெத் இந்தியாவுக்கு மூன்று வந்தபோது பல இடங்களுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

1961 – ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நேரு பிரதமராக இருந்த காலத்தில் முதன்முறையாக தனது கணவர் இளவரசர் பிலிப் உடன் வருகை தந்தார். ஆக்ராவுக்குச் சென்று தாஜ்மஹாலைப் பார்த்தார். மும்பை, ஜெய்ப்பூர், வாரணாசி, பெங்களூர், மைசூர், சென்னை, கொல்கத்தா என பல இடங்களைச் சுற்றிப் பார்த்தார். ராஜ்கட்டிலுள்ள மகாத்மாகாந்தியின் நினைவு இடத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்தினார்.

இரண்டாவது முறையாக 1983 – ஆம் ஆண்டு. இந்திராகாந்தி பிரதமராக இருந்த போது, டெல்லியில் நடந்த காமன்வெல்த் நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ள வந்தார். இலங்கைப் பிரச்னை தொடர்பாக அங்கே பேசப்பட்டது. ஜெயவர்த்தனேயும் வந்திருந்தார்.

இந்தியாவின் 50 ஆவது சுதந்திர கொண்டாட்டத்தையொட்டி 1997 – ஆம் ஆண்டு மீண்டும்

மிகுதி 09 ஆம் பக்கத்தில்...

# இரண்டாம் எலிசபெத் மறைவும் அதன் பிறகும்!

வருகை தந்தார். அவருடன் அவருடைய கணவர் பிலிப் மௌண்ட்பேட்டனும் வந்திருந்தார். அப்போது ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்ற வலுவான கோரிக்கை எழுந்தது. ஆனால் எலிசபெத் மகாராணி ஜாலியன் வாலாபாக் படுகொலையில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதுடன் நிறுத்திக் கொண்டார். சரித்திரத்தில் சில சம்பவங்கள் சோகம் தரக் கூடியவை. சில சம்பவங்கள் மகிழ்ச்சி தரக் கூடியவை. சோக சம்பவங்களில் இருந்து நாம் பாடம் கற்கலாம் என்று சொல்லிவிட்டு மன்னிப்புக் கேட்காமல் சென்றுவிட்டார்.

அந்த நேரத்தில் மருதநாயகம் திரைப்படத்தின் தொடக்கவிழாவுக்கு இரண்டாம் எலிசபெத் வருகை தந்தார். அப்போதைய முதல்வர் கலைஞரும் அங்கு வந்திருந்தார். தரமணியில் நடந்த அந்த நிகழ்வில் நானும் கலந்து கொண்டேன்.

இப்போது எலிசபெத் பயன்படுத்திய பொருள்களை வாங்கி வைத்துக் கொள்வதில் பலர் ஆர்வம் காட்டுகின்றனர். அவர் பயன்படுத்திய டிப் டீ பேக் ஒன்றை யாரோ கடத்தி, இணையத்தின் மூலம் ஏலம் விடப்பட்டுள்ளது. அதன் மதிப்பு இந்திய ரூபாய் மதிப்பில் ரூ.9.5 லட்சம். அவர் குப்பையாக போட்டது கூட மதிப்புக்குரிய பொருளாக நினைக்கப்படுகிறது.

கடந்த 1986 – ஆம் ஆண்டு ராணி எலிசபெத் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றபோது, ஒரு கடிதத்தை எழுதிக் கொடுத்திருக்கிறார். அந்தக் கடிதத்தை 2085 – ஆம் ஆண்டில்தான் பிரித்துப் படிக்க வேண்டும் என அவரே எழுதிக் கொடுத்துவிட்டதால், அந்தக் கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருக்கும் என்ற ஆர்வம் பலருக்கும் எழுந்துள்ளது.

பிரிட்டன் அரசாங்க ரகசியங்கள் அனைத்தும், ‘ரெட் பாக்ஸ்’ எனப்படும், சிவப்பு பெட்டியில் வைத்து பாதுகாக்கப்படும். மகாராணியிடம் இருக்கும் இந்த சிவப்புப் பெட்டியில் முக்கிய ஆவணங்கள், தற்கால நிகழ்வுகள், எதிர்காலத்தில் அமல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள்,



பற்றிய ஆவணங்கள் பாதுகாக்கப்படும். ராணி எலிசபெத்தின் மறைந்ததனால் இங்கிலாந்தின் மன்னராக பதவியேற்றுள்ள சார்லஸ் இந்த சிவப்புப் பெட்டியைப் பயன்படுத்துவாரா என்று தெரியவில்லை. இது பட்ஜெட் தாக்கல் செய்யும் பெட்டியைப் போல வரலாற்றில் இடம் பெற்றது.

அவர் உடல் லண்டனுக்கு வந்து, பக்கிங்ஹாம் அரண்மனையில் அரச குடும்பத்தினரின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. கடந்த 14 – ஆம் தேதி வெஸ்ட்மின்ஸ்டர் மண்டபத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இந்த உடல் வைக்கப்பட்ட இடத்தில் யார், யார் உடல் வைக்கப்பட்டிருந்தது என்று பித்தளை தகரத்தில் அவர்களுடைய பெயர்கள் பொறிக்கப்பட்டிருக்கும். நான் அங்கே சென்றபோது, சர்ச்சில், விக்டோரியா ராணி, ஜார்ஜ் போன்றோரின் உடல்கள் வைத்த இடத்தில் இம்மாதிரி பித்தளை தகடுகளில் அவர்கள் பெயர்கள் இருந்ததைப் பார்த்தேன்.

ராணி எலிசபெத் இறுதிச் சடங்கிற்காக அரண்மனையின் தோட்டங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பூக்கள் எடுத்து வரப்பட்டன. பூக்களைத் தேர்ந்தெடுப்பதற்கென தனித்துவமான பின்புலங்கள் இருந்தன. பக்கிங்ஹாம் அரண்மனையில் பூக்கும் பூக்களை தோட்டக்காரர்கள் ஒவ்வொரு திங்கட்கிழமையும் ராணிக்கு அனுப்புவார்கள். ராணிக்குப் பிடித்த பூக்கள் எவை என்று தெரியும். ராணிக்கு அந்தப் பூக்கள் பிடித்ததற்கான இன்னொரு காரணமும் இருந்தது. ராணிக்கும் – இளவரசர் பிலிப்புக்கும் 194% – இல் திருமணம் நடந்தபோது கொடுத்த பூங்கொத்தில் இருந்து விதைகள் எடுக்கப்பட்டு



வளர்க்கப்பட்ட செடியில் பூத்த பூக்கள் அவை.

டஹ்லியாஸ், ஸ்வீட் பீஸ், ஃப்ளாக்ஸ், ஒயிட் ஹீத்தர், பைன் ஃபிர் உள்ளிட்ட ராணிக்குப் பிடித்த மலர்களால் செய்யப்பட்ட மாலையால் சவப்பெட்டி அலங்கரிக்கப்பட்டது.

சவப்பெட்டியின் மீது கோஹினூர் வைரம் பொறிக்கப்பட்ட ராணியின் கிரீடம் மற்றும் அவரது பதவி ஏற்பின்போது அளிக்கப்பட்ட செங்கோலும் வைக்கப்பட்டு இருந்தன. சவப்பெட்டியில் ராணி எலிசபெத்தின் மகன் – புதிய அரசர்– சார்லஸ் எழுதிய கடிதமும் வைக்கப்பட்டு இருந்தது. அந்த கடிதத்தில் சார்லஸ், ‘உங்கள் அன்பான நினைவில் சார்லஸ் ஆர்’ என்று எழுதி இருந்தார்.

புதிய மன்னர் சார்லஸ் பதக்கங்களுடன் கூடிய சடங்கு சீருடையை இறுதிச் சடங்கு நடந்த நாள் முழுவதும் அணிந்தார். கடந்த 2012 –இல் ராணி சார்லஸுக்கு வழங்கிய சிவப்பு வெல்வெட் மற்றும் தங்க பீல்ட் மார்ஷல் கோலை எடுத்துச் செல்வார். சார்லஸ் மட்டுமல்ல, ராணி எலிசபெத்தின் அனைத்து பிள்ளைகளும் ராணுவ உடைகளையே அணிந்து இருக்க வேண்டும். பேரன் இளவரசர் வில்லியமும் ராணுவ உடையை அணிந்து இருக்க வேண்டும் என்ற விதி உள்ளது.

இதில் குறிப்பிடப்பட வேண்டிய இன்னொரு விஷயம், அரச குடும்பத்தின் பதவியில் இருக்கும் ஆண்கள் பாரம்பரியமாக இராணுவ சீருடைகளையே அணிவார்கள். பதவியில் இல்லாத ஆண்கள் கருப்பு கோட்டுகளை அணிவார்கள். கடந்த ஆண்டு ராணியின் கணவர் அரசர் பிலிப் இறந்தபோதும் இதேபோன்ற உடைகள் தான் அணிந்து இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் எலிசபெத் ராணிக்கு வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் சடங்குகள் செய்யப்பட்டன. 1947 – ஆம் ஆண்டு ராணி – இளவரசர் பிலிப் திருமணத்தின்போது வெஸ்ட்மின்ஸ்டர் அபேவில் பாடப்பட்ட ‘தி லார்ட் இஸ் மை ஷெப்பர்’ என்ற பாடல் பாடப்பட்டது.

அங்கிருந்து 6 ஆயிரம் ராணுவ வீரர்கள் புடைசூழ, ராணியின் உடல் அடங்கிய சவப்பெட்டி ஆயுதம் தாங்கிச் செல்லும் வாகனத்தில் லண்டன் வீதிகளில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. அதன் பிறகு ராணியின் உடல் விண்ட்சார் கோட்டைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு உள்ள ஜார்ஜ் தேவாலயத்தில் பிரார்த்தனைக்குப் பிறகு, இறுதிக் கட்டமாக அரச வம்சத்தின் மூத்த உறுப்பினர் சாம்பர்லின் மெல்லிய கட்டையை உடைத்து முடித்து வைத்தார். அவருடைய கணவர் பிலிப், தந்தை, தாய், சகோதரியின் கல்லறைகளுக்கு அருகில் அவருடைய உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இரண்டாம் எலிசபெத் ராணியின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காக, இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, இலங்கை குடியரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்க, அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரான், துருக்கி அதிபர் ரிசெப் எர் டோகன், ஜப்பானின் நருஹிட்டோ, நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன், மற்றும் உலகநாடுகளைச் சேர்ந்த 500 தலைவர்கள் உள்ளிட்ட 2,000 பேர் பங்கேற்றனர். உலகத் தலைவர்களுக்கான இரங்கல் குறிப்பு புத்தகத்தில் திரௌபதி முர்மு கையெழுத்திட்டுள்ளார்.



ரஷ்யா, பெலாரஸ், மியான்மர், ஆப்கானிஸ்தான், சிரியா, வெனிசுலா ஆகிய % நாடுகளுக்கு இறுதிச் சடங்குகள் செய்ய அழைப்பு விடுக்கப்படவில்லை. உக்ரைன் போர் காரணமாக ரஷ்யாவுக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை. சீனாவை தவிர்க்க நினைத்தாலும் அதன் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். தைவானும் கலந்து கொண்டது. இரங்கல் குறிப்பு புத்தகத்தில் தைவான் கையெழுத்திடக் கூடாது என்று சீனா தெரிவித்தது.

எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்குகள் நடைபெற்ற 19– ஆம் தேதி இலங்கையில் துக்கதினமாக அனுஷ்டிக்கப்பட்டது.

எலிசபெத் ராணியின் மறைவைத் தொடர்ந்து பல புதிய குரல்களும் ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

எலிசபெத் ராணியின் கிரீடத்தில் உள்ள வைரத்தை திருப்பித் தருமாறு தென் ஆப்பிரிக்காவில் இருந்து குரல் எழுந்துள்ளது. இணையத்தில் ஞிடச்ணஞ்து.ணிணூஞ் என்ற ஆன்லைன்



கையெழுத்து இயக்கமும் இதற்காக நடத்தப்பட்டு வருகிறது. இதில் இது வரை 6000க்கும் மேற்பட்டோர் கையெழுத்திட்டுள்ளனர். ‘கிரேட் ஸ்டார் ஆஃப் ஆப்பிரிக்கா’ என்றழைக்கப்படும் இந்த வைரத்தின் இன்னொரு பெயர் கல்லினன். 1905– இல் தென் ஆப்பிரிக்க வைரச் சுரங்கத்தில் இருந்து வெட்டியெடுக்கப்பட்ட பெரிய வைரம் ஒன்றின் ஒரு பகுதி தான் இது. தென் ஆப்பிரிக்கா பிரிட்டனின் காலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்த போது அப்போதைய ஆட்சியாளர்களால் இந்த வைரம் பிரிட்டிஷ் ராஜ குடும்பத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அதுதான் தற்போது ராணியின் கிரீடத்தில் உள்ளது

அதுபோன்று செங்கோலில் உள்ள நீர்த்துளி வடிவிலான 530.2 கேரட் வைரம் உள்ளது. அதையும் திருப்பி அளிக்குமாறு தென் ஆப்பிரிக்கா கோருகிறது. இது 1600 களில் ராணி அணிந்திருந்த கிரீடத்தில் பொருத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த வைரத்தின் பண மதிப்பு தெரியவில்லை. என்றாலும் இதன் வரலாறு இதன் மீதான கவனத்தை ஈர்த்துள்ளது.

ஆந்திராவின் சுரங்கம் ஒன்றில் இருந்து பல நூற்றாண்டுகளுக்கு வெட்டியெடுக்கப்பட்ட மிகப் பெரிய வைரம்தான் கோஹினூர். உலகிலேயே மிகப்பெரிய வைரமாக (105 கேரட்) அது கருதப்படுகிறது. அதன் மதிப்பு 200 மில்லியன் டாலர் என்று கூறப்படுகிறது.

இது 14 –ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போதைய தெலுங்கானாவின் வாரங்கலில் உள்ள ஓர் கோவிலில் தெய்வத்தின் ஒரு கண்ணாக பயன்படுத்தப்பட்டது. மாலிக் கஃபூர் (அலாவுதீன் கில்ஜியின் ஜெனரல்) அதை கொள்ளையடித்தார் என்றும், அதன் பின் முகலாயப் பேரரசின் பல ஆட்சியாளர்களுக்கு அனுப்பப்பட்ட பிறகு, சீக்கிய மகாராஜா ரஞ்சித் சிங் லாகூரில் அதை வைத்திருந்தார். 1849– இல் மகா ராஜா ரஞ்சித் சிங்கின் மகன் திலீப் சிங் ஆட்சியின் போது விக்டோரியா மகாராணிக்கு வைரம் வழங்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

கோஹினூர் வைரத்தை இந்தியா வுக்கு திரும்பிக் கொண்டுவர வேண்டும் என்ற குரல்களும் அவ்வப்போது எழுவது உண்டு.

அதேபோல் தான் எகிப்திலும் அங்கிருந்து கொண்டு செல்லப்பட்ட ரோசட்டா ஸ்டோனை மீட்டெடுக்க வேண்டும் என்று பல காலமாக பலரும் கோரி வருகின்றனர்.

இரண்டாம் எலிசபெத் மரணம் அடைந்த பிறகு, பிரிட்டனில் ஏற்கெனவே இருந்த சில விஷயங்கள் மாற்றம் பெறும். பிரிட்டனின் தேசியகீதம் ‘GOD SAVE THE QUEEN‘ என்பது ‘GOD SAVE THE KING‘ என்று மாறும். HER MAJESTY‘S SERVICE‘ என்பது ‘HIS MAJESTY‘S SERVICE‘ என மாறும். பிரிட்டனிலுள்ள சுமார் ஒரு லட்சம் அஞ்சல் பெட்டிகளில் இரண்டாம் எலிசபெத் அரசி என்பதைக் குறிக்கும் உகீஐஐ எழுத்துகள் மன்னர் மூன்றாம் சார்லஸைக் குறிக்கும்வகையில் CRIII என்று மாற்றப்படும்.

நீண்ட காலம் அரியணையில் இருந்தவரான ராணி இரண்டாம் எலிசபெத் நாட்டின் பெரிய செல்வந்தர்களில் ஒருவர். அவருக்கு வாரிசுரிமையாக அரண்மனைகள், மணி மகுடங்கள், நிலங்கள் ஆகியவை சொந்தமாயின. அவை தவிர, தனித்துவமான பொருள்கள் சிலவும் அவருக்கு சொந்தமாக இருந்தன. அவை அனைத்தும் தற்போது புதிய அரசர் மூன்றாம் சார்லஸுக்கு சொந்தமாகியுள்ளன.

இங்கிலாந்திலும், வேல்சிலும் உரிமையாளர் அடையாளம் இல்லாமல் இருக்கும் அனைத்து வெள்ளை மியூட் அன்னங்களும் அரசிக்கு அல்லது அரசருக்கு சொந்தம் என்கிறது சட்டம். கடற்கரையில் இருந்து 4.8 கி.மீ. தொலைவுக்குள் இருக்கும் டால்பின்களும் ராணிக்கு சொந்தமானவை.

இப்படி உரிமை கொண்டாடுவதற்கு ஒரு சட்ட அடிப்படை உள்ளது. இரண்டாம் எட்வர்ட் அரசராக இருந்தபோது 1324 –இல் இந்த சட்டம் இயற்றப்பட்டது. நிகடலிலோ, வேறெங்குமோ உள்ள திமிங்கிலங்கள், ஸ்டர்ஜன் மீன்கள் ஆகியவற்றை அரசர் தனது ஆளுகைக்குள் எடுத்துக்கொள்ளலாம்’ என்கிறது அந்த சட்டம். இந்த சட்டம் இன்றும் நடைமுறையில் உள்ளது. திமிங்கிலங்களும், டால்பின்களும் ‘ஃபிஷஸ் ராயல்’ என்று அழைக்கப்படுகின்றன. இரண்டாம் எலிசபெத்தின் மரணத்தைத் தொடர்ந்து இந்த உயிரினங்கள் இனி சார்லஸுக்குச் சொந்தமாகும்.

சண்டே டைம்ஸ் 2022– இல் வெளியான பணக்காரர்கள் பட்டியலில் ராணியின் தனிப்பட்ட செல்வம் 37 கோடி பவுண்டுகள் இந்திய மதிப்பில் 3356 கோடியே 39 லட்சத்து 56 ஆயிரம் ரூபாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் பெரும்பாலானவை சொத்துகள், நகைகள், பத்திரங்கள், கலைப்பொருள்களாக உள்ளன. இவை எல்லாமும் இனி புதிய அரசர் சார்லஸுக்குச் சேரும்.

இவை தவிர, ராணி உயிர் நீத்த பால்மோரல் கோட்டை போன்ற சில மிக அற்புதமான சொத்துகள் அரச குடும்பத்துக்கு தனிப்பட்ட முறையில் சொந்தமானவை. இவை தவிர, அரியணைக்கு சொந்தமாக வேறு பல அரசு இல்லங்களும், பரந்த பொது நிலங்களும் உள்ளன. கிரெளன் எஸ்டேட் என்று அறியப்படும் இவை அரசகுடும்பத்துக்கு தனிப்பட்ட முறையில் சொந்தமானவை அல்ல. இவற்றை அவர்கள் விற்க முடியாது.

பெர்க்ஷயரில் உள்ள அஸ்காட் பந்தயப் பாதை, லண்டன் ரெஜன்ட் வீதியின் பெரும் பகுதி ஆகியவை கிரெளன் எஸ்டேட்டை சேர்ந்தவை.

ஐக்கிய ராஜ்ஜியத்தின் பெரும்பாலான கடற்கரைகளில் இருந்து 12 நாடிகல் மைல் தொலைவுக்கான கடற்பரப்பும் அரியணைக்கு சொந்தமானவை. கடலோர காற்றாலைகளை அமைக்கும் நிறுவனங்கள் இதனால், அரியணைக்கு ராயல்டி செலுத்தவேண்டும்.

கிரெளன் எஸ்டேட் சொத்துகளில் இருந்து வரும் வருவாயில் 25 சதவீதம் அரசருக்கு சொந்தமானவை. 15 சதவீதமாக இருந்த இந்த அளவு 2017– இல் 25 சதவீதமாக உயர்த்தப்பட்டது.

இரண்டாம் எலிசபெத்தின் மகனான இளவரசர் சார்லஸுக்கு அவருடைய 70 ஆவது வயதில் தாயின் மணிமுடி மட்டுமல்ல, திரண்ட பல்வேறு சொத்துகளும் கிடைத்திருக்கின்றன. அவரும் தனது தாயாரைப் போல நூறாண்டுகள் வாழ்க என வாழ்த்துவோம்!

# பொருளாதார நெருக்கடியை நாடாளுமன்றத்தில் விவாதிக்க அன்வார் கோரிக்கை



மலேசியா நாட்டின் பொருளாதாரப் பிரச்சனைகள் குறித்து விவாதிப்பதற்கான பிரேரணையை வரவிருக்கும் திவான் சமூக கூட்டத்தில் முன்வைக்க பிரதமர் இஸ்மாயில் சப்ரி யாக்கோப்பை அழைத்துள்ளார் அன்வார் இப்ராஹிம்.

பிரேரணையை அரசாங்கம் சமர்ப்பிக்கத் தவறினால், எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் தாம் அதைச் செய்வேன் என்று அன்வார் கூறினார்.

மக்களின் வாழ்க்கையை கடுமையாக பாதித்துள்ள பொருட்களின் விலை உயர்வு மற்றும் ரிங்கிட்டின் கடுமையான தேய்மானம் ஆகியவற்றைத் தீர்க்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இந்தப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் மற்றும் வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரின் முதல் வாரத்தில் இவை விவாதிக்கப்பட வேண்டும் என்று பிகேஆர் தலைவர் தனது முகநூல் பக்கத்தில் வெள்ளியிடுள்ளார், இந்த விவகாரம் குறித்து இஸ்மாயிலுக்கு கடிதம் அனுப்பியிருப்பதாகவும் அவர் கூறினார்.

செப்டம்பர் 13 அன்று, நிதிய மைச்சர் டெங்கு ஜஃப்ருல் அஜிஸ் மலேசியா பொருளாதார நெருக்கடியை அனுபவித்து வருகிறது என்ற கூற்றை நிராகரித்தார்.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது இந்த ஆண்டு கி1 இல் 5.0% மற்றும் கி2 இல் 8.9% நேர்மறையான வளர்ச்சியைக் கண்டதாக அவர் சுட்டிக்காட்டினார், மீட்பு விகிதத்தின் அடிப்படையில், மலேசியாவின் பொருளாதார வளர்ச்சி அதன் ஆரம்ப முன்னறிவிப்பை மீறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இருப்பினும், இன்று முன்னதாக, தேசிய மீட்பு கவுன்சில் தலைவர் முகைடின் யாசின், புத்ராஜெயாவின் பரிந்துரைகளை எடுத்துக்கொள்வதில் அல்லது செயல்படுத்துவதில் மெதுவாக உள்ளது என சாட்டினார்.

பொருளாதாரத்தை ஊக்குவிப்பதில் அரசாங்கத்தின் மெதுவான நடவடிக்கை மக்களுக்கு தீங்கு விளைவிக்கும் என்று முகைடின் கவலை தெரிவித்தார், உலகளவில் பல பொருளாதார வல்லுநர்கள் அடுத்த ஆண்டு உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியை முன்னறிவிப்பதாகக் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வணக்கம் மலேசியா

# ஜோகூரில் பள்ளிமாணவன்தலை கூம்பிந்துள் சிக்கியது!



ஜோகூர் பொந்தியானில் உள்ள ஒரு தொடக்கப் பள்ளியில் ஒரு ஆண் மாணவர் தலையில் கூம்பு சிக்கியதால் மிகுந்த சிரமத்துக்கு உள்ளானார். காலை அமர்வில் 10 வயது மாணவன் பள்ளிக்குச் சென்று விட்டு வீடு திரும்பவிருந்த வேளையில் இந்தச் சம்பவம் நடந்ததாகத் தெரிகிறது.

பொந்தியான் தீயணைப்பு மற்றும் மீட்பு நிலையம் (BBP) மூத்த தீயணைப்பு அதிகாரி செயல்பாட்டுத் தளபதி முகமட் எசல் அஸ்மா, மதியம் 1.28 மணிக்கு சம்பவம் தொடர்பாக அவசர அழைப்பு வந்ததாகத் தெரிவித்தார். ஆறு உறுப்பினர்களின் உதவியுடன் சிறப்பு உபகரணங்களைப் பயன்படுத்தி கூம்பு வெட்டப்பட்டு சுமார் 26 நிமிடங்களுக்குப் பிறகு அகற்றப்பட்டது என்று அவர் கூறினார்.

பள்ளி பகுதியில் மற்ற நண்பர்களுடன் விளையாடும் போது, பாதிக்கப்பட்டவர் தனது தலையில் ஒரு கூம்பை வைத்ததால் அது வெளியே வர முடியாமல் போனது என்று பெரித்தா ஹரியான் தெரிவித்திருந்தது.

# 50 சதவீதமான அரசு ஊழியர்களால் சொந்த வீடுகள் வாங்க முடியவில்லை

## கியூபாக்ஸ் தலைவர்

நாட்டில் உள்ள 1.62 மில்லியன் அரசு ஊழியர்களில் பாதி பேர் இன்னும் தங்கள் சொந்த வீடுகளை வாங்க முடியாமல் உள்ளனர், ஏனெனில் இந்த துறையின் குறைந்தபட்ச ஊதியம் தற்போதைய காலத்தில் பொருத்தமற்றது என்று சிவில் சேவை சங்கங்களின் தலைவர் இன்று தெரிவித்தார்.

தற்போதுள்ள குறைந்தபட்ச ஊதியம், மாதம் ஒன்றுக்கு 10,000 ரிங்கிட் குடும்ப வருமானம் என்ற இலக்கை அடைவது, அதே போல் 2025 ஆம் ஆண்டுக்குள் மலேசியாவை அதிக வருமானம் கொண்ட நாடாக மாற்றும் இலக்கையும் அடைய அரசாங்கத்திற்கு கடினமாக உள்ளது என க்யூபாக்ஸ் தலைவர் அட்னான் மாட் தெரிவித்தார்.

அரசு ஊழியர்கள் தங்களுடைய சொந்த வீடுகளை சொந்தமாக வைத்திருக்கவும், அவர்களின் குடும்பங்களின் போக்குவரத்து, கல்வி, சுகாதாரம் மற்றும் உணவுக்கான செலவினங்களை வழங்குவதற்கும் புதிய குறைந்தபட்ச ஊதியம் 1,800 ரிங்கிட்யை அவர் பரிந்துரைத்தார்.

எங்கள் சம்பளக் கணிப்புகள் அரசு ஊழியர்களை வீடு வாங்க தகுதியற்றவர்களாக ஆக்குகின்றன, குறிப்பாக பெரிய நகரங்களில். தகுதியானவர்களுக்கு, அவர்கள் வாங்கிய



வீடுகள் பல தசாப்தங்களாக தேய்ந்து வருகின்றன. பெரிய நகரங்களில் வசிக்கும் அவர்களில் சிலர் ஒரு அறையை வாடகைக்கு மட்டுமே வாங்க முடியும்.

முதல் வேலை நியமனத்திற்கான எங்களின் தற்போதைய குறைந்தபட்ச சம்பளம் 1,900 ரிங்கிட், நிலையான ஊதியங்கள் மற்றும் வாழ்க்கைச் செலவு சலுகைகளுடன் கலந்துள்ளது. ஆனால் இது இன்னும் வறுமைக் கோட்டு வருமானமாக 2,208 ரிங்கிட்டுடன் மிகக் குறைவாக உள்ளது. மலேசியப் பொதுச் சேவையாளர் வீட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட பெரும்பாலான வீடுகள் தங்களுக்குச் செல்ல முடியாதவை என்று அட்னான் கூறினார். தற்போதுள்ள குறைந்தபட்ச ஊதியத்தின் அடிப்படையில் அரசு ஊழியர்கள் தகுதிபெற போதுமான வீடுகள் இல்லை. கூடுதலாக, நீண்ட காலமாக வீடுகள் திட்டம் கைவிடப்பட்டிருந்தன, குறிப்பாக கிளந்தான் மற்றும் சரவாக்கில், அரசு ஊழியர்கள் வீட்டுக்கடன்களுக்கு நிதியளிப்பதற்கும் வீட்டு வாடகை செலுத்துவதற்கும் அதிக மாதச் செலவுகளைச் செய்ய வழிவகுத்தது.

பொதுத் துறை வீட்டுவசதி நிதி வாரியத்தால் கடன் அங்கீகரிக்கப்பட்டு முழுவதுமாக டெவலப்பருக்குச் செலுத்தப்பட்டாலும், வீடுகள் இன்னும் தயாராக இல்லை, அவற்றை ஆக்கிரமிக்க முடியவில்லை என்று கியூபாக்ஸ் நிறுவனத்திற்குப் பல புகார்கள் வந்துள்ளன. இன்னும் மோசமான விஷயம் என்னவென்றால், வீட்டுத் தூண்கள் மட்டுமே உள்ளது, ஆனால் ஒவ்வொரு மாதமும் அரசு ஊழியர்களின் சம்பளத்தில் பிடித்தம் செய்யப்படுகிறது.

எனவே, வீட்டுக் கடன் மற்றும் வீட்டு வாடகை ஆகிய இரண்டிலும் அரசு ஊழியர்கள் மாதாந்திர கட்டணம் சுமையாக இருக்கக்கூடாது என்பதற்காக இரண்டு வருட கால அவகாசத்தை நாங்கள் கோருகிறோம், என்று நேற்று நடந்த மலாக்கா கியூபாக்ஸ் பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு அவர் கூறினார்.

# தேசிய வங்கியில் ஏமாற்று மோசடி தடுப்பு மையம் ஒன்றை அமைக்க வேண்டும் பாஹ்மி அரசுக்கு வலியுறுத்தல்!

ஏமாற்றி மோசடி செய்பவர்கள் மற்றும் அவர்களின் இணையவழி செயல்பாடுகளை திறம்பட எதிர்க்க ஓர் கண்காணிப்பு மையத்தை தேசிய வங்கியில் நிறுவுமாறு பி.கே.ஆரின் பாஹ்மி அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

ணயவழியான மோசடிகளைக் கட்டுப்படுத்த பேங்க் நெகாரா மலேசியாவின் முயற்சிகளை அவர் வரவேற்கும் அதே வேளையில், அரசாங்கம் இன்னும் பலவற்றைச் செய்ய வேண்டும் என்று கூறினார்.

மோசடி தடுப்பு மையம் BNM ஐ அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும், மேலும் காவல்துறை, மலேசியாவில் உள்ள வங்கிகள் சங்கம், மலேசியன் கம்யூனிகேஷன்ஸ் மற்றும் மல்டிமீடியா கமிஷன், நிதிச் சேவைகளுக்கான ஓம்புட்ஸ்மேன் மற்றும் அட்டர்னி-ஜெனரல் அறைகள் உட்பட பல நிறுவனங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். என்று முகநூலில் பதிவிட்டுள்ளார்.

ஒவ்வொரு வருடமும் 20,000 பேர் மோசடிகளுக்கு பலியாகின்றனர், மொத்தமாக 660 மில்லியன் ரிங்கிட்டிற்கும் அதிகமான இழப்புகள் ஏற்படுவதாக அவர் கூறினார்.

இதனால் 60 மோசடியால் பாதிக்கப்பட்டவர்கள் ஒவ்வொரு நாளும் 2 மில்லியன் ரிங்கிட்டை இழக்கிறார்கள்.

நிதி பரிவர்த்தனைகளுக்கான 25,000 முதல் 100,000 ரிங்கிட் வரை அங்கீகரிக்கப்படும் ஆன்லைன் பரிவர்த்தனைகளுக்கான இழப்பு வரம்பை அரசாங்கம் திருத்த வேண்டும் அல்லது மாற்ற வேண்டும், இதனால் அதிக மோசடி பாதிக்கப்பட்டவர்கள் இழப்பீடு கோர முடியும்.

முழு அல்லது பகுதி இழப்பீடு வழங்குவதன் மூலம் மோசடி பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி உதவி வழங்க ஒரு மீட்பு நிதியும் உருவாக்கப்பட வேண்டும்.

மோசடி செய்பவர்களின் அழைப்பு மையங்கள் அல்லது குற்றச் செயல்கள் வெளிநாடுகளில் இருந்தால் அவர்களைக் கைது செய்து நாடு கடத்துவதற்கு ஆசியான் நாடுகள் மற்றும் இன்டர்போல் ஆகியவற்றின் ஒத்துழைப்பைப் பெறவும், மோசடி செய்பவர்களைத் தண்டிக்கவும் ஒரு உயர்மட்ட பணிக்குழு நிறுவப்பட வேண்டும் என்றும் அவர் பரிந்துரைத்தார்.

ஆசியான் நாடுகளுக்கிடையேயான பலதரப்பு உறவுகளும் ஒத்துழைப்பும் அந்தந்த நாடுகளின் இணைய பாதுகாப்பை மேம்படுத்தவும், அந்தப் பகுதிகளில் இணையவழி மோசடிகளை அகற்றவும் உதவும் என்று ஃபஹ்மி கூறினார்.

இணையவழி மோசடி செய்பவர்களுக்கு எதிரான போர் இப்போதுதான் தொடங்கியுள்ளது, அவர்கள் நீதிமன்றத்தில் வெற்றிகரமாக வழக்குத் தொடரப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் வரை அது முடிவடையாது என்று அவர் கூறினார்.

முன்னதாக, BNM ஒரு அறிக்கையை வெளியிட்டது, நிதி நிறுவனங்களுக்கு ஒரு முறை கடவுச்சொல் ஓடிபி அமைப்பிலிருந்து இணையவழி பரிவர்த்தனைகளுக்கான அங்கீகாரத்தின் மிகவும் பாதுகாப்பான வடிவங்களுக்கு மாற்றுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சொக்சோ பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு மக்களுக்கு வழங்கப்படும்; மனிதவள அமைச்சர் தெரிவிப்பு!







மக்கள் எதிர்நோக்கும் சொக்சோ பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுக் காணபடும் என்று மனிதவள அமைச்சர் டத்தோஸ்ரீ எம். சரவணன் தெரிவித்தார்.

உதவிதேவைப்படும் மக்களுக்கு உதவும் நோக்கில் மக்களுடனான சந்திப்பு ம.இ.கா தலைமையகத்தில் இன்று நடைபெற்ற சந்திப்பில் 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

குறிப்பாக சொக்சோ உதவிக்கு விண்ணப்பம் செய்து நிராகரிக்கப்பட்டவர் அதிகமானோர் இதில் கலந்து கொண்டனர்.


அவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதற்கு ஒரு சில காரணங்கள் முக்கிய அம்சங்களாக உள்ளது என அவர் மக்கள் சந்திப்பில் தெரிவித்தார்

இப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுக் காணப்படுவதுடன் வரும் காலத்தில் இதுபோன்ற பிரச்சினைகள் வராமல் இருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர் அவர் மேலும் தெரிவித்தார் .



# முதுமை எனும் பூங்காற்றில்.....

# செரிமானத்துக்கு இதமாகும் பருப்பு போண்டா சூப்







**உலகம்** முழுவதும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி' சர்வதேச முதியோர் தினம் கொண்டாடப்படுகின்றது.

எமது பாரம்பரியங்களையும், பண்பாட்டையும் பேணி எமக்கான தனி அடையாளத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் முதியோர்களுக்கான சிறப்புத் தினமாக அமுல்படுத்தி அவர்களை ஆராதிக்கிறோம்.

எம்மை விட பெரியோர்களை, மூத்தோரை இந்த ஒரு நாளில் மட்டுமா நினைவு கூற வேண்டும் எனச் சிலர் எண்ணலாம். அது அப்படியல்ல, அக்கறையின்றி பொதுப்படையாக இருப்பதைக் காட்டிலும் குறிப்பிட்ட நாளை எந்தவொரு செயல்பாட்டிற்குமென ஒதுக்குவது எமக்கான மீள் நினைவூட்டலாக அமையும். வருடத்தின் 365 நாட்களும் ஒரே விதமாக நேர அட்டவணையில் தொழில்படும் நாம், இந்த ஒரு நாளை எமக்காக இன்றி முதியவர்களுக்கென அர்ப்பணம் செய்கின்ற போது எம்மையும் புத்துணர்ச்சி பெறச் செய்யும் அதே வேளை பெரியோர்களை கனம் பண்ணும் விதமாகவும் அமையும்.

எமது வாழ்வின் அடிப்படை ஆதாரமாக இருப்பது குடும்பம். அந்தக் குடும்பத்தில் இருக்கும் முதியோர், பராமரிப்பினை வேண்டுகின்ற போது குடும்ப அங்கத்தவர்கள் என்ற முறையில் நாம் தயாராக இருக்க வேண்டும்.

இந்த பராமரிப்புகள் நிதி சார்,பொருளாதார அடிப்படையிலான பராமரிப்புகள் மாத்திரமல்ல மாறாக அவை உணர்ச்சிசார் மற்றும் உடல்சார் கவனப் பராமரிப்பு சம்பந்தப்பட்டதாகவும் இருக்கலாம்.

மூப்படைவது என்பது ஒரு வியாதியல்ல முதுமை என்பது எல்லோருக்கும் வரக்கூடிய ஒன்று ஆனால், முதுமையை எப்படி எதிர் கொள்கிறோம் என்பதில் தான் ஒவ்வொரு மனிதனும் வேறுபடுகிறான். மூப்படைதல் இது ஓர் உயிரியல் செயல் முறை நாம் விரும்பியோ, விரும்பாமலோ வந்து போகும். தோல் சுருக்கம், மறதி, பார்வை மங்குதல், கேட்கும் திறன் குறைபடுதல், உணர்வு சக்தி குறைவடைதல் போன்றவை முதுமைப் பருவத்தின் அறிகுறிகளாகும். எதிர் காலத்தில் அவர்களை விட மிக மோசமான நோய்த் தாக்கங்களுக்கு நாமும் ஆளாகலாம்.




காவோலை விழ குருத்தோலை சிரிக்குமாம்.

முதுமைக் கோட்பாடும் மரபணுக் கோட்பாடும் மனிதனின் படிமுறை வளர்ச்சி தான். சமீப காலங்களில் நம்மிடையே வாழ்பவர்கள் பலர் முதுமையை ஓர் சுமையாய் கருதுபவர்களாகவோ அல்லது சுற்றியிருப்பவர்களால் அப்படி ஒரு கருத்தை திணிக்கப் படுபவர்களாகவோ இருப்பதை காண முடிகிறது. உண்மை அது வல்ல, முதுமை ஒரு வரம்.

அது குறிப்பிட்ட சிலரைத் தவிர எல்லோருக்கும் வாய்க்காத அருள்.



முதுமை வாழ்க்கையை அனுபவம் உடையதாக ஆக்குகிறது. அதை சரியாக பயன்படுத்தும் போது வாழ்கை அழகாகிறது. நாம் வாழ்ந்த அடையாளத்தின் சாட்சி அது, நமது பேரப்பிள்ளைகளை அடுத்தவர்களிடம் அறிமுகப்படுத்தும் போது ஏற்படும் பெருமிதம் என்பது எனது வம்சம் தழைத்துள்ளது என்பதை காட்டும் அழகு முதுமையில் வாழ்பவர்களுக்குத் தான் அந்த அனுபவம் புரியும். முதியவர்கள் சாதித்ததை சந்ததிகளுக்கு விட்டுச் செல்லுங்கள். சாதிக்க துடிப்பவர்களுக்கு ஒரு ராஜபாட்டையை விரித்துச் செல்லுங்கள்.

## முதுமை எனும் பூங்காற்று

முதுமையில் உணவுத் தேவை மாறுபடும் எதையும் அளவோடு சாப்பிட வேண்டிய காலம்.

முதுமையில் நாக்கின் சுவை அரும் புகள் எண்ணிக்கையில் குறைந்து விடுகின்றன. சுவையை கட்டுப்படுத்தும் நரம்பு மையமும் தளர்ந்து விடுகிறது அதனால் உணவை சுவைத்து உண்ண முடிவதில்லை. முதியோர்கள் பயன் படுத்தும் மருந்துகளினாலும் பசி குறையலாம். வயதான காலத்தில் உண்ணும் அளவு குறைந்து விட்டதே என்று கவலைப்படத் தேவையில்லை குறைவான உணவாக இருந்தாலும் அது நிறைவான சத்துள்ள உணவாக இருக்க வேண்டும், இவற்றோடு உரசல் இல்லாத உறவுகளும் இருந்தால் மட்டுமே வயோதிக நோய்களை ஜெயிக்க முடியும். மூட்டு வலியும் தசை வலிகளும் வயோதிகத்தின் அடையாளங்கள், இவை வராமல் இருக்க அமில உணவுகளை தவிர்ப்பது நலம். முடிந்தவரை உணவை நன்றாக வேக வைத்து மசித்து சாப்பிடுவது நல்லது. அரிசி போல் இருக்கும் 'வெரைட்டி ரைஸ்' களை தவிர்க்கவும்.

உணவில் அதிகம் சேர்க்க வேண்டியவை என்ற பட்டியலில் புரதம் முதுமைக் காலத்தில் பருப்பு ஒரு சிறந்த உணவு மட்டுமல்ல அவசியமும் கூட, ஆகையால் தினசரி உணவில் கடலைப்பருப்பு, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாசிப்பருப்பு கொண்டைக்கடலையை சேர்க்கவும்.

பருப்பு வகைகள் சிலருக்கு மட்டுமே வாய்வுத் தொல்லை ஏற்படுத்தும்.

காளானும் ஒரு நல்ல சத்துள்ள உணவு இதில் புரதச் சத்து அதிகம் 100 கிராம் இறைச்சியில் 18% ,மீனில் 28% ஆனால் காளானில் 33% புரதச்சத்து உள்ளது அதேபோல சோயாவையும் அதிகம் உணவாக பயன் படுத்துவது நல்லது இதில் புரதச்சத்தோடு சண்ணாம்புச் சத்தும் இருக்கிறது. அடுத்து முட்டையின் மஞ்சள் கருவை நீக்கி விட்டு வெள்ளைக்கருவை உண்ணலாம். இதில் கொழுப்புச்சத்து இல்லாமல் புரதம் மட்டுமே கிடைக்கும்.

## சுண்ணாம்புச் சத்து

40 வயதுக்கு மேல் எலும்புகள் வலிமை இழக்கின்றன. லேசாக கீழே விழுந்தாலும் எலும்பு முறிவு ஏற்படலாம், அதைத் தவிர்க்க சுண்ணாம்பு சத்துள்ள உணவுகளை

சாப்பிட வேண்டும். பால், கேழ்வரகு,

முருங்கைக் கீரை, வெந்தயக் கீரை, அகத்திக் கீரை, கருவேப்பிலை, மீன், நண்டு, இறால், சுறா ஆகியவற்றில் சுண்ணாம்புச் சத்து நிறைய உள்ளது.

பால் ஒத்துக் கொள்ளாதவர்கள் தயிரை சேர்கவும்.

## நார்ச்சத்து

வயதான காலத்தில் மலச்சிக்கல் தவிர்க்க இயலாத ஒன்றாகும். அதைத் தவிர்க்க நார்ச்சத்து அதிகம் உட்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு கேழ்வரகு, சோளம், கீரை,வாழைத் தண்டு, முட்டை கோஸ், கோலிப்ளவர், புடலங்காய், பாகற்காய், பேரீச்சம்பழம் என பட்டியல் தொடர்கிறது.

முதியவர்களின் உணவு எளிதில் வாங்கிச் சமைத்திடவும், விரைவில் செமிக்கக் கூடியதாகவும், விலையில் சற்று மலிவாகவும் இருத்தல் மிகவும் நல்லது. சிரேஷ்ட பிரஜைகளும் முதுமையை சுமையாக நினைக்காமல் இன்று நடப்பதை மன நிறைவுடன் ஏற்றுக் கொள்வதும், நாளை பற்றிய பயமோ,கவலையோ இன்றி நம்பிக்கையுடன் எதிர் கொள்வதுமே மன ரீதியான விஷயங்களில் இருந்து இவர்களை மகிழ்ச்சியான பாதைக்கு அழைத்துச் செல்லும்.



'காலனே என் காலடியில் வாடா' உன்னை என் காலால் எட்டி உதைப்பேன் என்ற 'பாரதியின்' பாடல் வரிகளை அடிக்கடி மனதில் நினைத்துக் கொண்டால் மரண பயம் கூட மனதை வருத்தாது.

சிரேஷ்ட பிரஜைகளுக்கென விசேடமாக இந்த வார சமையல் குறிப்பு தொடர்கிறது.

## பருப்பு போண்டா சூப்
## போண்டாவுக்கு தேவையானவை

1 உழுந்து - 3/4 கப்
2 தேங்காய் துருவல் - 2 மே. க
3 பச்சை மிளகாய் - 4
4 கறிவேப்பிலை - சிலது
5உப்பு - தேவையான அளவு

## சூப் செய்யத் தேவையானவை

1 துவரம் பருப்பு - 3/4 கப்
2 பாசிப்பருப்பு - 2 மே. க
3 பச்சை மிளகாய் - 2
4 தக்களி - 1/2 வாசி
5 மஞ்சள் தூள் - 1/4 தே. க
6 உப்பு - தேவைக்கேற்ப
% எலுமிச்சை பழம் - சுவைக்கு
8 இஞ்சி - சிறிய துண்டு
9 சின்னச் சீரகம் - 1/2 தே . க
10 போண்டா பொரிக்க எண்ணெய்

## செய்முறை

உளுந்தை இரண்டு மணி நேரம் ஊற வைத்து அதனுடன் தேங்காய் துருவல், பச்சை மிளகாய், கறிவேப்பிலை சேர்த்து கெட்டியாக அரைத்து உப்பு சேர்த்து சூடான எண்ணெயில் சிறிய நெல்லிக்காய் போன்ற அளவுகளில் கிள்ளிப் போட்டு மொறு மொறுப்பாக பொரித்து எடுக்கவும்.

இனி சூப் செய்வோம் அதற்கு ஒரு பாத்திரத்தில் துவரம் பருப்பு, பாசிப்பருப்பை கழுவிப் போட்டு அதனுடன் தக்காளி மற்றும் பச்சை மிளகாய் சேர்த்து அவிய விட்டு,ஆற வைத்து அரைத்து எடுக்கவும். அதே பாத்திரத்தில் ஒரு தேக்கரண்டி எண்ணெய் விட்டு சூடாக்கி அதில் சீரகம் பொரிய விட்டு இஞ்சியை துருவிப்போட்டு,கறிவேப்பிலை நாலு இலைகளை வாசத்துக்கு உருவிப் போட்டு அதில் அரைத்து வைத்துள்ள பருப்புக் கலவையை விட்டு அதனுடன் தாராளமாக தண்ணீர் விடவும் கலவை சாம்பாறு போல் இல்லாமல் ரசம் போல இருக்கட்டும்.

இதனுடன் மஞ்சள் தூள் மற்றும் உப்பு சேர்த்து நன்கு கொதிக்க விட்டு அடுப்பை நிறுத்தி விட்டு தேசிப்பழத்தை லேசாக பிழிந்து விட சூப் ரெடி. பரிமாற ஒரு சூப் பௌிளில் தேவையான எண்ணிக்கையில் போண்டாக்களை போட்டு மேலால் சூப்பை தாராளமாக விட்டு விரும்பினால் வெட்டிய மல்லித்தழை தூவி சுடச்சுட குடிக்கலாம்.

சிரேஷ்ட பிரஜைகளுக்காகவே விசேடமாக மூன்று வகையான பருப்பு சேர்த்து செய்யப்பட்ட சூப் வகை ஒன்று. புரதச்சத்து மிகுந்ததோடு எளிதில் செரிக்கக் கூடிய உணவுத் தேர்வும் கூட.

உலகெங்கும் வாழும் சிரேஷ்ட பிரஜைகளுக்கு அன்பு வணக்கமும்

இனிய வாழ்த்துகளும்.






# சிறுவர்களின் வாழ்வுரிமை அடிப்படை உரிமையே!



புஸ்பராசா
கோபிகா

**"இன்றைய** சிறுவர்களே நாளைய தலைவர்கள்'' என்பார்கள். நாளைய உலகை ஆளவிருக்கும் அவர்களை இன்றைய சமூகம் பாதுகாக்க தவறி வருகின்றது என்பது மன வருத்தத்திற்குரிய விடயமே. கள்ளங்கபடமற்ற சிறார்களின் வாழ்க்கையை அத்தகைய கொடூர வஞ்சக எண்ணத்துடன் பாழாக்க துணிச்சல் கொண்ட கலிகாலத்தில் வாழும் அனைவரையும் தலைகுனிவை சந்திக்க வைக்கிறது என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஐக்கிய நாடுகள் சபையானது சிறுவர்களை மகிழ்விக்கும் நோக்கிலும் ,அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் நோக்கிலும் சர்வதேச ரீதியில் அக்டோபர் முதலாம் திகதி சிறுவர் தினமாக பிரகடனப்படுத்தியது. இதில் 1991ம் ஆண்டு இலங்கை நாடும் கைச்சாத்திட்டுள்ளது.

உலகில் வாழ்கின்ற மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் சிறுவர்களாக அடையாளப்படுத்தப் பட்டுள்ளனர். சர்வதேச ரீதியில் சிறுவர்களுக் குரிய உரிமைகளாக பல வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறான உரிமைகளில் பெரும்பாலானவை இன்றைய சமூகத்தில் அடி நிலைக் குத் தள்ளப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக,

**(1) பாலியல் வல்லுறவில் இருந்து பாதுகாக்கும் உரிமை.**
**(2)சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்குமான உரிமை.**
**(3) சித்திரவதை/குரூரமாக நடத்தல் போன்ற தண்டனைகளிலிருந்து தவிர்த்துக் கொள்ளும் உரிமை.**



என்பவற்றை குறிப்பிடலாம். இவ்வாறாக இன்றைய சமூகத்தில் இடம்பெறும் பல அநீதியான செயல்களால் சிறுவர்களின் வாழ்க்கை மட்டுமன்றி எதிர்கால உலகும் தான் பாதாளத்தை நோக்கிப் பயணிக்கிறது .

'விளையும் பயிரை முளையிலே தெரியும்' என்பார்கள். அவ்வாறாக நல்ல விளைச்சல் தர காத்திருக்கும் பயிர்களை பாதுகாக்கத்தவறின் எமது எதிர்காலம் என்னவாகும்?

**(1) சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல்.**
**(2) மோசமான வார்த்தைகளை அவர்களுக்கு எதிராக பாவித்தல்**
**(3) பாலியல் துஷ்பிரயோகம்**
**(4) சித்திரவதை**
**(5)இளவயதுத்திருமணம்**
**(6) போதைப் பொருள் கடத்தல்களுக்காக அவர்களை பாவித்தல்.**
**(7)கடத்தல்**
**(8) கொலை**
**(9) இணையத்திற்கு அடிமை**



என்றவாறாக பல்வேறு வன்முறைகளை அவர்கள் மேல் திணிப்பதன் காரணமாக அவர்களது உரிமைகள் பறி போய் பாதுகாப்பற்ற சூழலில் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள்.

அண்மைக் காலங்களில் சிறுவர் துஷ்பிரயோக வன்முறைச் சம்பவங்கள் அசுர வேகத்தில் அதிகரித்து வருவதை நாம் ஊடகங்கள் வாயிலாக அறிந்து கொண்டுள்ளோம் . நல்லது, கெட்டது எது என்று தெரியாத பிஞ்சு மனங்களில் ஆசைகளை விதைத்து அவர்களை தமது இச்சைக்குப் பயன்படுத்தி வருகின்றார்கள் . 4 வயது குழந்தைகளை கூட சீரழிக்கும் சமுதாயமல்லவா இது?

பாடசாலைக்கு பிள்ளைகளை தனியாக அனுப்ப முடியாது ,ஏதும் அவசர வேலைகளுக்காக செல்வதென்றால் கூட சிறிது நேரம் கூட பிள்ளைகளை வீட்டில் தனியாக விட்டுச் செல்லமுடியாது . இதையெல்லாம் தவிர தந்தை, சகோதரன் போன்றவர்களாலே சீரழிக்கப்பட்ட பிள்ளைகள் பற்றி அண்மைக் காலங்களில் அறிந்திருப்போம் . இந்த மனநிலை எப்படிப்பட்டது ?அவர்களிற்கு எந்தவிதமான தண்டனை கொடுத்தால் இந்த சமூகம் திருந்தும்.

இந்தக் கலிகாலத்தில் போதைப்பொருள் வியாபாரம் என்பது உச்சத்தை தொட்டு விட்டது என்று தான் கூற வேண்டும். என்னதான் நாட்டில் பாதுகாப்பு படைகள் எனக் கூறி பல இருந்தாலும் அவற்றையெல்லாம் தாண்டி அதன் பாவனை அதிகரித்து தான் செல்கிறது .அதிலும் பாடசாலை மாணவர்களை அதிகளவில் இதற்கு அடிமையாகிறார்கள் .பாடசாலைகளையும் ,தனியார் கல்வி நிலையங்களையும் அண்டிய பிரதேசங்களிலே இந்த வியாபார நடவடிக்கைகள் அதிகமாக இடம்பெற்று வருகிறது. இவ்வாறாக இந்த போதைப் பொருட்களுக்கு அடிமையாகியவர்கள் அவ்வளவு எளிதாக அதிலிருந்து மீண்டு வரவும் முடியாது .இதனால் எத்தனை உயிர்கள் காவு வாங்கப்பட்டன .



இவற்றிற்கு மேலதிகமாக சிறுவர்களை வேலைக்கு அமர்த்தி அவர்களது எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி வரும் சம்பவங்களும் இடம் பெற்ற வண்ணமே உள்ளன .இதற்கு குடும்ப சூழலும் ,வறுமையும் பிரதான காரணமாக இருந்தாலும் . பெற்றோர் தமது வறுமை நிலைக்காக பிள்ளைகளின் எதிர்காலத்தை வீணாக்குவது என்பது தவறானதொரு செயலே. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது தொடர்பாக எத்



தனை சட்டங்கள், சிறுவர்களை பாதுகாக்கும் அமைப்புகள் பல இருந்தாலும் கூட இன்றுவரை சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது முற்றாக நிறுத்த முடியவில்லை.

பிள்ளைகளின் எதிர்காலம் பிரகாசமானதாக இருக்க வேண்டும் என பாடசாலைக்கு அனுப்பினால் அங்கு கூட அவர்களது பாதுகாப்பு கேள்விக்குறியாகவே உள்ளது .

அனைத்து பாடசாலைகளிலும் அவ்வாறான தவறுகள் இடம் பெறுவதில்லை . ஒரு சில ஆசிரியர்கள் மாணவர்களிடம் தவறான முறையில் பழகுவதும், அவர்களை தண்டித்தல் என்ற பெயரில் சித்திரவதை செய்தலும் இடம்பெறுகிறது. இவற்றிற்கும் இன்றுவரை முடிவு கிடைக்கவில்லை .

இளவயது திருமணங்களும் சிறுவர்களின் உரிமைகளுக்கு சவாலாகவே உள்ளது. அறியா வயதில் எடுக்கும் சில முடிவுகளால் அவர்களது வாழ்க்கை தலைகீழாகி விடுகிறது .

15,16 வயதுகளிலேயே கர்ப்பந்தரித்து பின் குழந்தைகளை வளர்க்க முடியாது பெரும் சிரமத்திற்கு உள்ளாகும் நிலையும் ,அதிலும் பலர் பிறந்த குழந்தைகளை வீதிகளிலும் , குப்பைத் தொட்டிகளிலும் வீசி செய்வதையும் , இது போன்ற சூழ்நிலையில் பல சிசு மரணங்களும் பதிவாகி உள்ளது .

அது தவிர பாடசாலை மாணவர்கள் தற்போது இணையவழிக்கற்றலுக்காக தொலைபேசிகள், கணிணி என்பவற்றை பயன்படுத்தி வரும் நிலையில் அதை தவறான விடயங்களுக்கு பாவிக்கக் கூடிய நிலையும் ஏற்பட்டுள்ளது . இதனால் சமூகத்தில் பல அசம்பாவித செயல்கள் பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது .

அதுபோக இணையவழி விளையாட்டுக்களுக்கு அடிமையாகி அதிலிருந்து மீண்டு வர



முடியாது பல சிறுவர்கள் தற்கொலை செய்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன .

இது போன்று இன்றைய சமூகத்தில் பல்வேறு காரணிகளால் சிறுவர்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகி வரும் நிலையில். அவர்களை பாதுகாக்க வேண்டியது பெற்றோர்களின் கடமையே.

எந்நேரத்திலும் அவர்களை கண்காணித்து வருதல் வேண்டும் .

தவறு செய்கிறார்கள் என்று தெரிந்தால் உடனே அதை கண்டிக்க வேண்டும் . நல்லது, கெட்டது எதுவென அவர்களுக்கு புரியும்படி எடுத்துக் கூறுதல் வேண்டும் .அதற்காக தவறு செய்து விட்டார்கள் என்பதற்காக கடுமையாக அடித்து, துன்புறுத்தி ,கடும் வார்த்தைகளை பேசி அவர்கள் மனதை புண்படுத்துவது கூடாது . அவர்களின் வயதுக்கேற்ற முறையில் ஒவ்வொன்றையும் பக்குவமாக எடுத்துச் சொல்ல வேண்டும் . பாதுகாப்பு என்ற போர்வையில் அவர்களின் சுதந்திரத்தை பறிக்காது, அவர்களுக்கு பிடித்தவாறனதொரு அழகிய ,அன்பான சூழலை அமைத்துக்கொடுத்தால் நிச்சயம் அவர்கள் தவறான பாதையில் போவதை தடுக்கலாம்



.எவ்வாறான சவாலான சந்தர்ப்பத்தையும் சமாளித்து செல்லுமளவிற்கு அவர்களை மன உறுதி படைத்தவர்களாக வளர்க்க வேண்டும்.

அதே நேரத்தில், சிறுவர்களை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துபவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். அப்போதே அதே தவறை பிறர் செய்ய அஞ்சுவர். சட்டங்களை கடுமையாக்கி சிறுவர்களை பாதுகாப்போம்.

**'எதிர்காலத்தில் பிரகாசிக்க காத்திருக்கும் ஒளிவிளக்குகளுக்கு இன்று நாம் கலங்கரை விளக்காய் இருந்து வழிகாட்டுவோம்'**



# முதுமையில் வறுமை! தீர்வை தேடும் தேசமிது...



சந்திரசேகரம் சாரிஷா

**இலங்கை** வரலாற்றில் மிக மோசமான பொருளாதார வீழ்ச்சியை சந்தித்து வருகிறது.வெளிநாட்டு கையிருப்பு குறைந்து வருவதாலும், எரிபொருள், உணவு, சமையல் எரிவாயு, மருந்துகள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் உயர் பணவீக்க விகிதங்கள்,பல வருட நிதி முறைகேடுகள், மோசமான பொருளாதார முடிவுகள் [அதாவது, வரி குறைப்பு, இரசாயன உரம் இறக்குமதி மீதான திடீர் தடை] காரணமாகவும், 2019 இல் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல், கோவிட்-19 தொற்று, இவை இரண்டும் இலங்கையின் முக்கிய வருமானங்களில் ஒன்றான சுற்றுலாத் துறையை எதிர்மறையாகப் பாதித்தமை இதைவிட,ரஷ்யா - உக்ரைன் யுத்தம் இலங்கையின் நிலை




மையை மேலும் மோசமாக்கியது, எரிபொருள் பற்றாக்குறைமற்றும் மழையின்மை காரணமாக பல மின் உற்பத்தி நிலையங்கள் பாதிக்கப்பட்டுமின் நெருக்கடிக்கு வழிவகுத்தது போன்ற பலதரப்பட்ட காரணிகளால் வரலாறு காணாத பாரிய பொருளாதார வீழ்ச்சியில் எமது தேசம் வீழ்ந்துள்ளது.

தற்போதைய இந்தப் பொருளாதார நெருக்கடியானது இலங்கையில் உள்ள அனைத்து சமூகங்களையும் ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது, குறிப்பாக எம்முடைய சமூகத்திற்கு வழிகாட்டிகளாக உள்ள எமது முதியோர்களின் அன்றாட சமூக, பொருளாதார வாழ்க்கை நிலையும் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது.




நாட்டின் இந்த அசாதாரண சூழ்நிலையில், பல ஆண்டுகளாக குடும்பத்திற்கு தூண்களாக இருந்து பெரும் ஆதரவு தந்து வந்தவர்களில் பலர், இன்று பிள்ளைகளின் ஆதரவு இல்லாமல் பெரும் சிரமத்தில் இருக்கின்றார்கள். இவர்களில் ஒரு தொகுதியினர் நோய்களால் பாதிக்



கப்பட்டு அதன் செலவுகளை சமாளிக்க முடியாதவர்களாக காணப்படுகின்றனர். இன்னொரு தொகுதியினர் பிள்ளைகளை வெளிநாடு அனுப்பிவிட்டு தனிமையில் வாழ்பவர்களாக உள்ளனர். இத்தகையோர் சிறு உதவிக்குக் கூட யாருமின்றி சிரமப்படுகின்றனர். இன்னும் சிலர் பிந்திய திருமணப் பிள்ளைப்பேற்றின் காரணமாக வாழ்க்கை செலவுகளை சமாளிக்க முடியாது திண்டாடுகின்றனர். மேலும் சிலர் பிள்ளைகளால் பராமரிக்க முடியாது முதியோர் இல்லத்திற்கு அனுப்பப்படுகின்றனர்.

அரச உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் தங்கள் ஓய்வூதியத்தை பெற வருடாவருடம் உயிருடன் இருப்பதனை உறுதிசெய்ய வேண்டியவர்களாக உள்ளனர், அது மாத்திரமன்றி போக்குவரத்து மற்றும் அலுவலகங்களில் முதியவர்களுக்கு முன்னுரிமை என வார்த்தைகளால் சொல்லப்படுகின்ற போதும் அதனை நடைமுறைப்படுத்துவதில் உள்ள குறைபாடு காரணமாக முதியவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

நாட்டின் தற்போதையஅசாதாரண சூழ்நிலைகள் காரணமாக முதியவர்களின் சுகாதார பிரச்சினைகள் பெரும் சவாலாக உள்ளது. அத்தியாவசிய மருந்துகளிற்கான தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு போன்றவற்றினால் நல்வாழ்விற்காக

14 ஆம் பக்கம் பார்க்க...

> **முதியோர்கள் தமது தேவைகளை பல்வேறுபட்ட சிரமங்களின் மத்தியில் நிறைவேற்றுவதனை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. தமது உடல் இயலாமை காரணமாக 63.33 % மானோர் தமது தேவைகளை நிறைவேற்ற தமது பிள்ளைகளில் தங்கியிருக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. இருப்பினும் ஏனைய 36.66 % மானோர் தமது செயற்பாடுகளை தாமே மேற்கொள்கின்ற அளவிற்கு ஓரளவு ஆரோக்கியம் உடையவர்களாக காணப்படுகின்றனர். முதியோர்கள் பிறரில் தங்கியிருக்க வேண்டிய நிலை காரணமாக உளரீதியாக பாதிப்படைந்தவர்களாகவும் உள்ளனர்.**

**இலங்கையில் இந்த பொருளாதார நெருக்கடியின் மத்தியில் எமது முதியோர்கள் பெரும்பாலும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாதவர்களாகவே உள்ளனர். பொருளாதார வீழ்ச்சியால் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நலன்புரி நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வதில் உள்ள குறைபாடுகள் காரணமாக முதியோர்களின் நலன்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதைக் காணமுடிகின்றது.**




# முதுமையில் வறுமை! தீர்வை தேடும் தேசமிது...

உழைத்த முதியவர்கள் அடிப்படை சுகாதார வசதிகளுக்காக அவதிப்படும் நிலை காணப்படுகிறது.

முதியோர்களின் உடல்நிலையினையும் அவர்களின் செயற்பாடுகளையும் நோக்கின் இவர்கள் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, தொய்வு போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களாகவும் என்பு, மூட்டு போன்றவற்றின் தேய்மானங்களினால் உடலினுடைய இயக்கம் குறைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். இவற்றுடன் முதியோர்கள், தோல் சுருக்கமடைந்திருத்தல், எடை குறைவானவர்களாக இருத்தல், புலன்களில் குறைபாடுடையவர்களாக இருத்தல் போன்ற முதுமை வெளிப்பாடுகளைக் கொண்டவர்களாக இருப்பதனை காணக்கூடியதாக உள்ளது. இத்தகைய முதியோர்களிற்கு அவசியம் மருத்துவ உதவிகள் தேவை. ஆனால் நாட்டின் இப் போராட்ட சூழ்நிலையில் இவ் உதவிகளை பெற்றுக் கொள்வதில் அதிக சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மேலும் அவர்களின் ஓய்வூதியங்களை பொறுத்த வரை, ரூபாய் மதிப்பு வீழ்ச்சியால், அவர்கள் கடந்த ஆண்டு ஓய்வூதியமாக சம்பாதித்தது, குறைந்த பட்சம் அவர்களின் மருந்துகளை வாங்குவதற்கே போதுமானதாக இருந்திருக்கும், இப்போது மருந்துகளின் விலை இருமடங்காக அதிகரித்துள்ளதால், அது எதற்குமே போதுமானதாக இல்லை.இதனால் தற்போது ஓய்வூதியங்கள் பெருகிய முறையில் மதிப்பிழந்து வருகின்றன மற்றும் ஓய்வூதியத் தொகைகளிலும் அதிகரிப்பில்லை, எனவே அவர்களின் வாங்கும் திறன் வெகுவாகக் குறைக்கப்படுகிறது.

முதியோர்கள் தமது தேவைகளை பல்வேறுபட்ட சிரமங்களின் மத்தியில் நிறைவேற்றுவதனை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. தமது உடல் இயலாமை காரணமாக 63.33 % மானோர் தமது தேவைகளை நிறைவேற்ற தமது பிள்ளைகளில் தங்கியிருக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. இருப்பினும் ஏனைய 36.66 % மானோர் தமது செயற்பாடுகளை தாமே மேற்கொள்கின்ற அளவிற்கு ஓரளவு ஆரோக்கியம் உடையவர்களாக காணப்படுகின்றனர். முதியோர்கள் பிறரில் தங்கியிருக்க வேண்டிய நிலை காரணமாக உளரீதியாக பாதிப்படைந்தவர்களாகவும் உள்ளனர்.






மேலும், முதியோர் பராமரிப்பானது பின்தங்கியதாக இருப்பதனை அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. முதியோர்களின் பிள்ளைகள், வேலை மற்றும் வெளிச்செயற்பாடுகளுக்காகவும் வீட்டை விட்டு வெளியில் அதிக நேரம் செலவழிப்பதனால் முதியோர்களை பராமரிப்பதற்காக பிறரில் தங்கியிருக்க வேண்டிய நிலை காரணமாக உளரீதியாக பாதிப்படைந்தவர்களாக உள்ளனர்.

இதனால் இவர்கள் நோய் நிலையினை கவனிப்பது என்பது குறைவாக உள்ளது. அத்துடன் முதியோர்கள் தமது பிள்ளைகளை கஸ்டப்படுத்தக்கூடாது என்ற எண்ணத்தில் பிள்ளைகளிடம் நோய், இயலாமை பற்றி கூறாமல் உள்ளனர். இதனால் அவர்கள் ஆரோக்கியமானது நலிவுற்ற நிலையில் இருப்பதனை காணக்கூடியதாக உள்ளது. மேலும் பல வீடுகளில் பிள்ளைகள் வேலைகளிற்குச் சென்றால் வீட்டு வேலைகளுடன் சேர்த்து சிறு பிள்ளைகளையும் அவர்கள் தங்கள் உடல் பலவீனத்திற்கும் மத்தியில் பார்த்துக் கொள்ள வேண்டியுள்ளது.

இவைதவிர பல முதியோர்கள் தமது வாழ்க்கைக்காக ஏனையோரில் தங்கியிராமல் சுயமாக உழைத்து உண்பவர்களாகவும் உள்ளனர். ஆனால் அதிகரித்துக் கொண்டிருக்கும் வாழ்கைச் செலவினால் உடல் பலவீனங்கள் இருந்த போதிலும் வாழ்வதற்கு வருமானம் தேவைப்படுவதால், பணியை நிறுத்தி ஓய்வு எடுக்க முடியாத நிலையில் உள்ளனர்.மேலும் பலர் உண்பதற்கு கூட முடியாத நிலையில் தற்போது பெரும் அவதியுறுவதைக் காண முடிகிறது. மேலும் பலர் எரிபொருள் வரிசையிலும் உணவு, மருந்துப் பொருட்களிற்கான வரிசையிலும் நின்று பெரும் சிரமப்பட்டதும் பலர் இறந்ததும் அனைவரும் அறிந்ததே.

தற்போதைய சூழலில் வீட்டுப் பொருளாதாரம் சுருங்கி வருகிறது, எனவே மக்கள் தாங்கள் செலவழிக்கும் விஷயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கிறார்கள் . எனவே முதியோர்களிற்கான கவனிப்பு என்பது குறைந்து கொண்டே வருகிறது. இதனால் பல முதியோர்கள் கைவிடப்பட்டவர்களாக முதியோர் இல்லங்களிலும் பலர் அனாதைகளாக தெருக்களில் இரவல் பெறுவதையும் காணமுடிகிறது.

இலங்கையின் இந்த பொருளாதார நெருக்கடியின் மத்தியில் எமது முதியோர்கள் பெரும்பாலும் கவனத்தில் எடுத்துக் கொள்ள படாதவர்களாகவே உள்ளனர். பொருளாதார வீழ்ச்சியால் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நலன்புரி நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வதில் உள்ள குறைபாடுகள் காரணமாக முதியோர்களின் நலன்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதைக் காணமுடிகின்றது.

இந்த நிலையிலேயே இம் முதியோர் தினமானது, இக்கட்டான பொருளாதார நெருக்கடியின் மத்தியில் அவர்களுக்கான சமூக கட்டமைப்பை உருவாக்குவதல் , அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், உடல், உள ரீதியாக அவர்களை ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் வைத்திருத்தல் போன்றவற்றின் அவசியத்தினை உணர்த்துவதாக உள்ளது. அத்துடன் எமது சமுதாயத்தின் தூண்களாக இருந்து எம்மை வழிநடத்தும் எமது முதியோர்களை குழந்தைகளைப் போல பார்த்துக் கொள்ள வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் கடமையும் பொறுப்புமாகும் .






# பாழுங்கிணறுகளாகிறதா பள்ளிக்கூடங்கள்?

**கருவில் இருக்கும் பிள்ளைக்கு பாடசாலை தேடுவதோடு ஆரம்பிக்கிறது இந்தக் கட்டுரை..**



பிரியா இராமநாதன்

**கற்றலுக்கான** துடிப்புடன் இயங்கும் குழந்தையின் சின்னஞ்சிறு மூளை தனது சுற்றத்தின் ஒவ்வொரு அசைவில் இருந்தும் , ஒவ்வொரு ஒலியில் இருந்தும் கற்றுக்கொள்ள ஆரம்பிக்கிறது . இலை உதிர்வது , செடி துளிர்ப்பது , இசை ஒலிப்பது , பறவை பறப்பது போன்றனவும் குழந்தைகளுக்கான கல்விதான் . ஆனால் இன்றைய அவசரஅவசரமான உலக மாற்றம் குழந்தைகளை வேரோடு பிடுங்கி வகுப்பறைக்குள் நடுவதால்தான் அறிவு அதிவேகமாக வளர ஆரம்பிக்கும் என கனவு காணுகிறது என்றால் அதுதான் உண்மை ! கருவறையில் இருந்து வெளியேறியதுமே குடு குடுவென ஓடிச் சென்று பள்ளியில் உட்கார்ந்துகொள்ளும் அவசரம் குழந்தைகளுக்கு இருக்கிறதோ இல்லையோ பெற்றோர்களுக்கு அது இருக்கிறது . உலகமயமாதல் கல்வியினை இன்று ஓர் வர்த்தகமாக்கிவிட்டதால் எல்லோர்க்கும் கிடைக்கவேண்டிய பொதுக் கல்வியினை மறுக்கும் புதிய பாதைக்கு உலக அரசுகள் கையெழுத்திட ஆரம்பித்துள்ளன . மக்களின் கல்விக் கொள்கையினை தீர்மானிப்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசா ? இல்லை கல்வி வியாபாரிகளா ? என்ற கேள்வி எழுந்துள்ளது . கல்வி என்பது மனித வளத்தினை மேம்படுத்தி அதன்மூலம் சமூகத்தை ஒழுங்குபடுத்துவதாக இருக்கவேண்டும் இல்லையா ? ஆனால் , இன்றைய கல்விமுறையோ ஏற்றத் தாழ்வான சமூக பொருளாதார அமைப்பினை நியாயப்படுத்துவதாக உருவாகியிருக்கிறது . யதார்த்த வாழ்விலிருந்தும் சமூக அவலங்களில் இருந்தும் மாணவர்களை அந்நியப்படுத்துவதுடன் ,இன்றைய கல்வியானது சமூக பொருளாதார தரத்தில் முன்னேறியவர்களின் தனியுடமையாக மாறிவருகிறது என்பதினை நம்மில் எத்தனைபேர் ஏற்றுக்கொள்ள விழைகிறோம் ? அதிலும் தேர்வுகள் இருக்கின்றனவே. அந்தக் காலகட்டங்கள் எல்லாம் கத்திமேல் பயணத்தைப் போன்றவைதான். தேர்வுகளை எழுதித் தேர்வாவதுகூட பெரிய விஷயமல்ல. ஆனால், அந்தத் தேர்வு முடிவு வரும் நாளில் நாம் எந்த மாதிரியான மனஅழுத்தத்துக்குச் செல்வோம் என்பதை நிச்சயமாக வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாது. போதாக்குறைக்கு மற்றைய மாணவர்களின் பெறுபேறுகளுடனான ஒப்பீடுகள் ஒவ்வொரு குழந்தையின் கற்றல்திறனும் மாறுபாடுடையது. சிலர் படிப்பில் ஆர்வமுடையவராக இருக்கலாம். சிலர் ஓவியம், விளையாட்டு போன்ற துறைகளில் ஆர்வமாகவும், படிப்பில் சிறிது பின்தங்கியும் இருக்கலாம். இந்த மாணவர்களைப் படிப்பில் மற்ற மாணவர்களோடு ஒப்பிட்டுப் பேசும்போது அது அவர்களுக்குத் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தி ‘தான்’ எதற்குமே தகுதியானவர் இல்லை என்ற பிம்பத்தை ஏற்படுத்திவிடும். இதனால் அவர்கள் தங்கள் தனித்திறமையிலும் ஆர்வம் குறைந்து, குடும்பத்தினரிடமிருந்து விலகி இருக்கவும், சில நேரங்களில் வழிதவறிச் செல்லவும் வாய்ப்புள்ளது.

அதுமட்டுமன்றி , நம் கனவுகளை எல்லாம் அவர்கள் மேல் திணிக்க முயற்சிக்கின்றோம். நடன வகுப்புக்கு செல்லும் குழந்தையை தொலைக்காட்சி நடன நிகழ்வில் வெற்றி பெறவும், பாட்டு வகுப்பு செல்லும் குழந்தையை, அதுசார்ந்த போட்டிகளில் வெற்றி பெறவும் பயிற்றுவிக்கும் போது அது எப்படி ரசனையாகும். கலைகளை கலையாக உணர வைக்காமல் அதனை திணிப்பாக செய்யும் போது அதன் மீதான ரசனையை எப்படி வளர்த்தெடுக்க இயலும்? அத்தனை சிறப்பு வகுப்புகளுக்கும் அனுப்பி அவர்களின் மேல் சுமைகளை வைக்கும் சமூகமாக இருக்கிறோம்.



> குழந்தைத்தனத்தை தொலைக்க வைத்து, நாம் விரும்பிய படியே வார்த்தெடுக்கும் பொம்மைகளாக மாற்றியமைக்கிறோம். இதன் விளைவு வெறும் மனப்பாடக் கல்வி மட்டுமே கொண்ட குழந்தைகளாக வளர்கின்றனர். குழந்தை தன்மையைத் தவற விட்டு, குழந்தை பருவ விளையாட்டுகளை தொலைத்து விட்டு, விளையாட்டுகளில் மூழ்கி இருக்கும் இவர்களின் பால்யத்தை மீட்பது எவ்வாறு. அலைபேசி விளையாட்டுகளில் வெற்றியையே ருசித்த குழந்தைகளுக்கு தோல்விகளை பழகும் வாய்ப்புகள் இல்லை. தன்னம்பிக்கையை வளர்த்தெடுக்க பெற்றோர் தயாராய் இல்லை.



குழந்தைத்தனத்தை தொலைக்க வைத்து, நாம் விரும்பிய படியே வார்த்தெடுக்கும் பொம்மைகளாக மாற்றியமைக்கிறோம். இதன் விளைவு வெறும் மனப்பாடக் கல்வி மட்டுமே கொண்ட குழந்தைகளாக வளர்கின்றனர்.குழந்தை தன்மையைத் தவற விட்டு, குழந்தை பருவ விளையாட்டுகளை தொலைத்து விட்டு, விளையாட்டுகளில் மூழ்கி இருக்கும் இவர்களின் பால்யத்தை மீட்பது எவ்வாறு... அலைபேசி விளையாட்டுகளில் வெற்றியையே ருசித்த குழந்தைகளுக்கு தோல்விகளை பழகும் வாய்ப்புகள் இல்லை. தன்னம்பிக்கையை வளர்த்தெடுக்க பெற்றோர் தயாராய் இல்லை.

பள்ளியில் படித்துவரும் தங்களது குழந்தை மீது நம்பிக்கை கொண்டு அக்குழந்தையின் திறமைக்கு ஏற்ற படிப்பைத் தேர்வு செய்யும் மனப்பக்குவத்தை பல பெற்றோர்கள் வளர்த்துக் கொள்ளாத துரதிர்ஷ்டவசமான சூழலில் நம் சமூகம் இருந்து வருகிறது. பெற்றோர்களின் இம்மாதிரியான செயல்பாடே வளர்ந்து வரும் இளந்தலைமுறையினரின் முன்னேற்றத்திற்கான தடைகற்கள் என்பதை பல பெற்றோர்கள் உணர்ந்து கொள்ளாமல் புறந்தள்ளி விடுகின்றனர். அவர்களின் பார்வையில் அதிக வருமானம் சம்பாதிக்க வழிவகுக்கும் படிப்புதான் சிறந்தது என்றும் அம்மாதிரியான படிப்பில் தன் மகனையோ மகளையோ எப்படியாவது சேர்த்து விட வேண்டும் என்றும் பெரும்பாலான பெற்றோர்கள் முடிவெடுத்து அதை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளில் அதிக கவனம் செலுத்தி வருவதை காணமுடிகிறது.



# அந்திம காலத்தில் அன்பை நாடும் முதியோர்!




# கீழைத்தேயத்திலும் மேலைத்தேயத்திலும் முதியோர் பராமரிப்பு

கலாநிதி
சுகந்தி ரவீந்திரநாத்



**முதியோர்கள்** என்போர் யார்?என்று கேட்டால் வயதில், தோற்றத்தில் முதிர்ந்தவர்கள். ஆனால் மனதளவில் அவர்கள் குழந்தை பருவத்தையே இறுதி காலங்களில் தழுவுகின்றனர். முதியோர் மருத்துவமனையில் துணை மருத்துவராக நான் பணிபுரிவதாலும்,

இந்தியாவில் தமிழகத்தில், முதியோர் அறக்கட்டளையை நடத்தி வருவதாலும் எனது அனுபவத்தினை இக்கட்டுரையில் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

கீழைத்தேய, மேலைத்தேய நாடுகளில் முதியோர்கள் என்போர் பேதமில்லை. அனைவரும் சமமே. ஆனால் அவர்கள் வாழும் நாடுகளின் சமூக சூழல்கள், உடல்நிலை, மனநிலையை தீர்மானிக்கிறது எனலாம். கீழைத்தேய நாடுகளில் பார்க்கும்போது இந்தியா,இலங்கை நாடுகளை குறிப்பாக எடுத்துக்கொள்வோமேயானால், முதியோர்களின் எண்ணிக்கை 18–ஆம் நூற்றாண்டுகளில் ஆரோக்கியமான உடல்நிலையும், நோய் நொடியற்ற வாழ்க்கையையும் கொண்டிருந்ததாக காணப்பட்டது. இறுதிக் காலங்களில் தங்களது வேலைகளை தாங்களே பார்த்துக் கொண்டனர். அவர்கள் இறுதி காலங்களில் அவர்களது குழந்தைகளோடு சேர்ந்து வாழ்ந்தனர் . தனிமையை நாடிச் சென்றவர்களுக்கு ஆலயங்கள், மடங்கள் அவர்களுக்கான உணவு, உடை ,உறைவிடங்ளை ஏற்படுத்திக் கொடுத்தது. மருத்துவ வசதிகளும் அதிகளவு தேவைப்படவில்லை .இயற்கை சித்த ஆயுர்வேத மருத்துவங்களையே கையாண்டனர்.

19–ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு முதியோர்கள் இறப்பு விகிதம் அதிகரித்தது. 60–80 வயதிற்குள் இறந்து விடுகின்றனர். காரணம் ? மாசுபட்ட காற்று, கலப்பட உணவு போதிய பராமரிப்பின்மை, மருத்துவ வசதி, உணவு பற்றாக்குறை, பிள்ளைகளை விட்டு பிரிந்து



வாடும் மனவுளைச்சல், சூழ்நிலை, அதிக கவலை என முதியோர்களின் வாழ்க்கை முழுமையாக பாதித்து விட்டது என்றே கூறலாம். அரசு வேலையற்றோர் இறுதி காலகட்டத்தில் வாழ்வாதாரத்திற்கு போதிய பணம் இன்றி வாடுகின்றனர். பூர்வீக சொத்துக்களோ, குழந்தைகளின் உதவிகளோ இல்லாவிட்டால் அவர்கள் வாழ்க்கை தெருவோரங்களில் தான் என்று கூறலாம் .

இன்று இந்தியா போன்ற நாடுகளில் முதியோர் இல்லங்களின் எண்ணிக்கை %0 சதவீதமாக அதிகரித்துவிட்டது. குழந்தைகள் பொருளாதார வசதி இருந்தாலும் கூட தாங்கள் வெளிநாடுகளில் வசிப்பதாகவும் பணிக்குச் செல்வதால் அவர்களை தனிமையில் விட்டுச் செல்கின்றனர். இல்லாவிடில் கட்டணம் செலுத்தியாவது முதியோர் இல்லத்தில் விட்டு செல்கின்றனர். ஆனால் எந்த ஆதாரமும் இல்லாதோர் குடும்பத்தினரால் அவமதிக்கப்பட்டு , விரட்டியடிக்கப்பட்டு ,தெருவோரங்களில் பிச்சை எடுத்து அனாதையாக சாகும் நிலைதான் உள்ளது. இன்று தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் முன் வந்தாலும் அவர்களுக்கு போதுமான அளவு இடம், மருத்துவம் ,பணவசதி முழுமையாக கிடைப்பதில்லை . அதிலும் மாற்றுத்திறனாளிகள், மனநிலை பாதிக்கப்பட்டோர் ,தோல் வியாதிகளால் பாதிக்கப்பட்டோர் மிகவும் அவதியுறுகின்றனர் .இவர்களை பராமரிக்க பணியாட்கள் இணைப்பது மிகவும் அரிதாக உள்ளது .அரசின் பணியும் போதிய அளவு மக்களுக்கு சென்றடைவதில்லை.

கீழைத்தேய நாடுகளை பொறுத்தவரை முதியோர் இல்லம் என்றாலே ஆதரவற்றோர் என்றே பொருள் கொள்கின்றனர் . ஆனால் மேலைத்தேய நாடுகளில் அப்படியில்லை . குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் முதியோர்கள் எண்



ணிக்கை அதிகம். மேலும் அவர்கள் 70 முதல் 110 வயது வரை வாழும் திறன் பெற்றுள்ளனர் . அவர்களுக்கு தேவையான நல்ல ஆரோக்கியமான உணவு, உறைவிடம் ,உடை மருத்துவம் என அனைத்தும் எளிதாக கிடைக்கின்றது. இவர்கள் தங்களது பிள்ளைகளை எதிர்பார்த்து வாழும் சூழ்நிலை இல்லை. காரணம் அரசே பராமரிப்புச் செலவு முழுவதையும் ஏற்றுக் கொள்கின்றது .

வெளிநாட்டவர் தங்கள் இளமைக் காலங்களில் பணி செய்யும் போது அவர்களிடம் முதியோர் உதவி பணம் சம்பளத்தில் பிடித்தம் செய்து, இறுதிக்காலங்களில் திரும்ப வழங்கப்படுகிறது .

பணி இல்லாதவர்களும் கவலைப்படத் தேவையில்லை. அரசே அதன் பொறுப்பினை ஏற்கின்றது. மேலும் இவர்கள் முதியோர் இல்லங்களை இறுதி காலங்களில் உறைவிடமாக மட்டுமே நினைக்கின்றார்கள் . அவர்களது குடும்பத்தினரும் வாரம் ஒருமுறை பார்த்து விட்டு செல்கின்றனர். ஆகையினால் முதியோர்கள் வசதியாகவே மேலைத்தேய நாடுகளில் வாழ்கின்றனர் .

கீழைத்தேய நாடுகளில் பாசம் உண்டு, பணம் இல்லை . மேலைத்தேய நாடுகளில் பணம் உண்டு, பாசம் இல்லை என்று தான் என் அனுபவத்தில் நான் பார்த்தை வைத்து கூறவேண்டும் . மேலைத்தேய முதியோர் தனிமையில் பாசத்திற்கும், அன்பிற்காகவும் ஏங்கி வாழ்கின்றனர் . என்பதே உண்மை .

‘இன்றைய இளையோர் நாளைய முதியோர்.’ நம்மை உலகுக்கு அளித்த மூத்தோர், அவர்களே வணங்கும் தெய்வங்கள்.

**கீழைத்தேய நாடுகளை பொறுத்தவரை முதியோர் இல்லம் என்றாலே ஆதரவற்றோர் என்றே பொருள் கொள்கின்றனர் . ஆனால் மேலைத்தேய நாடுகளில் அப்படியில்லை . குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் முதியோர்கள் எண்ணிக்கை அதிகம். மேலும் அவர்கள் 70 முதல் 110 வயது வரை வாழும் திறன் பெற்றுள்ளனர் . அவர்களுக்கு தேவையான நல்ல ஆரோக்கியமான உணவு, உறைவிடம் ,உடை மருத்துவம் என அனைத்தும் எளிதாக கிடைக்கின்றது.**









# ஒருவேளை உணவுக்காய் ஓயாத போராட்டம்!

# இலங்கையில் அதிகரிக்கும் சிறுவர்களின் மந்தபோசனை



பி.மாணிக்கவாசகம்

**பொருளாதார** நெருக்கடி நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கையைப் புரட்டிப் போட்டிருக்கின்றது. வறிய மக்களோடு, வசதியுள்ளவர்களையும்கூட தடுமாறி தவிக்கச் செய்திருக்கின்றது. மக்களை உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் பாதித்திருக்கின்றது. எதிர்கால சந்ததியினருடைய உடல் உள வளர்ச்சியையும் ஆரோக்கியத்தையும் கேள்விக்கு உள்ளாக்கி இருக்கின்றது.

நாட்டில் அரசியலிலும் சாதாரண வாழ்க்கையிலும் பாதுகாப்பு என்பது அதிகமாக பேசப்பட்டிருக்கின்றது. ஆயுத முரண்பாட்டு காலம் தொடக்கம் தேசிய அரசியலிலும் பொது வாழ்க்கையிலும் அது முக்கிய பேசு பொருளாக இருந்து வருகின்றது. தேசிய பாதுகாப்பு குறித்து ஆட்சியாளர்கள் அதிகமாகப் பேசுகின்றனர். அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றார்கள். புதிய புதிய பாதுகாப்பு வலயங்களை உருவாக்குகின்ற நடவடிக்கைகளையும் அவர்கள் மெற்கொண்டிருக்கின்றனர்.




அதேவேளை, உணவுப் பாதுகாப்பு, சுகாதார வைத்திய பாதுகாப்பு போன்ற விடயங்கள் இந்த பொருளாதார நெருக்கடி நிலையில் புதிதாகத் தலையெடுத்திருக்கின்றன. தேசிய பாதுகாப்பு எந்த அளவுக்கு முக்கியமானதோ அதேபோன்று நாட்டு மக்களின் உணவுப் பாதுகாப்பும், சுகாதார வைத்திய பாதுகாப்பும் மிக மிக முக்கியமானது. உணவுப் பாதுகாப்பு சீரழியுமானால் நாட்டு மக்களின் வாழ்க்கையே கேள்வி குறிக்கு ஆளாகி விடும். அத்தகைய நிலைமையே இப்போது ஏற்பட்டிருக்கின்றது.

## பொருளாதாரமுடக்கம்

ஏற்றுமதி வர்த்தகம் நாட்டில் முடங்கிவிட்டது. அந்நியச் செலாவணியை ஈட்டித்தந்த உல்லாசப் பயணத்துறையும் வீழ்ச்சி அடைந்திருக்கின்றது. திறைசேரியில் பணமில்லை. கடன் சுமை அழுத்திக் கொண்டிருக்கின்றது. வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு வருமானமில்லை. மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு அவசியமான உணவு, மருந்து, எரிபொருள்



என்பவற்றை இறக்குமதி செய்வதற்கு கையில் டொலர்கள் இல்லை. நிலைமையைச் சமாளிப்பதற்காக காகித நோட்டுக்களை அச்சடித்தார்கள். உள்நாட்டுப் பொருள் உற்பத்தியை மிஞ்சிய பணப்புழக்கம் மித மிஞ்சிய பண வீக்கத்திற்கு வழி வகுத்துவிட்டது. இலங்கை நாணயமாகிய ரூபாவின் பெறுமதி பாதாளத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றது.

விவசாய உள்ளீட்டுப் பொருட்களின் தவறான இறக்குமதிக் கொள்கை விசாயத்துறையைப் பெரிதும் பாதித்துவிட்டது. பிரதான உணவாகிய அரிசி உற்பத்தி இதனால் குறைந்துள்ளது. எரிபொருள் பற்றாக்குறையினால் போதிய அளவில் மண்ணெண்ணெய் கிடைக்காத காரணத்தினால், மீன்பிடி தொழிலும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றது. மூலப்பொருள் பற்றாக்குறை காரணமாக கோழித்தீன், மாட்டுத் தீவனம் போன்றவற்றின் உற்பத்தி கணிசமான அளவில் குறைந்ததனால், கோழி முட்டை, கோழி இறைச்சி, மாட்டுப்பால் என்பவற்றின் உற்பத்திகளும் குறைந்துவிட்டன. விலைகளும் அதிகரித்திருக்கின்றன. அவற்றுக்கான தட்டுப்பாடும் தலையெடுத்திருக்கின்றது. இந்த நிலைமை அன்றாடத் தேவையான சம போஷாக்குள்ள உணவைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமைக்கு மக்களைத் தள்ளியுள்ளது.

இந்த ஆண்டின் ஆகஸ்ட் மாத பணவீக்கம் 70.2 வீதமாக அதிகரித்திருப்பதாக அரச தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்திருக்கின்றது. இதேவேளை ஜூலை மாதம் 82.5 சதவீதமாக இருந்த நாடடின் உணவுப் பணவீக்கம் ஆகஸ்ட் மாதத்தில் 84.6 வீதமாக அதிகரித்திருக்கின்றது என அந்தத் திணைக்களத்தின் அறிக்கை கூறுகின்றது. ஆனால் பிந்திய நிலைமைகளின்படி உணவுப் பணவீக்கமானது 93.% வீதமாக அதிகரித்திருப்பதாக மற்றொரு தகவல் தெரிவிக்கின்றது. போக்குவரத்துப் பணவீக்கம் மிக மோசமான நிலைமையாக 148.6வீதமாக அதிகரித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் புள்ளிவிபரங்கள் மக்களுடைய கொள்வனவு சக்தியில் ஏற்பட்டுள்ள சுமை அதிகரிப்பைச் சுட்டிக்காட்டுவதாக அமைந்திருக்கின்றன.

## வறுமையும் போஷாக்கின்மையும்

பணவீக்கம் அதிகரித்திருப்பதனால் நாட்டுப் பணத்தின் பெறுமதி வீழ்ச்சி அடைகின்றது. அதன் நேரடி விளைவாக பொருட்களின் விலைகள் கண்மண் தெரியாமல் அதிகரிக்க நேரிடுகின்றது. குறிப்பாக அதிக அளவில் மக்கள் கொள்வனவு செய்கின்ற உணவு, மருந்து மற்றும் எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலைகள் உயர்ந்திருக்கின்றன.

18 ஆம் பக்கம் பார்க்க...

**இலங்கையின் மொத்த சனத்தொகையில் 25 வீதமான மக்கள் சம போஷாக்குள்ள உணவைப் பெற முடியாத நிலையில் இருப்பதாக ஐ.நா. மன்றத்தின் அறிக்கையொன்று கூறுகின்றது. உலக சுகாதார நிறுவனத் தகவல்களின் படி 4 பேர் கொண்ட குடும்பம் ஒன்று சீவிப்பதற்கு மாதம் ஒன்றிற்கு ஒரு லட்சம் ரூபா பணம் தேவைப்படும் அளவுக்கு நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்திருக்கின்றது.**

# ஒருவேளை உணவுக்காய் ஓயாத போராட்டம்!

## இலங்கையில் அதிகரிக்கும் சிறுவர்களின் மந்தபோசனை

இதனால் மக்களின் பொருள் கொள்வனவு சக்தியின் மீது பாரிய அடி விழுந்துள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக தேசிய வருமானம் மட்டுமல்லாமல் தனிமனித வருமானமும், உழைப்புக்கான ஊதியமும் வீழ்ச்சி அடைந்திருக்கின்றது. இந்த நிலையில் அன்றாட உணவுப் பொருட்களை வாங்குவதற்குக் கையில் போதிய பணமின்றி மக்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகியிருக்கின்றார்கள். இது நாட்டின் வறுமை நிலைமையைப் பெரிதும் அதிகரித்திருக்கின்றது. இலங்கையின் மொத்த சனத்தொகையில் 25 வீதமான மக்கள் சம போஷாக்குள்ள உணவைப்  பெற முடியாத நிலையில் இருப்பதாக ஐநா மன்றத்தின் அறிக்கையொன்று கூறுகின்றது. உலக சுகாதார நிறுவனத் தகவல்களின்படி 4 பேர் கொண்ட குடும்பம் ஒன்று சீவிப்பதற்கு மாதம் ஒன்றிற்கு ஒரு லட்சம் ரூபா பணம் தேவைப்படும் அளவுக்கு




நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்திருக்கின்றது.

அதேவேளை பத்து குடும்பங்களுக்கு ஒன்று என்ற வீதத்தில் 6.26 மில்லியன் மக்கள் உணவுப் பாதுகாப்பின்மை நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். இவர்களில் 65 ஆயிரத்து 600 பேர் மிக மோசமான உணவு நெருக்கடி நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இதனால் மில்லியன் கணக்கான மக்கள் வறுமைக் கோட்டுக்குள் புதிதாகத் தள்ளப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தகைய வாழ்க்கை நெருக்கடி, அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவு, அதிகரித்துள்ள பணவீக்கம், உணவுப் பாதுகாப்பின்மை, அதிகரித்துச் செல்கின்ற வறுமை நிலைமை போன்றவை நாட்டில் உள்ள குழந்தைகள் சிறுவர்களைப் பெரிதும் பாதித்திருக்கின்றன. இலங்கையில் உள்ள 2.3 மில்லியன் சிறுவர்கள் அவசர மனிதாபிமான தேவைக்கு உட்பட்டிருக்கின்றார்கள் என்று ஐநா மன்றத்தின் சிறுவர் பாதுகாப்பு நிதியமாகிய யுனிசெவ் நிறுவனம் தெரிவித்திருக்கின்றது.

தற்போதைய நிலையில் ஒரு லட்சம் குடும்பங்கள் போஷாக்கின்மை நிலைமைக்கு ஆளாகியிருப்பதாகவும், இவற்றில் 75 ஆயிரம் குடும்பங்கள் பட்டினிச்சாவில் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்வதற்காகப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள் என்று தேசிய உணவுப் பாதுகாப்புக்கான ஜனாதிபதி குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். அதேவேளை 45 ஆயிரம் குடும்பங்களுக்குப் போஷாக்கு உணவு வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். ஆயினும் இது பாதிக்கப்பட்டவர்களுக்கு யானைப் பசிக்கு சோளப்பொறி போட்ட நிலையிலேயே உள்ளது. இந்த நிலையில் சிறுவர்கள் எந்த அளவில் போஷாக்கின்மைக்கும் போதிய உடல் உள வளர்ச்சியற்ற நிலைமைக்கும் தள்ளப்பட்டிருப்பார்கள் என்பதை அனுமானித்துக் கொள்ள முடியும்.





### சிறுவர்களுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்கள்

பொருளாதார நெருக்கடிக்கு முன்னர் நாட்டில் 42 வீதமான சிறுவர்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருந்தார்கள் என்று ஐநா மன்றம் தெரிவித்திருந்தது, பொருளாதார நெருக்கடியும் அதிகரித்துள்ள உணவுப் பாதுகாப்பின்மையும் யுனிசெவ் நிறுவனம் தெரிவித்திருப்பதைப் போன்று பெரும் எண்ணிக்கையிலான சிறுவர்களை உணவின்மை மற்றும் போஷாக்கின்மை என்ற மனிதாபிமான நெருக்கடிக்குள் தள்ளியிருக்கின்றன.

### உடல் வளர்ச்சியும் உள வளர்ச்சியும்

இயல்பான வளர்ச்சியும், உயரத்திற்கேற்ற நிறையும் இல்லாத குழந்தைகளும் சிறுவர்களும், உரிய உள வளர்ச்சியையும் பெற்றிருக்க மாட்டார்கள். குழந்தைகள் சிறுவர்களின் முறையான உடல் உள வளர்ச்சிக்குப் பெற்றோரின் ஆதரவும் அரவணைப்பும் அவசியம். பொருளாதார நெருக்கடி தொடர்பிலான பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ள பெற்றோர்களால் குழந்தைகளையும் சிறுவர்களையும் இயல்பாகக் கவனிக்க முடியாது. அத்தகைய பெற்றோரின் அன்பும் அரவணைப்பும் கிட்டாத போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்படுவார்கள். எத்தகைய கடினமான சூழலிலும் குழந்தைகளையும் சிறுவர்களையும் பாதுகாப்பாகப் பராமரிக்க வேண்யது பெற்றோர்களினதும், குறிப்பாக அரசாங்கத்தினதும் கடமையாகும். நாளைய சமூகத் தூண்களாக விளங்கப் போகின்ற தேசிய சொத்தாகிய சிறுவர்களின் நலன்களில் கூடுதல் அக்கறை செலுத்த வேண்டியது அரசாங்கத்தின் கட்டாயக் கடமை.

பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டில் பெரும் எண்ணிக்கையிலான சிறுவர்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருக்கின்ற போதிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசாங்கத்தின் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் இது குறித்து கவனம் செலுத்தப்படவில்லை. பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள சிறுவர்களின் போஷாக்கு நிலைமையை சீர் செய்வதற்கான நிதியொதுக்கீடு செய்யப்படவுமில்லை.

போதிய உடல் வளர்ச்சியும் நிறையும் கொண்டிராத சிறுவர்கள் உளவியல் ரீதியாக உரிய வளர்ச்சியைப் பெற்றிருப்பார்கள் என்று கூற முடியாது. உள வளர்ச்சிக்கு உடலின் இயல்பான வளர்ச்சியும் அவசியம் என சிறுவர் நலச் செயற்பாட்டாளர்கள் கூறுவர். பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்டுள்ள சிறுவர்களின் போஷாக்கின்மையும், மனிதாபிமான நெருக்கடி நிலையும் அவர்களது கல்வியில் மேலும் கடினமான நிலைமையையே ஏற்படுத்தி இருக்கின்றது. இது சிறுவர்களின் எதிர்காலத்திற்கு



நல்லதல்ல.

பொருளாதார நெருக்கடி காரணமாக முறையான உடல் வளர்ச்சியடையாத சிறுவர்கள் எதிர்கால ஆரோக்கியமான குடிமக்களாக உருவாகுவது கடினம். அதேவேளை உரிய கல்வியறிவை உரிய பருவத்தில் பெறாதவர்கள் ஆளுமையுள்ள குடிமக்களாக உருவாக முடியாது.

பொருளாதார நெருக்கடி காரணமாக சிறுவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கல்வி இழப்பு ஒரு முக்கிய பிர்சசினையாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றது. கொவிட் 19 நோய்ப் பேரிடர் சூழ்ந்ததனால் மாணவர்களின் கல்வியில் ஒரு தேக்க நிலைமை ஏற்பட்டது. அப்போது சிறுவர்களது கல்வி இழப்பு 54 வீதமாகக் கணக்கிடப்பட்டிருந்தது. பொருளாதார நெருக்கடி நிலைமைகள் காரணமாக சிறுவர்களின் கல்வி இழப்பு 88 வீதமாக இப்போது அதிகரித்திருக்கின்றது.

குடும்பங்களின் வருமானம் பாதிக்கப்பட்டிருக்கின்றது. வாழ்வாதார நிலைமைகள் நாளுக்கு நாள் மோசமடைந்து கொண்டிருக்கின்றன. குடும்பங்கள் தமது மூன்று நேர உணவு வேளைகளை இரண்டு நேரமாகக் குறைத்திருக்கின்றார்கள். மோசமான வறுமை நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ள குடும்பங்கள் ஒரு வேளை உணவை உட்கொள்ளும் நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் பாடசாலைகளில் இருந்து இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர். பாடசாலைகளில் வழங்கப்பட்ட போஷாக்கு நிறைந்த மதிய உணவு பொருளாதார நெருக்கடி காரணமாக நிறுத்தப்பட்டிருப்பதுவும் பின்தங்கிய பிரதேச மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லாமல் விடுவதற்கு முக்கிய காரணம் என கூறப்படுகின்றது.

பாடசாலைகளில் மதிய உணவு விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதனால், அதையே தமது மதிய உணவுக்கான ஆதாரமாகக் கொண்டுள்ள வறிய மாணவர்கள் பட்டினி நிலைமைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக யுனிசெவ் நிறுவனம் கூறியிருக்கின்றது. பாடசாலைகளில் வழங்கப்படுகின்ற மதிய உணவையே தமது ஒரு பிரதான உணவாகக் கொண்டிருந்த பத்து லட்சம் சிறுவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் யுனிசெவ் நிறுவனம் குறிப்பிட்டிருக்கின்றது.

பொருளாதார நெருக்கடிகளினால் குடும்பங்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. எண்ணற்ற குடும்பத் தலைவர்களும் குடும்பத் தலைவிகளும் பொருளாதாரப் பிரச்சினை காரணமாக தொழில்களை இழந்துள்ளார்கள். இத்தகைய குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் பெரும் எண்ணிக்கையில் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில்வாய்ப்புத் தேடிச் செல்லத் தலைப்பட்டிருக்கின்றார்கள். அரசாங்கமும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் தேடிச் செல்பவர்களை ஊக்குவித்திருககின்றது.

ஆனால் இளம் தாய்மார்களும், இரண்டு வயது மூன்று வயது குழந்தைகளைக் கொண்ட தாய்மார்களும் வெளிநாட்டு வேலை வாய்ப்புத் தேடிச் செல்வதனால் தாயின் அன்பையும்  அரவணைப்பையும் அந்தக் குழந்தைகள் இழந்துவிடுகின்றார்கள். அது மட்டுமல்லாமல் தந்தையின் அல்லது உறவினர்களின் பராமரிப்பில் வளர நேர்கின்ற அந்தக் குழந்தைகளும் சிறுவர் சிறுமியர்களும் பல்வேறு சமூகப் பிரச்சினைகளினால் பாதிப்புக்கு உள்ளாகின்ற ஆபத்தான நிலைமை உருவாகிவிடுகின்றது.

சிறுவர்களின் நலன்களை மேம்படுத்துவதற்காகவும், அவர்களின் நல்வாழ்க்கைக்கான விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காகவும் அனுட்டிக்கப்படுகின்ற சிறுவர் தின தருணத்தில் எதிர்காலம் கேள்விக் குறிக்கு உள்ளாக்கப்படுகின்ற சிறுவர்களின் நிலைமையை சிந்திப்பது கவலையளிப்பதாகவே உள்ளது.

“பொருளாதார நெருக்கடிகளினால் குடும்பங்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. எண்ணற்ற குடும்பத் தலைவர்களும் குடும்பத் தலைவிகளும் பொருளாதாரப் பிரச்சினை காரணமாக தொழில்களை இழந்துள்ளார்கள். இத்தகைய குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் பெரும் எண்ணிக்கையில் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில்வாய்ப்புத் தேடிச் செல்லத் தலைப்பட்டிருக்கின்றார்கள். அரசாங்கமும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் தேடிச் செல்பவர்களை ஊக்குவித்திருககின்றது.”

# அவுஸ்திரேலியாவும் நியூசிலாந்தும் குடியரசாக மலரும் காலம் கனிகிறதா?

**அண்மையிலே** மறைந்த எலிசபெத் மகாராணியார் ஐக்கிய இராச்சியம் உள்ளிட்ட சுமார் பதினைந்து வரையான நிலப்பகுதிகளுக்கு மகாராணியாகத் திகழ்ந்தவர். அவரது மறைவைத் தொடர்ந்து வம்ச உரித்தின் அடிப்படையில் மகாராணியாரின் மூத்த புதல்வன் மூன்றாம் சார்ல்ஸ் மன்னராக முடிசூடியுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டில் உலகச் சூழலில் மாற்றங்கள் ஏற்பட்டன. உலக மகாயுத்தங்கள் ஏற்பட்டன. புதிய சமன்பாடுகள் உருவாகின. அமெரிக்க – சோவியத் முறுகல் வலுவடைந்தது. அணிசேரா நாடுகள் என்னும் கோட்பாடு முகிழ்த்தது. காலனியாதிக்கத்தில் பலதேசங்கள் திணறின. இந்தியாவின் விடுதலை வேட்கை முன்னுதாரணமாகியது. ஒடுக்கப்பட்டோரின் சுதந்திர உணர்வுக்கு நாற்றுமேடையாகியது.

1950களில் ஆசிய–ஆபிரிக்க தேசங்கள் காலனித்துவத்திலிருந்து விடுதலையடைய ஆரம்பித்தன. அதனால், சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யம் என்று பெருமை பேசப்பட்ட பிரித்தானிய சாம்ராஜ்யம் சரிந்தது. முடியாட்சியின் பரப்புக்கள் வேகமாகச் சுருங்கின.

இருந்தபோதிலும், மகாராணியாருடனான மாண்பமை தொடர்பை சிலநாடுகள் கொண்டாடின. சுதந்திர நாடுகளாக பரிணமித்த பின்னரும்கூட, எலிசபெத் மகாராணியாரையே தம்முடைய தேசங்களுக்கும் மகாராணியாக்கிப் பெருமை கொண்டன.



நியூசிலாந்து சிற்சபேசன்

அந்தவகையிலே கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம். பிரித்தானியாவிலிருந்து குடியேறியோரே அங்கெல்லாம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தனர். அத்தகையதோர், சொந்தமண்ணுடன் தொடர்பைப் பேணிக் கொள்ள விரும்பியதில் ஆச்சரியமில்லை. அதனாலேயே, முடியாட்சியைக் கொண்டாடினார்கள்.

அதேவேளையில், பிரித்தானியாவின் மேலாண்மைக்கு உட்பட்ட தேசமாக இருந்திடவும் விரும்பவில்லை. அதனாலேயே, பரஸ்பர இணக்கப்பாட்டினூடாக படிப்படியான தன்னாட்சியுரிமையைப் பெற்றுக்கொண்டன. பங்கு முடியாட்சி என்னும் கோட்பாட்டையும் ஏற்படுத்திக்கொண்டன. அதன் பிரகாரம், எலிசபெத் மகாராணியாரே தனித்தனியே கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கும் மகாராணியானார்.

இவ்வாறாக முடியாட்சி மரபை வரித்துக் கொண்ட போதிலும், அதற்கு எதிர்ப்பு இல்லாமல் இல்லை.

1832ம் ஆண்டளவில் அவுஸ்திரேலியாவைக் குடியரசாக்கவேண்டும் என்னும் குரல் முதன்முதலில் ஒலித்தது. அவ்வாறு குடியரசுக்காக குரல் எழுப்பியவர் வேறு யாருமல்ல. பிரித்தானியாவிலிருந்து குற்றவாளிக் கப்பலில் கொண்டுவரப்பட்ட ஒருவரின் மகனாகும்.

பிரித்தானியா சிறைக்கூடங்களில் பதினெட்டாம் நூற்றாண்டிலே இடப்பற்றாக்குறை ஏற்பட்டது. அதனால் குற்றவாளிகளைக் கப்பலேற்றி காலனித்துவ நிலங்களுக்கு அனுப்புகின்ற வழமை ஏற்பட்டது. அந்த வகையிலே, அமெரிக்காவுக்கு குற்றவாளிகள் அனுப்பப்பட்டனர். அமெரிக்கப் புரட்சியுடன் அஃது தடைப்பட்டது. அதன்பின்னர், பிரித்தானியக் குற்றவாளிகள் அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பப்பட்டனர். அவ்வாறு அனுப்பப்பட்ட குற்றவாளியொருவரின் மகனே, பிற்காலத்தில் பிரித்தானிய முடியாட்சிக்கு எதிராக கங்காரு மண்ணில் முதலாவதாக குரல் எழுப்பியவராகும்.



அதன்பின்னர், அவுஸ்திரேலியாவிலே குடியரசுக் கோரிக்கை தொடர்ச்சியாக எழுந்தது. ஆனாலும்கூட, அஃது மகாராணிக்கு எதிரான குரலாக வெளிப்படவில்லை. மகாராணியாகப் பட்டம்சூட்டிக் கொண்டபின்னர் எலிசபெத் மகாராணி 1954ல் முதல்தடவையாக விஜயம் மேற்கொண்டபோது அவுஸ்திரேலியர்கள் பெருவாரியாகத் திரண்டனர். கனிவான வரவேற்பை வழங்கினார்கள்.

சர்வசன வாக்கெடுப்பொன்றை 1999ம் ஆண்டில் அவுஸ்திரேலியா நடாத்தியது. அதிலே தேசத்தை குடியரசாக மாற்றவேண்டுமா என்பது கேட்கப்பட்டது. அதனைப் பெரும்பான்மையோர் நிராகரித்தனர். இருந்தாலும், அவுஸ்திரேலியாவிலே குடியரசுக் கோரிக்கை உயிர்ப்புடனேயே காணப்படுகின்றது.

நியூசிலாந்தில், குடியரசு தொடர்பான கருத்தாடல்கள் உரத்த குரலில் நடைபெறுவதில்லை. குடியரசு வேண்டும் என்பவர்களுக்கும், வேண்டாம் என்று சொல்பவர்களுக்கும் இடையே யதார்த்தமான விட்டுகொடுத்தலுடனான புரிந்துணர்வு உண்டு. அதனாலேயே, விடயம் காதும் காதும் வைத்ததுபோன்று கையாளப்படுகின்றது. நியூசிலாந்து எழுதப்பட்ட அரசியல் சாசனத்தை கொண்ட தேசமல்ல. முக்கிய விடயங்களில் சர்வசன வாக்கெடுப்பு மூலமாக மக்களின் தீர்மானத்தை பெறுவது மரபாகும். அந்தவகையிலே, மக்களாட்சித் தத்துவம் நடைமுறையில் போற்றப்படுகின்றது.

> அவுஸ்திரேலியாவும் நியூசிலாந்தும் மதச்சார்பின்மையை வரித்துக்கொண்ட தேசங்களாகும். முடியாட்சியின் தலைமைப் பொறுப்பு வம்ச உரித்து வகையிலானதாகும். அவுஸ்திரேலியாவும் நியூசிலாந்தும் வம்ச உரித்து என்னும் கோட்பாட்டை நம்புவதில்லை. மாறாக, திறமை அடிப்படையிலேயே வாய்ப்புக்கள் வழங்கப்படவேண்டும் என்னும் நம்பிக்கையைக் கொண்டவையாகும். முடியாட்சி பாரம்பரியம் என்ற அடிப்படையிலானதாகும்.

முடியாட்சி மதம் சார்ந்தது. முடியாட்சியின் தலைமைப் பொறுப்பிலுள்ள மகாராணியே [தற்போது மன்னர்] இங்கிலாந்து திருச்சபையின் தலைமை பொறுப்பாளராகவும் அலங்கரிக்கின்றார். அவுஸ்திரேலியாவும் நியூசிலாந்தும் மதச்சார்பின்மையை வரித்துக்கொண்ட தேசங்களாகும்.

முடியாட்சியின் தலைமைப் பொறுப்பு வம்சஉரித்து வகையிலானதாகும்.

அவுஸ்திரேலியாவும் நியூசிலாந்தும் வம்ச உரித்து என்னும் கோட்பாட்டை நம்புவதில்லை. மாறாக, திறமை அடிப்படையிலேயே வாய்ப்புக்கள் வழங்கப்படவேண்டும் என்னும் நம்பிக்கையைக் கொண்டவையாகும். முடியாட்சி பாரம்பரியம் என்ற அடிப்படையிலானதாகும். அவுஸ்திரேலியாவும் நியூசிலாந்தும் பாரம்பரியம், மரபு என்பவற்றுள் சுருங்கிக்கொள்வதில்லை. புதுமையை விரும்புவன. இனம், மொழி, மதம், பாலினம் என்னும் வரையறைகளிலே முடங்காமல் சமத்துவத்தை தேடுவன.




ஆக, பிரித்தானியா முடியாட்சியின் குணாம்சங்களுக்கும், அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து தேசங்களின் குணாம்சங்களுக்கும் பாரிய வேறுபாடுகள் உள்ளன. அதனாலேயே, முடியாட்சியிலிருந்து விடுபட்டு தனித்துவமான தேசங்களாகவேண்டும் என்னும் வேட்கை புதிய தலைமுறையினரிடம் காணப்படுகின்றது.

பழைய தலைமுறையினருக்கு முடியாட்சியே தாய்மண்ணுடனான பிடிமானமாகும்.

புதிய தலைமுறையினருக்கு பிரித்தானியா மண்ணுடனான பிடிமானம் உணர்வுபூர்வமானதல்ல. அதனாலேயே, தனித்துவமான தேசத்தின் அடையாளத்தை விரும்புகின்றனர். கூடவே, பல்லினக் கலாச்சாரத்தை இயல்பாகவே வரித்துக் கொண்டுள்ளனனர்.

இத்தகையதொரு சூழலிலேயே, குடியரசுக் கோரிக்கையை ஆதரிப்பவர்களுக்கும், எதிர்ப்பவர்களுக்கும் இடையேயான வெளி சுருங்குகின்றது. அதனையே கருத்துக் கணிப்புக்கள் வெளிப்படுத்துகின்றன.

குடியரசுக் கோரிக்கையை ஆதரிப்பவர்களும், எதிர்ப்பவர்களும் ஒற்றைப் புள்ளியில் சந்திக்கின்றனர். எலிசபெத் மகாராணியை இரண்டு தரப்பினருமே நேசித்தனர். அதனால், மகராணியினுடைய காலத்துக்குப் பின்னர் குடியரசாகலாம் என்பதில் அனைவரிடமும் வார்த்தைகளில் வடிக்கப்படாத இணக்கப்பாடு உண்டு.

அதனாலேயே, அவுஸ்திரேலியாவும் நியூசிலாந்தும் குடியரசு நாடுகளாக மலரும் எதிர்காலத்தின் கதவை மகாராணியின் மறைவு திறந்திருப்பதாகக் கருதமுடிகின்றது.



உலகப்பலகணி



# நாற்றுகள்



## நாங்களும் படைப்பாளிகளே !

# சிறுவர் எம்மை பாதுகாத்திடுங்கள்



உலக சிறுவர்தினம் ஒக்டோபர் முதலாம் திகதி கொண்டாடப்படுகிறது.

அன்றைய தினம் மட்டுமே சிறுவர் எமக்கான அன்பும்,அரவணைப்பும்,பாதுகாப்பும் கிடைக்கிறது.மற்றைய நாட்களில் எம் பாதுகாப்பு கேள்விக்குறியாகவே உள்ளது. தனியாக பாடசாலையோ,அருகில் உள்ள கடைக்கோ செல்லமுடியவில்லை. அதுபோக,தனியாக எமது வீட்டில் கூட இருக்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.வஞ்சகம் அறியா சிறுவர் எம்மை வஞ்சக எண்ணத்துடன் பார்க்காதீர்கள். எம் வாழ்க்கையை பாழாக்கிவிடாதீர்கள். இந்த உலகின் எதிர்காலம் எமது கைகளிலே.

சிறுவர் பாதுகாப்பிற்காக குரல் கொடுங்கள்!

எம்மை பாதுகாத்திடுங்கள்.

**பு.பவஸ்ரினா**
**யா/அருணோதயா கல்லூரி.**







**ச.சதுர்ஷன்,**
**தரம் 2**

# எம் வழிகாட்டிகள்



பூமிக்கு புதிதாய் வந்த நாள்ஹ
கோபத்தில் கத்திப்பேசியறியோம்.
அவர்கள் அன்பு திகட்ட
திகட்ட கிடைக்கும்.

எம் தாத்தா,பாட்டி போல் எம்மை பேண
வேறு யார் வருவார்கள்?
வயது வந்துவிட்டது என
அவர்களை ஒதுக்காதீர்கள்.
நாம் வளர்ந்தது அவர்கள்
அன்பு,அரவணைப்பிலே!
அனைத்து தாத்தா,
பாட்டிக்கும் முதியோர்
தின வாழ்த்துக்கள்.



**ஶ்ரீ.சானுகா**
**யா / நடேஸ்வரா கல்லூரி**





**ரிஷாந்தன்**
**தரம் 10 மாத்தளை**






**யோ.பிரவீன்**
**யாழ் /யூனியன் கல்லூரி**

இன்றைய சிறுவர்கள் நாளைய சமுதாயத்தின் தலைவர்கள். வாழ்வில் சிறுவர் பருவம் என்பது ஒருமுறைதான். அதனை உள்ளங்கையில் இருக்கும் நீரைப் போன்று கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும். எமது வாழ்க்கையின் அடிப்படை ஆதாரங்களே சிறுவர்கள் தான். அவர்களின் மந்திரப் புன்னகைக்கு உள்ளத்தைக் கொள்ளையிடும் ஆற்றல் உண்டு. அப் புன்னகையின் மந்திரத்தால், சோகத்தில் வாடியவர்களைச் சுறுசுறுப்பாக ஆடவைக்கும் ஆற்றல் உண்டு.

சிறுபராயத்தில் தான் நண்பர்களுடன் ஆடிப்பாடி சுதந்திரமாகச் சுற்றித் திரிய முடியும். இவ்வளவற்றை அள்ளித்தரும் எமக்கு பெரியவர்கள் முறையானதும் சரியானதுமான எதிர்காலத்தைக் காண்பிக்க வேண்டும். எங்களது உரிமைகளை பாதுகாத்து, எங்களை நாங்களாக வாழவிட வேண்டும். எங்களுக்கான இந்த ஒரு தினத்தை எமக்காக ஒப்படைத்தால் தித்திப்பாகக் கொண்டாடுவோம்.



**பி. அக்ஷயா, மண்டூர்.**

இரவு வானம் பாலைப் போல நிலவு
வானில்பவணி வரப் போகுதுகோலக்க
டல் அலைக்கை தட்டிக் குதூகலித்துப்
போகுதுநீல வானம் கண் சிமிட்டி நின்று
பார்க்கப் போகுதுமாலை வேளை
மலர்ந்து கங்குல்மங்கை
தோன்றப் போகிறாள்

**ரூத் பொலின் பவள், தரம் 6, மாத்தளை**





# வாசகர் கணைகள்


**கடந்த வார இதழ்கள் பற்றிய வாசகர் கருத்துக்கள்**

தமிழருவி இதழில் வெளிவரும் கவிதா தேசம் என்ற பக்கமே என்னை கவர்ந்தது. பல சுவாரஸ்யமான தலைப்புக்களில் கவிதைகள் இடம்பெறுகின்றன.

**மு.சானுகா
காங்கேசன்துறை.**



தமிழின் தலைநிமிர்வாய் வெளிவரும் தமிழருவி என் அறிவுத் தேடலுக்கு விருந்தாகி வருகிறது. சிறந்த பல தகவல்களை சுமந்து வரும் தமிழருவியில், ‘சிரிக்க, சிந்திக்க, கடந்து போக’... என்கிற பகுதி எனக்கு மிகவும் பிடித்த ஒன்று. தமிழருவியின் இச் சிறந்த பணி மேலும் தொடரட்டும்...



**ர. கிருஜா,
மாவளையாறு,
மட்டக்களப்பு.**

பல்துறை சார் தகவல்களை களஞ்சியபடுத்தி வரும் தமிழருவி பத்திரிகையினால் சமகால விடயங்களையும் சுவையான கட்டுரைகளையும் பிரசுரிக்கின்றமைக்கு வாழ்த்துக்கள். இனிவரும் காலங்களில் மேன்மேலும் புத்தம் புதிய ஆக்கங்களையும் ஆர்வத்துடன் எதிர்பார்க்கிறேன். நன்றி.

**போகர் ஜென்சி,
ஜா- ஹல, நீர்கொழும்பு.**




தமிழருவி இதழிலே வாரந்தோறும் நான் தவறாது பார்ப்பது ‘தலைவாழை’ உண்மையிலே மிக அழகாகவும், தெளிவாகவும் சமையல் குறிப்புக்களை கூறிவருகிறார். அவரின் இந்த பயணம் தொடர வேண்டும். வாழ்த்துக்கள்.

**வ.தேனுசா,
காங்கேசன்துறை**




தமிழருவி இதழானது பல்சுவைக்கதம்பமாகவே திகழ்கிறது. எத்தனையோ பல புதிய,சுவாரஸ்யமான விடயங்களை கொண்டமைந்துள்ளது.வாசகர்களின் தேடல்கள் அனைத்திற்கும் தீனி போடும் வகையில் இந்த இதழ் அமைந்துள்ளது.

**ச.கிருபாகரன், மல்லாகம்.**





இந்த வார இதழில் வெளிவந்த ‘கேள்விக்கு உள்ளாகும் கேள்வி ஞானம்’ என்ற கட்டுரை மிகச்சிறப்பானதாக காணப்பட்டது. இதன்வாயிலாக புதிய பல விடயங்களை அறிந்து கொள்ள முடிந்தது.

**சி.கெனிசியா, அளவெட்டி**

தமிழருவி இதழின் வளர்ச்சியாக பல புதிய விடயங்களை கண்கூடாக காண முடிகிறது. பல நாட்டு அரசியலையும் ஒரே இடத்தில் பார்த்து தெளிந்து கொள்ள எமக்கு வாய்ப்பு கிடைத்தமைக்கு இந்த இதழே காரணம். வாழ்த்துக்கள்.

**சூ.தனுசியா, மாவிட்டபுரம்**




ஊடகத்துறையில் ஆர்வம் உள்ளவரா நீங்கள்?

அப்படியானால் தொடர்ந்து படியுங்கள்.
ஊடகத்துறையில் ஆர்வம் உள்ள இளம் – பயிற்சி ஊடகவியலாளர்களுக்கான களத்தை தமிழருவி திறந்துவைத்துள்ளது. தமிழருவியில் இணைந்து சிறந்த ஒரு ஊடகவியலாளராக வருவதற்கான வாய்ப்பு உங்களுக்குள்ளது. மாணவர்களும், இளைஞர்களும் உங்கள் சுய விபரக் கோவையுடன் விண்ணப்பிக்கலாம். குறிப்பாக பெண்கள் ஊக்குவிக்கப்படுவார்கள்.

மின்னஞ்சல்: aruvitamil812@gmail.com
வாட்ஸாப் இலக்கம்: 0094 768 320 733









# அன்புக்குரியவரின் உயிரை அப்லோட் செய்து...

## அப்லோட் திரைப்பட விமர்சனம்

**ரமணி – அவுஸ்திரேலியா**

**நேதன்** ப்ரவுண் ஒரு கணினி மென் பொருள் வல்லுனர். தனது காதலியை தன் தாயிற்கு வீட்டில் விருந்தில் அறிமுகப்படுத்துகிறார். தனது பெறாமகளுடன் சந்தோசமாக ஆடுகிறார். பின்னர் அவர் தனது தானியங்கி வண்டியில் (Self Driving Car) சென்று கொண்டிருக்கும் போது விபத்தில் சிக்கி இறக்கும் தருவாயில் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்படுகிறார். இறக்கும் தருவாயில் நேதனை பிரிய மனமில்லாத காதலி அவரின் உயிரை அப்லோட் [தரவேற்றம்] செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறார். நேதன் அதற்கு இசைந்து கையெழுத்து போடுகிறார். சற்று நேரத்தில் கண் விழித்து பார்க்கும் போது வைத்திய சாலையில் சாகும் தருவாயில் இருந்த நேதன் புது உலகில் கண்விழிக்கிறார். இறந்த பின் நேதன் விந்தையான புது உலகில் வாழும் வாழ்க்கை பற்றிய அமேசன் தளத்தில் அண்மையில் இரண்டாம் பாகம் வெளிவந்த தொடரே அப்லோட்.

அண்மையில் பேஸ்புக் தன் நிறுவனத்தின் பெயரை அண்மையில் மெட்டா என்று மாற்றி மெய் நிகர் உலகில் (Virtual World) சமூகவலைத் தளத்தை விரிவாக்குகிறது. அவ்வாறு ஒரு தொழில்நுட்ப நிறுவனம், ஒருவர் இறக்கும் தருவாயில் உணர்வுகளையும் உயிரையும் மெய் நிகர் உலகில் அனுப்பி அங்கு உல்லாசமான விடுதிகளில் வாழ வைக்கும் முயற்சியில் வெற்றி கண்ட நிறுவனம் ஒன்றின் செயற்பாடுகளை மையப்படுத்தியே கதை உருவாக்கப்பட்டுள்ளது.

அந்த லகிற்குள் புதிதாக வரும் வாடிக்கையாளரே கதாநாயகன் நாதன். அவரை அந்த உலகிற்குள் வழி நடத்தும் நிறுவனத்தின் வாடிக்கையாளர் சேவையாளாராக வலம் வருகிறார் கதாநாயகி நோரா. இவர்களிடையே பரிமாறப்படும் உணர்வுகள், ஏற்படும் அன்னியோன்யத்தில் மீதிக் கதை அழகாக நகர்ந்து செல்கிறது. அத்துடன் அவர்களுடன் சேர்ந்து பயணிக்கும் நிழல் உலக, மற்றும் நிஜ உலக கதாபாத்திரங்கள் தொடருக்கு உணர்வையும் , அழகையும், நகைச்சுவையையும், விறுவிறுப்பையும் கொடுக்கிறது. குறிப்பாக மெய் நிகர் உலகை நடாத்தும் செயற்கை நுண்ணறிவை [Artificial Intelligence] கதாபாத்திரமாக உருவகித்து அதன் பரிணாம வளர்ச்சியை காட்டியது புதிதாக உள்ளது.

இந்தத் தொடரின் கதைக்களம் 2030களில் நியு யோர்க் மாநகரில் நடப்பது போன்று உள்ளது. தானியங்கி வண்டிகள், மெய் நிகர் சந்திப்புகள், மெய் நிகர் செயலிகள், மரபணு மருத்துவம், பறக்கும் ட்ரோன்களில் வீடு தேடி வரும் பொருட்கள் என தற்போது கனவில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக நனவாகிக் கொண்டு இருக்கும் தொழில்நுட்பங்களின் வளர்ச்சியால் மனித வாழ்வில் ஏற்படும் மேம்பாடுகளை இத்தொடர் அழகாக காட்டுகிறது.

ஆயினும் தொழில்நுட்ப வளர்ச்சியால் சமூகத்தில் எதிர்மாறான விளைவுகளும் இந்தத் தொடர் கண்கூடாக காட்டுகிறது. குறிப்பாக தொழில்நுட்ப நிறுவனங்களின் அசுர வளர்ச்சியால் ஏற்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், மெய் நிகர் உலகிலும் பண வல்லமையே உங்கள் வாழ்க்கையின் சௌகரியங்களை தீர்மானிக்கிறது என்பதையும், நவீன தொழில்நுட்பங்களால் மற்றும் தனிமை காரணமாக ஏற்படும் உளவியல் பிரச்சினைகளையும் அலசிப் பார்க்கிறது அப்லோட் தொடர்.

தனி நபர் தொடர்பான தகவல்களின் உரிமை யாரிடம் இருக்க வேண்டும்? அது தரவுகளை உருவாக்கும் பயனுர்களுடையதா? இல்லை அதை பராமரிக்கும் நிறுவனங்களுக்கு சொந்தமானதா? என்று தரவு பாதுகாப்பு மற்றும் அதன் இரகசித்தன்மை பேணல் [Data protection and privacy] தொடர்பான விவாதத்தின் முக்கியத்துவத்தை நகைச்சுவையாக புரியும்படியாக பார்வையாளர்களுக்கு சொல்லுவது நோக்கத்தக்கது.

ஒரு நாணயத்திற்கு இருபக்கங்கள் உள்ளது போல அதீத தொழில் நுட்ப வளர்ச்சி ஒரு புறம் நடந்தால், மறு புறம் தொழில் நுட்பத்தை மறுத்து வாழும் ஒரு சமூகம் உருவாகலாம் என்று எதிர்காலத்தில் சமூத்தில் உருவாகக் கூடிய பல்வேறு பரிணாமங்களையும் காட்டுகிறது. அதன் காரணமாக சமூகத்தில் சலனங்கள் ஏற்படலாம் என்று கதை சொல்லுகிறது அப்லோட் தொடர்.

இந்தத் தொடரில் நோராவாக நடித்த அலி தன் கதாபாத்திரம் மூலம் அனைவர் உள்ளத்தையும் கவர்ந்துள்ளார். முதலாம் பாகத்திற்கு இரசிகர்கள் மத்தியில் பெற்ற வரவேற்பை விட இரண்டாம் பாகத்திற்கு வரவேற்பு குறைவாகவே இருந்தது என தொடரின் தீவிர இரசிகை ஒருவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் வாழ்க்கை எப்படி இருக்கும் கற்பனை பார்த்தது உண்டா? தொழில்நுட்ப வளர்ச்சியால் எதிர்காலத்தில் ஏற்படும் அனுகூலமான மற்றும் பிரதிகூலமான அம்சங்களையும், மனித உணர்வுகளில் அது ஏற்படுத்தப் போகும் தாக்கத்தையும் யோசித்து பார்த்தது உண்டா? அதனை பற்றி சுவாரியமான முறையில் அறிந்து கொள்ள அப்லோட் தொடரை பார்க்கலாமே...













துன்னையூர்
ராம் தேவலோகேஸ்வரக் குருக்கள்




சிரமங்கள் நிறைந்த வாரமாகும். பொறுமை,நிதானம் அவசியம்.குடும்பத்தில் சஞ்சலங்கள் ஏற்பட்டு மறையும்.கொடுக்கல்,வாங்கல்களில் கவனம் தேவை.பெண்களுக்கு சஞ்சல நிலை.மாணவர்கள் கல்வியில் முயற்சி தேவை.
அனுகூலமான நாள்- திங்கள்
அனுகூலமான திகதி- 01





எதிர்பார்ப்புக்கள் வெற்றி பெறும்.தொழில்சார் முன்னேற்றங்கள் சிறப்பாக இருக்கும்.பணவரவு திருப்திகரமாக இருக்கும்.குடும்ப நிலை அனுகூலமானதாக இருக்கும்.பெண்கள்,மாணவர்களுக்கு சிறப்பான பலன்.
அனுகூலமான நாள்-வெள்ளி
அனுகூலமான திகதி- 05




சிரமங்கள் நிறைந்த வாரமாகும்.பொறுமை,நிதானம் அவசியம்.உடல் நிலையில் கவனம் தேவை.பணவரவு திருப்திகரமானதாக இருக்கும்.பெண்களுக்கு சஞ்சலம். மாணவர்களுக்கு அனுகூலம்.
அனுகூலமான நாள்-புதன்
அனுகூலமான திகதி-01




கடகம் -சஞ்சலங்கள் நிறைந்த வாரமாகும். முயற்சிகளில் இழுபறி. பொறுமை,நிதானம் அவசியம்.வேலைப்பழு அதிகம்.மாணவர்களுக்கு முயற்சி தேவை.
அனுகூலமான நாள் - திங்கள்
அனுகூலமான திகதி-02




குடும்பத்தில் அனுகூலம்.பணவரவு திருப்தி.தொழில்சார் முன்னேற்றங்கள்.கொடுக்கல் வாங்கல்களில் நன்மை.
அனுகூலமான நாள்-வியாழன்.
அனுகூலமான திகதி-03




மிகச்சிறப்பான வாரமாகும்.தொழில்சார் முன்னேற்றங்கள் காணப்படும்.பணவரவு திருப்தி. முயற்சிகளில் வெற்றி.
அனுகூலமான நாள் -ஞாயிறு
அனுகூலமான திகதி-01




சஞ்சலங்கள் நிறைந்த வாரமாகும்.உடல் நிலை சார் உபாதைகள் ஏற்படும்.பொறுமை,நிதானம் அவசியம்.பணவரவு மத்திமம்.மாணவர்கள் முயற்சி தேவை.
அனுகூலமான நாள்- புதன்
அனுகூலமான திகதி-05




துலாம் -சிரமங்கள் காணப்படும்.எதிர்பாராத செலவுகள்.பணவரவு மத்திமம்.பெண்கள் ஓரளவு அனுகூலம்.மாணவர்கள் முயற்சி தேவை.
அனுகூலமான நாள்- வெள்ளி
அனுகூலமான திகதி 01




சிறப்பான,அனுகூலமான வாரமாகும்.தொழில்சார் முன்னேற்றம் காணப்படும்.பணவரவு திருப்தி.
அனுகூலமான நாள்-திங்கள்
அனுகூலமான திகதி-03




வேலைப்பழு அதிகமாயிருக்கும்.முயற்சிகள் வெற்றி பெறும். குடும்ப நிலையில் அனுகூலம்.பணவரவு திருப்தி.
அனுகூலமான நாள்- வியாழன்
அனுகூலமான திகதி-30




மிகச்சிறப்பான வாரமாகும்.முயற்சிகளில் வெற்றி.பணவரவு திருப்தி.குடும்ப நிலையில் மகிழ்ச்சி.
அனுகூலமான நாள்-ஞாயிறு
அனுகூலமான திகதி-04




சற்று சிரமங்கள் ஏற்படும்.பொறுமை,நிதானம் அவசியம்.குடும்பத்தில் மகிழ்ச்சி.பணவரவு மத்திமம்.பெண்களுக்கு சஞ்சல நிலை
அனுகூலமான நாள்-ஞாயிறு
அனுகூலமான திகதி-02

04 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## தேர்தல் வியூகத்தில் தேசிய பேரவை!

முடியும் என அவை நிபந்தனை விதிப்பதில் உள்ள நியாயத்தை புறக்கணித்துவிட முடியாது.

ரணில் விக்கிரமசிங்க தனி ஒருவராக இருக்கும் நிலையில் ஸ்திரத்தன்மையைப் பாதுகாப்பது கடினமானது. ராஜபக்ஷக்களின் பாராளுமன்றப் பெரும்பான்மையில்தான் ரணில் தங்கியிருக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகிவிட்டது. இதனையும் பெரும்பாலான மேற்கு நாடுகள் விரும்பவில்லை. எதிர்க்கட்சிகளை வெளியே ஆர்ப்பாட்டங்களைச் செய்வார்கள் மக்களைத் தூண்டிவிடுவார்கள் என்பது பொதுவான கருத்து.

குறிப்பாக, பொருளாதார நெருக்கடி என்ற நோய்கான மருந்து மிகவும் கசப்பானதாகத்தான் இருக்கும். வரிகள் அதிகரிக்கும், வற்வரி அதிகரிக்கும், இறக்குமதித் தீர்வை அதிகரிக்கும். இது போன்ற நிலைமைகளை ஏற்கனவே இலங்கை மக்கள் பார்க்கத் தொடங்கிவிட்டார்கள். இவ்வருட ஆரம்பத்தில் 65 ரூபாவுக்கு வற்பனையான பாண் இப்போது 200 ரூபாவை தாண்டிவிட்டது. விரைவில் 500 ரூபாவைத் தாண்டலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. பாண் மட்டுமல்ல அத்தியவசியப் பொருட்கள் அனைத்தினதும் விலைகள்





இவ்வாறு அதிகரிக்கின்றது. அதிகரிக்காமல் இருப்பது மாத வருமானம் ஒன்றுதான்.

அரகலய போராட்டத்துக்கு அடிப்படையாக இருந்த காரணங்களில் இந்த விலைவாசி உயா்வும் ஒன்று. இப்போது ஒரு நேர – இரு நேர உணவைத் தவித்துள்ள மக்கள் இந்த நிலையில் மீண்டும் வீதிக்கு இறங்குவது எதிர்பார்க்கக்கூடிய ஒன்றுதான். இவ்வாறான நிலையில், அதனை எதிர்க்கட்சிகள் பயன்படுத்தர முற்படுவார்கள். அவா்களது அரசியலுக்கு அதுதான் முதலீடு. அவா்கள் அதனைப் பயன்படுத்தாமல் தடுக்க வேண்டுமானால் அவா்களையும் அரசின் பங்காளிகளாக்கிவிட வேண்டும்.

அந்த உபாயத்துடன்தான் முதலில் சா்வ கட்சி அரசாங்கம் என ரணில் முயற்சிகளை முன்னெடுத்தார். அரசின் பங்காளிகளாகிவிட்டால் மக்களின் பிரச்சினைகளை வைத்து அரசியல் செய்ய முடியாது என்பது எதிர்க்கட்சிகளுக்குத் தெரியாததல்ல. அதனால், வேறு காரணங்களைச் சொல்ல அதனைத் தட்டிக்களித்தார்கள். அதனையடுத்து தேசிய அரசாங்கம் அமைக்கப்போவதாக ஜனாதிபதி முயற்சிகளை முன்னெடுத்தரார். அதுவும் தோல்வியடைந்தது. பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. என்பன அரசில் இணைந்து தமது எதிர்கால அரசியலை பாளாக்க விரும்பவில்லை.

இந்த நிலையில்தான் அடுத்த தெரிவாக தேசிய சபை ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளை ரணில் – ராஜபக்ஷ கூட்டணி முன்னெடுக்கின்றது. தேசிய சபையில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுக்கு மட்டுமே இடமளிக்கப்படும் என்பதால் அதுவும் மற்றொரு அமைச்சரவை போலவே இருக்கப்போகின்றது. பிரதான எதிர்க்கட்சிகளும், சிறுபான்மையினக் கட்சிகளும் இதனைப் புறக்கணிப்பது என்பதில் உறுதியாகவுள்ளன.

தேசிய பேரவைக்கான உறுப்பினர்களின் பெயா்கள் கடந்த 23 ஆம் திகதி சபாநாயகரால் அறிவிக்கப்பட்டது. தேசிய பேரவையில் இடம்பெறுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனை விதித்துள்ள நிலையில், தமது அனுமதியின்றியே பெயர் பிரேரிக்கப்பட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கட்சிகளின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் ராஜபக்ஷக்களின் ஆதரவுடன் மட்டும்தான் இந்த தேசியப் பேரவை இருக்கப்போகின்றது. அதாவது இது மற்றொரு அமைச்சரவை போலத்தான் இருக்கப்போகின்றது. ஏற்கனவே ராஜபக்ஷக்களின் அழுத்தங்களால் 38 பேருக்கு இராஜாங்க அமைச்சா் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் 12 எம்.பி.க்களுக்கு அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சா் பதவி வழங்கப்பட வேண்டும் என ராஜபக்ஷக்கள் அழுத்தம் கொடுக்கின்றார்கள். தற்போது பிலிப்பைன்ஸில் விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பு திரும்பிய பின்னா் எதிர்கொள்ளப்போகும் மிகப்பெரிய தலையிடி இது!

இந்தப் பின்னணியில் இந்த தேசிய பேரவை எதனைச் சாதிக்கப்போகின்றது? அல்லது அதனால் எதனைச் சாதிக்க முடியும்? யாருடைய நலன்களுக்காக இந்த தேசிய பேரவை அமைக்கப்படுகின்றது? இவைதான் மக்கள் மத்தியில் எழுகின்ற கேள்வி!

# சிரிக்க... சிந்திக்க...

## கடந்து போக....



